578

# பாரதமணி

விஷு ஆடி மீ

JULY 1941



578

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
24 SEP 1942
MADRAS

21.0079

விஜய அணு 4

THE BHARATA MANI, MADRAS.

EDITOR : K.S. VENKATA RAMANI.





# பா த் கே ட் ஸ்

"ஹா ம லி ஸ்"

# ஸ் நோ

விடாமல் உபயோகித்து வந்தால் சருமம் பட்டுப் போலாகும். மேனிக்கு சோபை அளிக்கும். எல்லா — பிரபல வியாபாரிகளிடமும் கிடைக்கும். —

# பாரதமணி

24

ஆசிரியர்: காரியாலயம்:
கா. சி. வேங்கடரமணி 12, பிருந்தாவனம் தெரு, மயிலாப்பூர், மதராஸ்.

வருஷ சந்தா { உள்நாடு ரூ. 3
வெளிநாடு ரூ. 5

| மாலை 6 | புதன் 16-7-41 விஷு௵ ஆடி௴ 1௳ | முத்து 1 |
|---|---|---|

## பொருள் அடக்கம்

| விஷயம் | | | | பக்கம் |
|---|---|---|---|---|
| ரஷ்யா-ஜெர்மனி | ... | ... | ஏ. ஜி. வெங்கடாச்சாரி பி. ஏ. | 2 |
| பட்டுவின் மணம் | ... | ... | கா. சி. வேங்கடரமணி | 8 |
| 'வளர்பிறை' | ... | ... | ரா. ஸ்ரீ. தேசிகன் எம். ஏ. | 17 |
| புண் ஆறினும் வடு மறையுமா? | | ... | ரா. சந்திரசுடன் பி. எஸ். ஸி. | 20 |
| சிறுகதையின் லக்ஷணம் | ... | ... | நா. ரகுநாதன் எம்.ஏ. பி.எல். | 24 |
| காரணம் ஒன்றே | ... | ... | "விஜயலக்ஷ்மி" | 27 |
| சாந்தியற்ற இரவு | ... | ... | மு. நா. சுப்பிரமணியன் | 37 |
| அனுராசபுரம் | ... | ... | அ. வி. மயில்வாகனம் | 41 |
| ஸ்ரீ அரியநாயகம் | ... | ... | சோ. சி. | 44 |
| நவீன நாகரீகம் | ... | ... | ஜி. பாலசுப்பிரமணியம் | 48 |
| பசு வளர்த்தல் | ... | ... | எம். எஸ். ராமச்சந்திர ஐயர் | 50 |
| விகட கவி | ... | ... | பெ. நா. அப்புஸ்வாமி பி.ஏ. பி.எல். | 51 |
| ஸ்வேதாரண்ய ஆச்ரம பாலபாடம் II | ... | | கா. சி. வேங்கடரமணி | 52 |
| இந்திய ஊழியர் சங்கம், பூனா | | ... | | 54 |
| நேஷனல் இன்ஷ்யூரென்ஸ் ... | | ... | | 56 |

"பாரத மணியில் வெளியாகும் கட்டுரைகள், கதைகளில் குறிப்பிடும் பெயர்கள் எல்லாம் கற்பனைப் பெயர்கள்; ஒருவரையும் குறிப்பிடுவனவல்ல.

2|0079

# ரஷ்யா-ஜெர்மனி

[ஏ. ஜி. வேங்கடாச்சாரி பி.ஏ.]

ஹிட்லரின் உலக ஆதிக்கக் கனவு பலிப்பதற்கு இடையூறாக இன்று அண்ணாந்து நின்று உலக சரித்திரத்திலேயே எக்காலத்திலும் கண்டிராத மாபெரும் போராட்டத்தில் ஈடுபட் டிருக்கிறது ஸோவியத் யூனியன். உலகமெங்கும் உணர்ச்சியுள்ள பாட்டாளி மக்கள் தங்கள் தாயகம் என்று கருதும் ஸோவியத் யூனியன் உலகத்தின் நிலப்பரப்பில் ஆறில் ஒரு பங்கு இருக்கிறது. 16 கோடி மக்கள் அதில் வசிக்கின்றனர். ஆனால் அதன் பூகோள அமைப்போ, இயற்கை வசதிகளோ பெரிய ஜனத் தொகையோ அது பெற்றுள்ள நன்மதிப்புக்குக் காரணமல்ல. உலகம் எங்கும் பசியும் பிணியும் அகன்று சமுதாய நெறி நிலைக்கவேண்டும் என்ற அவாவுடன், எண்ணற்ற இன்னல்களிடையே, இடைவிடாமல் முயற்சித்து வரும் பாட்டாளி மக்களுக்கு நம்பிக்கையையும் ஊக்கத்தையும் அளித்து ஒரு உதாரணமாக இருந்துவருகிறது ஸோவியத் யூனியன். ஒரு சிலர் உலகத்தின் செல்வங்களையும், உற்பத்தி சாதனங்களையும் விநியோக வசதிகளையும் தம் ஏக போகமாக அனுபவித்து, அந்த அனுபோகத்தை அரசியல் அதிகாரத்தின்மூலமும், ஆயுத பலத்தின்மூலமும் அவசியமானால் யுத்தங்களின்மூலமும் காப்பாற்றிக்கொண்டுவருவதுதான் இப்போதைய சமுதாய அமைப்பில் நியாயமானது என்று ஆளும் வர்க்கத்தினரால் கருதப்படுவது. இந்த ஒரு சில பரசிரம ஜீவிகள்தான் உலகமெங்கும் பெரும்பான்மை மக்கள் சந்தோஷத்தையும் சௌக்யத்தையும் அனுபவிக்க முடியாமல் செய்கிறார்கள். அவர்கள் அனுஷ்டித்துவரும் முறைகளும் உபாயங்களுந்தான் பசியையும் பிணியையும் பரப்பி, பெரும்பான்மை மக்களை நடைப்பிணங்களாக்கி, அவ்வப்பொழுது யத்தங்களும், பஞ்சம்போன்ற நெருக்கடிகளும் வரும்படி செய்கின்றன. முதலாளித்வம் (Capitalism) என்ற பெயருடன் விளங்கும் இந்த ஏற்பாட்டை வேரறுத்து விட்டால், உலகம் பூராவின் வசதிகளையும் செல்வத்தையும் மனிதவர்க்கம் பூராவுமே நிறம், ஜாதி, மதம்போன்ற வேற்றுமைகள் இல்லாமல் அனுபவிக்கமுடியும் என்ற கொள்கைதான் 'ஸோஷலிஸம்' (Socialism) அல்லது அதன் லட்சிய நிலைமையான 'பொதுவுடைமை' (Communism) எனப்படுவதை குறிப்பிடுகிறது. இது வெறும் மனோபீஷ்டம் மட்டுமல்ல, உண்மையிலேயே நடத்திவைக்கக் கூடியது தான் என்று உலகிற்கு பிரத்தியட்சமாய் எடுத்துக்காட்டியது ஸோவியத் யூனியன். பழைய சுரண்டல் சகாப்தம் முடிந்து, 1917-ல் புரட்சி ஏற்பட்டபோது, நமது தமிழ்நாட்டு கவிச் சக்கரவர்த்தி பாரதியார் கிருதயுகம் வந்து விட்டதாக கோலாகலத்துடன் பாடினார். அத்தகைய நெறி இந்தியாவையும் ஆட்கொள்ள வேண்டுமெனக் கருதினார். "இனி ஒரு விதி செய்வோம். அதை எந்த நாளும் காப்போம். தனி ஒருவனுக்கு உணவில்லை எனில் ஜகத்தினை அழித்திடுவோம்" என்று வீரகர்ஜனை செய்தார். அவர் தூர திருஷ்டியுடைய மகான். முதலாளித்வ உலகம் பூராவும், தங்கள் கொள்கையை பலமாய் அறை கூவி அழைக்க முற்பட்ட ஸோவியத் யூனியன்மீது 1921-ல் கூட கடுஞ்சமர் புரிந்தன. அப்பொழுதே, மேல்நாட்டு மேதாவிகள் பலர் அரசியல் அறிவிலிகளா யிருந்தபொழுதே, ரஷ்யாவில் ஒரு புதிய நாகரிகம் உதயமா யிருப்பதாக பாரதி கண்டு மனமகிழ்ந்தார். இது புது நாகரிகந்தான் என்பதை மிதவாதப் போக்குள்ள வெப் தம்பதிகள் உலகமறியக் கூறிவிட்டார்கள். இந்த நாகரிகத்தை வேருடன் களைந்துவிட்டு முதலாளித்வம் மீண்டும் நிலை நாட்டுவதற்கு தொடர்ச்சி

யாகவே பல்வேறு தேசங்களில் பல்வேறு வகைகளில் முயற்சிகள் நடந்து வந்திருக்கின்றன. பெரிய வல்லரசுகளும் சிறிய வல்லரசுகளும் மதத்தின் பெயரால் பிரகாசிக்கிறவர்களும், 'பழைய வழி,' என்று சொல்லிக்கொண்டு பிற்போக்கை அரியாசனத்தில் அமர்த்த விரும்புகிறவர்களும் சென்ற கால் நூற்றாண்டுகளாக ஸோவியத் யூனியனுக்கு எதிராக செய்து வந்த சூழ்ச்சிகள் எண்ணற்றவை. வர்த்தக பகிஷ்காரம், மருந்து வசதிகள் தராமல் லக்ஷக் கணக்கில் மக்களை மடிய விடுவது, உதவியளிப்பதற்காக என்று அங்கே போய் வேர்க்கரையான் போல நாசகார வேலைகளைச் செய்வது—இவை போன்ற மலைபோல் வந்த பல இடுக்கண்களை மீறி ரஷ்யா அறநெறியை அடிப்படையாகக் கொண்டு சமூகத்தை உலகின் ஆறிலொரு பாகத்தில் நிலை நிறுத்திவிட்டது. இந்த முயற்சிகளெல்லாம் பலிக்காமற் போனதால், ராணுவ பலத்தின் மூலம் ஸோவியத் யூனியனை அழித்து விடுவதற்கு வேண்டிய பக்குவமான நிலைமைகளை சிருஷ்டிப்பதில் உலகமெங்குமுள்ள முதலாளிகள் தத்தம் தேசத்தின் அதிகார வர்க்கத்தினர் மூலம் இடைவிடாமல் முயன்று வந்ததாக ஸோவியத் மக்களுக்கும் தலைவர்களுக்கும் புலப்பட்டது. இது வீண்காபுராவல்ல. இதற்கு சரித்திர பூர்வமான அத்தாட்சிகள் இருக்கின்றன. இந்த நிலைமையில் உலகம் பூராவிலும் அதிகாரம் வகிக்கும் பரசிரம ஜீவிகளின் முயற்சிகளை எதிர்த்து போர் புரிந்தாக வேண்டிய நிலைமை வரலாம் என்று கருதி, அதற்கு வேண்டிய ப்ரயத்தனங்களையெல்லாம் ஸ்டாலினும் அவருடைய சகாக்களும் குறைந்தது சென்ற பத்து வருஷங்களாகவாவது மும்முரமாகச் செய்துவந்திருக்கின்றனர். உலகிலேயே மிகப் பெரிய சைன்யத்தையும் விமானப் படையையும் தயாரிப்பதென திடங்கொண்டு அதை நடத்தியும் வைத்தனர். இந்த அளவுக்கு ஸோஷலிஸ்ட் சமுதாய வேலை இரண்டாந்தரமாக மதிக்கப்பட வேண்டியது அவசியமாயிற்று. எனினும், மற்ற எல்லா தேசங்களையும் விட அதிகமாக வசதிகளும் சந்தோஷ வாழ்க்கையும் பெரும்பான்மை மக்களுக்கு கிடைப்பது சாத்தியமாயிற்று.

ஹிட்லருக்கு முன் ஜெர்மனியில் பதவி வகித்தவர்கள் ரஷ்யாவிடமும் ஸோஷலிஸ்ட் கொள்கையிலும் ஓரளவு அனுதாபம் உள்ளவர்கள். அவர்களது முயற்சிகள் வெற்றி பெறும்படி விட்டால் ஐரோப்பா பூராவுமே ஸோஷலிஸம் நிலைத்துப் போய், சுரண்டல் முறை நசித்து விடும் என்பது வெளிப் படையாயிற்று. எனவே, ஜெர்மனியில் ஸோஷலிஸ்ட் கக்ஷிகள் சரிவர சர்க்காரில் தம் பொறுப்புகளைச் செலுத்துவதை பெரிய வல்லரசுகள் அனுமதிக்க வில்லை. இதன் மூலம், வஞ்சமே உருவாகி, எல்லா முற்போக்கு சக்திகளுக்கும் பகைவனும் போல்ஷிவிஸத்தின் சில நல்ல அம்சங்களும் முதலாளித் தனத்தின் கோர சொரூபமும் சேர்ந்த மாயாவியான ஹிட்லர் பதவிக்கு வருவதை அவை சாத்தியமாக்கின. ஹிட்லரின் ராஜீய குரு முஸோலினி. அவர்களது பாஸிஸம் என்ற ஸித்தாந்தம், வர்த்தக மந்தத்தினால் கஷ்டப்பட்டு, லாபம் சுணங்கியதால் ஓலமிட்டுக்கொண் டிருந்த முதலாளி வர்க்கத்தினரை பெரிதும் கவர்ச்சித்தது. பல தேசங்களிலும் இந்த வழியைப் பின்பற்ற பக்தகோடிகள் கிளம்பினர். வெர்ஸைல்ஸ் உடன்படிக்கை மூலம் ஜெர்மனிக்கு இடப்பட்ட விலங்குகளைத் தகர்த்து, உலக ஆதிக்கத்தைப் பெறுவதற்கு ராணுவ பலத்தை அமோகமாய் தயாரித்துக் கொள்வது 1933-ல் பதவிக்கு வந்த ஹிட்லருக்கு அவசியமாயிற்று. அதற்கு முதலாளித்வ கோஷ்டிகளின் பணவுதவியையும் இதர சகாயங்களையும் பெறுவதற்காக, ரஷ்யாவின் சமுதாயக் கொள்கையை வேரறுக்கவே தான் தோன்றியிருப்பதாக ஹிட்லர் கூறிக் கொண்டார். பிரிட்டன் உட்பட பல விடங்களில் ஆளும் வர்க்கத்தினர் அவரது நயவஞ்சக மொழிகளை நம்பினர். ரஷ்ய சமூக அமைப்பை அழித்து விடுவது முக்கியமல்லவா? அவர்களது செல்வாக்கைப் பெற்று ஹிட்லர் ஜெர்மனியை ஒரு பெரிய ஆயுத சாலையாக்கினார். ஜெர்மன் ஜாதியின் திறமையும்,

விடா முயற்சியும், பழைய அக்கிரமங்களை பழி தீர்த்துக்கொள்ள வேண்டுமென்ற பேராசையும் ஹிட்லரின் முயற்சிகள் கைகூடுவதற்கு உதவியா யிருந்தன. இந்தப் போக்கைக் கண்ட ரஷ்ய தலைவர்கள் பதில் நடவடிக்கைகளில் இறங்கினர். 1934-ல் ஸோவியத் யூனியன் ஸர்வ தேச சங்கத்தில் சேர்ந்தது. தலைமுறை தலைமுறையாய் ஜெர்மன் ஆக்கிரமிப்பினால் சீரழிந்த பிரான்ஸ், ரஷ்யாவையும் அரவணைத்துக்கொண்டு ஹிட்லரின் ஆக்கிரமிப்புத் திட்டங்கள் வெற்றி யடையாமலிருக்க வேண்டுமென்ற நோக்கத்துடன், ஒப்பந்தங்களின் மூலம் ஐரோப்பிய நாடுகளைப் பிணைத்து, வெள்ளம் வருமுன் அணை கோலப் பார்த்தது. ஐரோப்பிய விவகாரங்களில் பிரிட்டனுக்கும் ப்ரான்ஸுக்கும் இருந்துவந்த போட்டியான நிலைமை, ரஷ்யா—பிரான்ஸ் ஒத்துழைப்பு உருவாவதைத் தடை செய்தன. பாஸிஸம் எல்லாவற்றையும்விட பெரிய ஆபத்து என்று தெளிவாகத் தெரிந்துகொண்ட ரஷ்யா ஒவ்வொரு தேசத்திலுமுள்ள முற்போக்கு கக்ஷிகளெல்லாம் ஒற்றுமைப்பட்டு, கூடியவரை ஒரு முகமாக சமூக சீர்திருத்தங்களை நடத்தி, ஆக்கிரமிப்பைத் தடுக்க தயாரிக்க வேண்டும் என்பதற்காக ஐக்கிய முன்னணி (United Front) உபாயத்தை வற்புறுத்தியது. 1936-37-ல் பிரான்ஸ் உட்பட பல ஐரோப்பிய நாடுகளும், மத்ய தென் அமெரிக்க நாடுகள் சிலவும் இதை மேற்கொண்டன. பிரான்ஸ் புளூம் சர்க்காரின் கீழ் ஸோஷலிஸ்ட் பாதையில் விரைந்து செல்லத் தொடங்கியது. இது பிரிட்டிஷ் முதலாளி வர்க்கினருக்குப் பிடிக்கவில்லை. 'ஸோஷலிஸ்ட் தொத்துநோய்' 20 மைலுக்கு அப்பால் பலமாவதை அவர்கள் விரும்பவில்லை. பிரிட்டிஷ் பாங்கர்கள் மூலம் அவர்கள் அடிக்கடி நெருக்கடிகளைத் தோற்றுவித்து, ஸோஷலிஸ்ட் சர்க்கார் நிலைகுலையச் செய்து, தங்களுக்குப் பிடித்தமில்லாத எதுவும் பிரான்ஸில் நடைபெறாமலிருப்பதற்காக 1938-ல் அங்கே பிற்போக்காளரை பதவியிலமர்த்திவிட்டனர். அது முதல் பிரெஞ்சு மக்களுக்கும் அவர்களை ஆள்வோருக்கு மிடையே பிளவு பெருகியது. ஹிட்லர் 1940-ல் 15 தினங்களில் பிரான்ஸை நொறுக்கி விடுவதற்கு சாதகமான நிலைமைகள் இவ்வாறு சிருஷ்டிக்கப்பட்டன.

ஹிட்லரின் நட்புடன், தங்கள் ஏகாதிபத்தியத்தை இன்னம் பல காலம் அனுபவித்து வரலாம் என்று கோழிக்கனவு கண்டு கொண்டிருந்த ஒரு பராசிரமஜீவக் கூட்டம் பிரிட்டனில் பல துறைகளிலும் செல்வாக்கு பெற்றிருந்தது. ஹிட்லர் கட்டாயம் ரஷ்யாவைத் தாக்குவார் என்பது அவர்களது நம்பிக்கை. இந்த இரண்டுராக்ஷஸர்களும் அடித்துக் கொண்டு பலவீனப்படுவதன் மூலம், நிர்ப்பயமாய் தங்கள் உலக ஆதிக்கம் நீடிக்கலாம் என்று இவர்கள் கருதினர். எனவே ஹிட்லருடனும், அவரது சகாவான முஸோலினியுடனும், போர் வராமல் இருப்பதையே இவர்கள் தம் கொள்கையாக்கிக் கொண்டனர். பிரான்ஸ் தன் ரஷ்ய, ஐரோப்பிய பந்தங்களால் போரில் இறங்கி பிரிட்டனையும் இழுத்து விடாமல் பார்த்துக்கொள்வதற்காகத்தான், சுயமாக ஒரு அயல்நாட்டுக் கொள்கையை அனுஷ்டிக்க வல்லவர்கள் அந்நாட்டில் பதவிக்கு வராமல் பார்த்துக்கொண்டார்கள். ஸர்வதேச சங்கத்தைப் பலமான ஒரு சமாதான மேடையாக்க ரஷ்யா அரும்பாடு பட்டது. ஆக்கிரமிப்பு எங்குத் தலை தூக்கியபோதிலும் உடனே அதை நொறுக்க வேண்டுமென்றது. இதற்குச் சங்கத்தில் பிரதானமாயிருந்த பிரிட்டிஷார் சம்மதிக்கவில்லை. எனவே ஆக்கிரமிப்புகள் தொடர்ச்சியாக வந்தன. மஞ்சூரியா, அபிசீனியா, ஆஸ்ட்ரியா, ஸ்பெயின், அல்பேனியா, செகோஸ்லோவாகியா இவை பாஸிஸ்ட் சக்திகளைத் திருப்தி செய்விப்பதற்காக பிரிட்டிஷ், பிரெஞ்சு சர்க்கார்களால் பலியிடப் பட்டன. அமெரிக்காவும் பல வகைகளில் உடந்தையாயிருந்தது. 1938ல் மூனிக்கில் செக்காட்டின் சுதந்திரத்துக்கு சேம்பர்லின் மரணசாஸனம் எழுதிக் கொடுத்தபோது பிரான்ஸை பிரிட்டன் ரஷ்யாவிடமிருந்து இறுதியாகப் பிரித்து விட்டது. கிழக்கே சென்று தங்களைத் தாக்குவதற்கு செக்நாட்டை முதலாளி நாடுகள்

ராஜபாட்டையாக ஜெர்மனிக்கு தானங் கொடுத்ததாகவே ஸோவியத் தலைவர்கள் கருதினர். அவர்களுடைய யுத்த முயற்சிகளும் பன்மடங்கு அதிகமாயின.

ஒவ்வொரு ஆக்கிரமிப்பின் போதும், அல்லது ஆக்கிரமிப்பு வருமெனத் தோன்றிய போதும் ரஷ்யா சும்மா இருக்கவில்லை. பிரிட்டிஷ், பிரெஞ்சு, ரஷ்ய, அமெரிக்க சர்க்கார்களும் சமாதானத்தில் நாட்டமுள்ளமற்ற வல்லரசுகளும் சேர்ந்த சமாதான முன்னணி (Peace Front) வேண்டுமென்று அவர்கள் இடைவிடாமல் வற்புறுத்தி வந்தனர். மூனிக்கபட நாடகத்துக்குப் பிறகுகூட 1939 மார்ச்சில் செக் சிதைவுக்குப்பின் ரஷ்யர் இதை வற்புறுத்தினர். ஆனால் சேம்பர்லினும், பிரான்ஸில் பதவி வகித்த டலாடியர் போன்ற பாஸிஸ்ட் அனுதாபிகளும் இதற்கு இணங்கவில்லை. போலந்தை ஜெர்மனி பயமுறுத்திய போதுதான், ஹிட்லரின் உலக ஆதிக்க வெற்றியை ஒருவாறு புரிந்து கொள்ள இவர்களால் முடிந்தது. ரஷ்யாவின் உதவியில்லாமல் போலந்தை ஆக்கிரமிப்பினின்றும் காப்பாற்ற முடியாது எனத் தெரிந்து ரஷ்யாவை அணுகினர். பிரிட்டனுடனும் பரிபூரண ராணுவ உடன்படிக்கை தவிர குறைந்த வேறு எதற்கும் ரஷ்யா தயாராயில்லை. போலந்துக்காகப் போரிட்டாக வேண்டிய முழுப் பொறுப்பும் தங்களையே சாரமவிருக்க வேண்டுமென அவர்கள் கவலைப்பட்டனர். ஜெர்மனியையும் ரஷ்யாவையும், சுயநலத்தை யுத்தேசித்து போரில் ஈடுபடுத்தவே பிரிட்டிஷ் ஆளும் வர்க்கத்தினர் விரும்புகின்றனர் என்ற பழைய சந்தேகம் பிரிட்டிஷ் சர்க்கார் மனதிலிருந்து அகலவில்லை. பிரிட்டிஷ் சர்க்காரும் உண்மை யுணர்ச்சியுடன் உடன்படிக்கை ஏற்படுவதை அப்பொழுது விரும்பினார்களா என்ற விஷயத்தைப் பற்றி இப்பொழுது கூட நிச்சயமாக எதையும் சொல்வதற்கில்லை. பிரிட்டிஷ் நடத்தை ரஷ்யாவுக்கு நம்பிக்கை தருவதாயில்லை. ரஷ்ய உதவிக்குப் பலவித நிபந்தனைகளைப் போட்டனர். இந்தத் தருணத்தில்தான் ஜெர்மனி ரஷ்யாவுடன் திடீரென அனுக்கிரமிப்பு உடன்படிக்கையைச் செய்துகொண்டது (ஆகஸ்ட் 23). இதன் மூலம் ரஷ்யா ஜெர்மனியின் கூட்டாளி ஆகிவிடவில்லை. தன் ராணுவ நிலைமையைச் சீர்ப்படுத்திக் கொண்டு, சரித்திர பூர்வமாய் தனக்குள்ள கடமையைச் செய்வதற்குத்தன்னைத் தயார்ப்படுத்திக்கொண்டு வந்தது.

போலந்தில் ஹிட்லரின் மின்னல் யுத்தம் எதிர்பாராதவாறு துரிதமாய் வெற்றி பெற்றபோது, அதன் கிழக்குப் பாகத்தை ரஷ்யா ஸ்வீகரித்துக் கொண்டு அங்கே ஸோவியத் ஆட்சி முறையை ஏற்படுத்தியது. ரஷ்யாவின் இந்தச் செயலால் உடனே பால்கனுக்கு யுத்தம் பரவாமல் தடைப்பட்டது. இதைச் சர்ச்சில் பகிரங்கமாய் பாராட்டியிருக்கிறார். இதை ஹிட்லர் மறக்கவில்லை.

ஹிட்லருடன் மேற்கத்திய வல்லரசுகள் சமாதானம் செய்துகொண்டு எந்த நிமிஷத்திலும் ரஷ்யாமீது திரும்பக் கூடுமென ஸோவியத் சந்தேகித்தது. ஜெர்மனி தங்கள் பிரதேசத்தை ஆக்கிரமிப்பதற்கு அடுத்தாற்போல் வசதியாயுள்ள இடங்கள் தம் வசமாவது அவசியமென ரஷ்ய சர்க்கார் கருதினர். எஸ்தோனியா, லாட்வியா, லிதுவேனியா ஆகிய மூன்று பால்டிக் நாடுகளுடனும் பரஸ்பர உதவி உடன்படிக்கைகள் செய்துகொள்ளப்பட்டன. (1939 செப்டம்பர் 29வ, அக்டோபர் 10வ) இவற்றின் கீழ் சில இடங்களில் ரஷ்யா படைநிலையங்களை வைத்துக் கொள்ள உரிமை பெற்றது.

லெனின்கிராடின் ஜனத்தொகை 35 லக்ஷம். பின்லாந்து பூராவின் ஜனத்தொகை 35 லக்ஷம். லெனின்கிராடை சுடக்கூடியவாறு பின்னிஷ் அரண்கள் இருந்தன. இவற்றைப் பின்னுக்குக் கொண்டுபோய் விடவேண்டுமென்றும் நஷ்ட ஈடுகளுடன் கூட சில ராணுவ வசதியான ஸ்தலங்கள் வேண்டுமென்றும் ரஷ்யா பின்லாந்தை கேட்டது. இந்தக் கோரிக்கைகளில் விபரீதமாக எதுவுமில்லை. பிரிட்டனே அமெரிக்காவுக்கு பல படைதளங்களைச் சென்ற வருஷம் கொடுத்திருக்கிறது. எனினும் பிரிட்ட

னும் அமெரிக்காவும் பிரான்ஸும் பின் லாந்தை இணங்கவொட்டாமற் செய்தன. ரஷ்யா ஜெர்மனியின் சார்பி லிருப்பதற் காக அவற்றின் சர்க்கார்களுக்கு இருந்து வந்த சந்தேகமே இதற்குக் காரணம். மேற்கு முனையில் நிலைமை நிச்சயமற் றிருந்ததால் உடனடியாக இந்தப் படை தளங்களைப் பெறுவது இன்றி யமையா தது என்று ஸோவியத் யூனியன் நினைத் தது. அதற்காகப் போரிடவேண்டி ஏற்பட் பது. இந்த வசதிகளைப் பெற்றிருந்தால் ரொம்பவும் நன்றாயிருந்திருக்கும். நேச நாடுகளும் இத்தாலியும் அமெரிக்காவும் பின்லாந்துக்கு உதவி யளித்தன. 1940 பிப்ரவரியில் பின்லாந்துக்குப் படைகளை அனுப்பவும் பிரிட்டன் தலைப்பட்டது. ஆனல் படைகள் கிளம்புமுன் பின்னிஷ் எதிர்ப்பு முறியடிக்கப்பட்டது. தாங்கள் கோரிய படைதளங்களையும் பந்தோபஸ்து ஸ்தலங்களையும் மட்டும் பெற்றுக்கொண்டு பின்னிஷ் ஆதிபத்தியத்தை ஆக்கிரமிக்கா மல் ரஷ்யர் விட்டுவிட்டனர்.

1940 வேனிற்காலத்தில் ஸ்காண்டி நேவிய நாடுகள்மீது ஜெர்மனி பாய்ந்து மின்னல் யுத்தங்களில் வெற்றிபெற்றது. பெல்ஜியம், ஹாலந்து, பிரான்ஸ், லக்ஸெம் பர்க் ஆகிய நான்கையும் 1940 ஜுனில் அடி மைப்படுத்திவிட்டு இத்தாலியையும் தன் தன்னுடன் ஜெர்மனி சேர்த்துக் கொண்ட போது நிலைமை ரொம்ப பயங்கரமாயிருந் தது. அதுமுதல் பிரிட்டன்மீது ஜெர்மனி தன் விமான யுத்தத்தைக் கடுமையாக நடத்தி வந்ததுடன்கூட அடிக்கடி சமா தானச் சரடுகளை விட்டுக்கொண் டிருந் தது. ஸோவித் யூனியன் 'ஹிட்லர் எத் தருணத்திலும் ரஷ்யாமீது திரும்பக் கூடும் என்று கருதி ரஷ்யா தீவிரமாய் முயன்றது. பால்டிக் நாடுகளில் இதற் குள் பொதுவுடமைக் கக்ஷியின் செல் வாக்கு பலமாகவே, பார்லிமெண்ட் தேர் தல்களில் அவர்கள் வெற்றி பெற்று அந்த நாடுகளெல்லாம் ஸோவியத்துடன் ஐக்கிய மாய் விடும்படி செய்தனர். பிரான்ஸின் வீழ்ச்சி ரஷ்யாவுக்கு மற்றொரு பெரிய கவலையையும் கொடுத்தது. ஜெர்மன் மின்னல் யுத்தமுறை வெற்றியடைந்து வந்த வேகமும், உண்மையிலேயே பிரிட் டிஷ் நிலைமை சிரமமாக இருந்ததும் ரஷ் யாவுக்கு அபாயத்தை அதிகப்படுத்தின. ஹிட்லரின் "மைன் காம்ப்" கனவுகளில் ஒன்று ரஷ்யாவின் தானியக் களஞ்சிய மாகிய உக்ரேனைக் கைப்பற்றி ஜெர்மன் உணவுப் பிரச்னை நிரந்தரமாய் தீருவதற்கு வழி செய்வதாகும். உக்ரேனின் தென் பகுதியைச் சேர்ந்த பெஸ்ஸரேபிய மாகாணத்தை மறுபடியும் ருமேனியாவிட மிருந்து மீட்பது உக்ரேனின் தற்காப் புக்கு அவசியமென ரஷ்யத் தலைவர்கள் கருதினர். இதற்குள் பயம் நீங்கிவிட்ட ஜெர்மனி, பால்கனில் ரஷ்யா செல்வாக்குப் பெறுவதை அனுமதிக்கத் தயாராயில்லை. காலங் கடத்தினல் ஜெர்மனியின் சூழ்ச்சி கள் வலுக்கும் என்று உணர்ந்து ரஷ்யர் ருமேனியாவுக்கு இறுதிக் கோரிக்கையை அனுப்பி, பெஸ்ஸரேபியாவையும் ராணுவ வசதியுள்ள புகோவீனவையும் பிடித்துக் கொண்டனர். உடனே அவையும் ஸோவி யத் மயமாயின. இது நடந்தேறியது 1940 கடைசிப்பகுதியில். இதுமுதல் ரஷ்யாவும் ஜெர்மனியும் பால்கனில் தம் செல் வாக்கை நிலைநிறுத்த முயன்றன. ஆனல் ஜெர்மனியைப்போல ஆயுத பலத்தையும் பலாத்கார மிரட்டலையும் கருவிகளாகக் கொண்டு சுதந்திர நாடுகளை அடிமை களாக்குவது ஸோவியத் கொள்கையல்ல. பின்னிஷ் போர் தவிர்க்கமுடியாத சந்தர்ப் பங்களிலிருந்து கிளம்பிய சம்பவமாகும். இந்த முயற்சியில் ஜெர்மனி வெற்றி யடைந்ததும், ஒன்றன் பின் ஒன்ருக துருக்கி தவிர மற்ற எல்லா பால்கன் நாடு களும் அச்சில் சேர்ந்துவிட்டதும் வாசகர் கள் நன்கறிந்த விஷயம். இந்த பால்கன் கெடுபிடிகளின்போது தான் ஸோவியத் யூனியன் தன் உடமையான நலனையும் அதன் மூலம் சரித்திர பூர்வமான கடமை யைச் செலுத்த தன் பலம் குன்றுமலிருப் பதன் அவசியத்தையும் முன்னிட்டு சற்று பகிரங்கமாகவே ஜெர்மனிக்கு விரோத மான வகைகளில் உற்சாகமளித்து வந்தது. ஜெர்மனியின் ஆக்ரமிப்புகளுக்கு முடிவு கட்ட ஸோவியத் யூனியன் முன்வரும் காலம் நெருங்குவதாக பலரும் கருதினர்.

இந்த சமயத்தில்தான் பிரிட்டிஷ் ராணுவ நிலைமையிலுள்ள குறைபாடுகளை வெட்ட வெளிச்சமாக்கிய லிமியா கிரீஸ் போராட்டங்கள் நடைபெற்றன. 1940 கடைசியில் அக்கிரமமாக கிரீஸ்மீது படையெடுத்து தோல்விக்கு தோல்வியை அனுபவித்து வந்த முஸோலீனியை ஹிட்லர் காரியாம்சத்தில் தன் ராணுவ இயந்திரத்தின் அடியாமையாக்கிக் கொண்டு 1941 ஏப்ரல் கடைசியில் ஐரோப்பாவின் தென்கிழக்குப் பகுதியிலிருந்து பிரிட்டிஷ் செல்வாக்கையும், ஸோவியத்தில் வசதிகளையும் வேரறுத்துவிட்டார். இதற்கப்பால் கிரீட்டில் பிரிட்டிஷ்படைகளுக்கு ஏற்பட்ட தோல்வியிலிருந்து, தாக்கும் போரை வெற்றிகரமாய் நடத்துவதற்குப் போதுமான அளவில் பிரிட்டனிடம் இன்றியமையாத தளவாடங்கள் இல்லை என்ற உண்மை வெளிப்பட்டது. எனவே, பிரான்ஸின் தோல்விகால சர்க்காரை வசப்படுத்திக் கொண்டு தன் அடுத்த முயற்சிக்கு ஹிட்லர் ஏற்பாடுகளைச் செய்தார். பிரிட்டனை மூறியடிப்பதற்குப் போரை நடத்தவேண்டுமானால் பின்புறமிருந்து அபாயம் இராதென்ற உத்தரவாதம் அவசியமென நாஜி ராணுவத் தலைவர்கள் கருதினர். பிரிட்டனுடன் அத்தகைய போரில் ஈடுபட்டு தோல்விகள் சம்பவிக்குங் காலையில், ஸோவியத் செஞ்சேனை கிழக்கேயிருந்து மேற்கு நோக்கி வியாபித்து ஐரோப்பாவை தன் ராணுவ பலத்துடன் பொதுவுடைமை மயமாக்கி விட்டால் என்ன செய்கிறது என்ற பக்தி கிளம்பியது. கிரீட் அனுபவத்திலிருந்து வெற்றிகரமான படையெடுப்புக்கு பிரிட்டன் இன்னம் பல மாதங்களுக்கு தயாராக முடியாதென்பது புலனாயிற்று. எனவே மேற்கு முனையைப்பற்றி பயமில்லாமல் ஹிட்லர் ரஷ்யாவின் ராணுவ பலத்தை முதலில் நசுக்கி விடுவதென்று கங்கணம் கட்டிக்கொண்டார். ரஷ்யாவின் நடுநிலைமைதான் தன் மின்னல் யுத்தங்கள் வெற்றி பெற்றதற்கு முக்கியமான காரணம் என்பதைப் பற்றி அவருக்கு லட்சியமில்லை. ரஷ்யாவின் ராணுவ இயந்திரம் ஆகஸ்ட் மாதத்தில் தாக்கும் நிலைமைக்கு முற்றிலும் தயாராய்விடும் என்று தெரிந்தது. அதுவரை ரஷ்யாவுக்கு அவகாசமளிக்க அவர் விரும்பவில்லை. பிரிட்டனுக்கு அமெரிக்கா தரும் உதவி பயன் தரத் தக்க வகையில் இன்னம் 6 மாதங்களுக்கு உருவாக முடியாது. இனி காத்திருந்தால், ஜெர்மனி தாக்கும் யுத்தத்திலிருந்து தற்காப்பு யுத்தத்தை மேற்கொள்ளும் காலம் நெருங்கிவிடும் என்று புலப்பட்டது. எனவே தன் உண்மை நோக்கங்களை வெளியிடாமல் வைத்திருந்து 1941 ஜூன் மத்தியில் துருக்கியை நடுநிலைமைப் படுத்திக்கொண்டு 22-ல ரஷ்யாமீது போர் தொடுத்தார். 2,000 மைல் முனையில் ஆர்க்டிக் முதல் கருங்கடல்வரை, ஐரோப்பிய நாடுகளின் படைபலம் உட்பட சகல வசதிகளுடன் பொதுவுடைமையை நிர்மூலமாக்கும் புனித யுத்தம் என்ற வீராப்புடன் அவர் போரைத் துவக்கினர். ரஷ்யர் தற்காப்புக்கு ஆயத்தமாயிருந்தனரே ஒழிய தாக்குதலுக்கு அதுவும் இத் தருணத்தில் முற்றிலும் தயாராயில்லை; ஆகையால் ஜெர்மனிக்கு சில பெரிய ஆரம்ப வெற்றிகள் கிடைத்தன. முதல் 15 தின யுத்தத்தில் ரஷ்ய போலந்தில் பெரும் பகுதியும் ரஷ்யாவுக்கு நஷ்டமாயின. ஜெர்மன் முன்னணிப்படைகள் ரஷ்யாவின் பழைய எல்லைக்குள் பிரவேசித்தன. ஆனால், அதற்குமேல் முன்னேறவொட்டாமல் ரஷ்யர் மும்முரமாய் எதிர்த்துத் தாக்கினர். ஸ்டாலின் அரண் என்று சொல்லப்படும் பழைய ரஷ்ய எல்லையோரமுள்ள கொத்தள வரிசைகளில் 10 தினங்களாக பயங்கரமான யுத்தம் நடைபெறுகிறது. எதிர்பார்த்ததைவிட மாபெரும் கஷ்டநஷ்டங்களுக்கு ஜெர்மன் ஸைன்யம் உள்ளாகவேண்டியிருக்கிறது. ரஷ்யாவின் போர்த்திறமையும், எதிர்ப்பும், சாதனங்களும், உபாயங்களும், ஜெர்மனி முதல் தடவையாக சமபல நிலைமையிலுள்ள ஒரு எதிரியை மும்முரமாய்த் தாக்கி போராடவேண்டியிருப்பதை உணர்த்துகின்றன. ஜெர்மன் தாக்குதலின் வேகம் அளவு கடந்துபோய் ஸ்டாலின் அரண் சில விடங்களில் தகர்ந்தாலுங்கூட, கடைசிவரை யுத்தத்தை நடத்திச் செல்வதற்கு

(16-ம் பக்கம் பார்க்க)

# பட்டுவின் மணம்

எழுதியவர்
கா. சி. வேங்கடரமணி

மொழிபெயர்த்தவர்
கு. ப. ராஜகோபாலன்

## 1

ஸி. சுப்ரமண்ய சாஸ்திரி சென்னை சர்க்கார் ஆப்காரி இலாகாவில் ஒரு சப் இன்ஸ்பெக்டர். அந்த மகோன்னத காலங்களில் சால்ட் ஆப்காரி இலாகாக்கள் கலியாண காலங்களில் தோன்றும் இரட்டை சகோதரர்கள் போல சேர்ந்தே இருந்தன. மாகாண இலாகா மத்திய இலாகா என்ற இழுக்கான வித்யாசம் அப்பொழுது கிடையாது. சால்ட் இலாகா பிரிட்டிஷ்சாம்ராஜ்யத்தின் சிருஷ்டி. சர்க்காருக்கு தினசரி ஒரு சிறுவரி செலுத்தி ஊரான் உப்புப் போட்டுச் சாப்பிட வேண்டும். ஆப்காரி டிபார்ட்மெண்டோ இன்னும் கொஞ்சம் அதிகச் செலவுடன் சோமரஸத்தைப் போன்ற ஒரு பானத்தையும் கலந்து வாழ்க்கையை ருசிப்படுத்துகிறது. மனிதனுடைய தனித்த தோழன் போல தென்னிந்தியாவில் சமவெளிகளில் சிதறி நிற்கும் தென்னை மரங்களிலிருந்துதான் ஆதிகால முதல் தமிழன் கள்ளை இறக்கி இருக்கிறான். இரட்டை ஆட்சி வந்துதான் சால்ட் ஆப்காரி இலாகாக்களில் பாந்தவ்யத்தைக்குறைத்தது.

மாண்டேகு துரை இந்தியாவிற்கு வந்து தேறுதல் உற்சவங்களை உற்சாக மாகச் செய்ததற்கு முன் சுப்ரமணிய சாஸ்திரி தென்னை மரத்தின் கீழ் நின்று வியர்த்தவர்.

கடப்பை கர்னூல் ஜில்லாக்களில் மலேரியா மண்டிய பாகங்களில் ஐந்து வருஷம் குற்றவாளி போல தீவாந்தர சிக்ஷை அனுபவித்துவிட்டு அப்போது தான்பாவம் ஆரணி சர்க்கிளைச்சேர்ந்த ஸாலவேடு ரேன்ஜில் கொஞ்சம் அதிருஷ்டத்தைக் கண்ணால் கண்டார். மாமூல் வரி தாராளமாக வசூலாவதற்கு அது பேர் போன இடம். சுற்று வட்டாரத்து ஏழை மக்களுக்கு இந்த சப் இன்ஸ்பெக்டர் சிறு குபேரன் போல காணப்பட்டார்.

அச்சரப் பாக்கத்துக்கும் வந்தவாசிக்கும் நடுவில் கடக்கும் மான வாரிப் பிரதேசத்தில் இருப்பது சாலவேடு. பெருத்த போர்கள் நடந்த இடத்தின் கர்வத்துடன் தான் அது இருக்கிறது. சிறு காட்டாற்றின் ஓட்டத்தால் கொஞ்சம் செழிப்பாக இருக்கு மிடங்களிலெல்லாம் தென்னை மரங்கள் குப்பல் குப்பல்களாக நின்று வானத்தைக் கருக்கச் செய்கின்றன. தென்னிந்தியாவின் மணற்பாங்கான பிரதேசங்களின் செல்வக்குலை தென்னை; ஆப்காரி இலாகாவின் அன்புக்குப் பாத்திரம். மஹத்தான சென்னைசர்க்காருக்கு கூலிகள் போல் உழைக்கும் சப் இன்ஸ் பெக்டருக்கும் வருமான இடம். சர்க்காருக்கு மூன்றுரூபாயும் சப் இன்ஸ்பெக்டருக்கு ஒரு அணுவும் ரொட்டியைத் துளைக்கும் எரும்புக் கூட்டம் போல கிராமணிகளை பிடுங்கித்தின்னும் ஆறு சேவகர்களுக்கு அதில் கால் பங்கு வீதமும்.

ஸி. சுப்ரமணிய சாஸ்திரி சால்ட் இலாகாவில் நுழைந்ததே விதியின் விபரீதங்களில் ஒன்று. நல்ல சம்ஸ்கிருத வித்வான்கள் வமிசத்தில் பிறந்தவர். வேதாந்த விசாரம்செய்து வியாக்யானங்கள் எழுதி யாகங்கள்கூட பரம்பரையாக செய்தார்கள். திராக்ஷையில் ரசம் கரும்பில் சுவையும் போல தர்க்க வாதம் அவர் ரத்தத்தில் ஊரியது. மஹாபண்டிதராகவோ வக்கீலாகவோ ஆகவேண்டியிருக்க வேண்டியவர் சுப்ரமணி அய்யர்.

ஆனால் ஆயிரத்தி எண்ணூத்தி எழுவதுகளில் இங்கிலீஷ் மோகம் அதிகம். சென்னை கிருஸ்துவ காலேஜில் படித்தார். பாதரி வில்லியம் மில்லர் துரையின் ஆதிசிஷ்ய கோஷ்டியில் அவர் ஒருவர். கலாசாலையில் ஷேக்ஸ்பியர் நாடகங்களை அவர் படித்து கரைகண்ட வேகத்தை "இருப்பதா இறப்பதா?" என்ற பிரசித்தி பெற்ற பாகத்தை அவர் அடிக்கடி நடித்துப் பார்த்துக் கொள்வதில்காணலாம். சால்ட் இலாகாவில் அவர்

பட்டகஷ்டத்தாலும் வீட்டுவரவு செலவு திட்டத்தை சரிக்கட்ட முடியாத தாலும் ஏதாவது சாராயக் கடையைப்பற்றிய சிக்க லான கணக்கை சரிசெய்ய முடியாத போ தும் அல்லது முப்பதிலிருந்து நாற்பது ரூபாய்க்கு சம்பள உயர்வு ஏற்படுவதற்கு ஹானியாக பிளாக் மார்க் ஏதாவது வந்து விடுமோ என்று திகில் பிடித்த போதும் அவர் இந்தப் பாடம் படிப்பதுண்டு.

சுப்பிரமணியம் காலேஜில் மிகவும் கெட் டிக்காரர்தான். ஆனால் எப். ஏ. பரி க்ஷைக்குப் படித்துக்கொண் டிருக்கும் போது திடீரென்று உடம்புக்கு வந்து விட்டதால் அல்ஜீபிராவில் தவரிப்போ யிற்று.

அதற்கு முன்னெல்லாம் சுப்பிரமணியம் தனக்கேற்றது வக்கீல் தொழில்தான் என் றும், பரம்பரையாக தனக்குவந்த குணங் களை வெளிப்படுத்த அதுதான் சரியான சாதனமென்றும் எண்ணி இருந்தார். எப். ஏ. பரீக்ஷையில் தேறாததால் பி. ஏ. பி. எல். ஆவது அஸாத்ய மாகிவிட்டது. ஏனென்றால் அவருக்குக் கலியாணம் கொஞ்சம் முன்னதாகவே ஆகிவிட்டது. இரண்டு குழந்தைகளும் பிறந்துவிட்டன. பெரிய குழந்தை பெண். பிதிரார்ஜித சொத்து அதிகமாக இல்லை. வீட்டில் தம யன் வைத்தது சட்டம். வெள்ளாமையி லிருந்து வெகு பிரயாசையின்பேரில் சம்பாதித்த பணத்தை மேலும் தம்பியின் படிப்பில் செலவழிக்க அவர் மறுத்துவிட் டார். ஷேக்ஸ்பியர் நாடகங்கள் அனுபவத் தையும் வக்கீல் கனவையும் விட்டு விட்டு சுப்ரமணியம் குடும்பபாரத்தை ஏற்க வேண்டியதாயிற்று. பாவம், வக்கீல் தொழில் மேன்மைபெற முக்கியமான தேவை என்று அவர் எண்ணின வலுத்த தொண்டை அவருக்கு இருந்தும் அது உபயோகமில்லாமல் போயிற்று.

சுப்ரமணியத்துடன் கூட குடியிருந்த வர் சேப்பாக்கில் ஆப்காரி இலாகாவில் ஒரு குமாஸ்தா. அவர் சுப்பிரமணியத்தை தங் கள் தலைமை அதிகாரியிடம் கொண்டு காண்பித்தார். சுப்ரமணியத்தினுடைய வாலிப உருவத்தையும் தேஜஸ்ஸையும் கண்டு மயங்கிப்போன அதிகாரி, அவரை தனக்குக் கீழே ஒரு குமாஸ்தாவாக நிய மித்துக்கொண்டார். மூன்று வருஷகாலம் மேஜை அடியில் செக்கு மாடாக உழைத்து மனைவிக்குப் பிடிக்காத மதராஸ் வாழ்க்கை வாழ்ந்தார். திடீரென்று ஒருநாள் மாதம் முப்பது ரூபாய் என்று ஏற்பட்ட விகிதப் படி "சப்-ப்ரோ-டெம்" சப் இன்ஸ்பெக்ட ராகஉள்நாட்டு வனுந்தரத்தை அடைந்தார். மனிதனுடைய மனம் வராமையும் மீறி தலைக்கு ஒரு அணு அளிக்கும் தென்னை மரத்தின் தயவால் சுப்ரமணியமும் அவர் மனைவி விசாலக்ஷியும் கொஞ்சம் நிம்மதி யாகக் காலம் கழித்தார்கள். ஆனால், சால வேட்டுக்கு வந்தபிறகுதான் கையில் கொஞ் சம் பணமேறிற்று. ஆனால் அப்பொழு தும் வீட்டில் ஒவ்வொரு சமயம் புயலடிக் காமலில்லை. ஆனால் வாழ்க்கையின் ருசியை அது கொஞ்சம் அதிகரிக்கத் தானே செய்கிறது.

## 2

"காலத்திற்கு ஏற்றபடி போகத் தெரி யாது உங்களுக்கு. தூண்டிப் பூவைப் போட்டுத் தானே பெரிய மீனைப் பிடிக்க வேண்டும். ஏ.ஸி. (அஸிஸ்டெண்டு கமி ஷனர்) யின் முகாம் குமாஸ்தாவுக்கு இரண்டு டின் நெய்களை உடனே அனுப்பி யிருந்தீர்களானால் கடப்பைக்கு மாற் றியே இருக்கமாட்டார். ஐந்து வருஷங் களில் எவ்வளவு நஷ்டம். இதற்குள் ஐந்து ஆயிரம் ரூபாய் சம்பாதித்திருக்கலாம். பட்டு கலியாணத்திற்கு இரண்டு டின் நெய் என்ன வேலை செய்திருக்கும்?"

இந்தக்குற்றச்சாட்டை கொஞ்சம் தைரி யமாக கேட்டுக்கொண்டு சுப்ரமணியம் கைகளை பிசைந்துகொண்டார்.

"நீ சொல்கிறது என்னவோ உண்மை தான் விசாலம். ஐந்து வருஷங்களுக்கு முன் இரண்டு டின் நெய் பெரிய வேலை தான் செய்திருக்கும். நம்ப சாஸ்திரப்படிக் கும் நெய்யை தானம் செய்வதும் ரொம்ப சிரேஷ்டம். ஆனால் அப்போது புலவை ருசிப்படுத்த உபயோகப்பட்டிருக்கும்."

"சம்சாரம் எப்படியாவது நடக்க வேணும் என்கிறபோது உங்கள் கிண்ட

லும் கோபமும் என்ன உபயோகம்? பூமியிலிருந்து ஒரு 'பூ'வை எடுக்கவேண்டியிருந்தால் கொஞ்சம் குனிந்து தானே ஆகவேண்டியிருக்கிறது. இனிமேல் குழந்தை பட்டுக்காகவாவது அந்தத் தந்திரங்களை எல்லாம் கொஞ்சம் செய்துதானாக வேண்டும்.''

''சரிதான் எவ்வளவுதான் குனிவது? மிதிபடும் வரையிலா? முதுகு முறியும் வரையிலா? நேற்று வந்த பசங்களெல்லாம் முகாம் குமாஸ்தாக்களாக வந்து என்னை ஆட்டிவைக்கிறார்கள். குழந்தைக்காகக்கூட குனிந்து கொடுக்கமுடியாது. பட்டுவின் கலியாணத்திற்குத்தான் இப்போ என்ன அவசரம். இன்னும் மூன்று வருஷம் தாராளமாக போகலாம். அவளுக்கு ஒரு புருஷனை ஈச்வரன் எங்கேயாவது சிருஷ்டித்துப் போட்டிருப்பார். தேனைத் தேடிக்கொண்டு வரும் எறும்பு போலவும் தாமரைப்பூவை தேடிக்கொண்டு வரும் வண்டு போலும் அவன் வந்து சேர்வான். இதோ பார் விசாலி எவ்வளவோ அழகிய பதார்த்தங்களை நாம் கைவைத்துக் குட்டிச்சுவராக்கி விட்டோம்.''

''போதும் உங்கள் வேதாந்த மெல்லாம். இந்த ஆனிக்கு பட்டுவுக்கு பன்னிரண்டு நிரைகிறது. இங்கையோ மனித சஞ்சாரமில்லாத காட்டி லிருக்கிறோம். இல்லாவிட்டால் இத்தனை நாள் ஊர் வாயை மூடமுடியுமா? போனவருஷம் கடப்பையிலிருக்கிறபோதே கலியாணம் செய்திருக்கவேண்டும். எல்லாம் என்னை உரித்து வைத்திருக்கு. இனி கலியாணம் பண்ணாமல் ஒரு மாதங்கூட வைத்திருக்கக் கூடாது. உங்களுக்கு சோம்பேரித்தனம்; செட்டு தெரியாது. அதற்காக பட்டு பாழாகிவிடுவதா?''

''உன்னுடைய ஊதாரித்தனத்தாலும் அவசரத்தாலும் தான் அப்படி நேரிடும்'' என்று இரைந்து கத்தினார் சுப்பிரமணிய அய்யர்.

பதினைந்து தலைமுறைகளாக உடம்பில் ஊறிப்போன வைதீகத் தன்மையை எதிர்க்க அவர் உள்ளம் கிளர்ச்சி கொண்டது. அந்தக் கிளர்ச்சி அவர் உத்தியோகத்தை தேர்ந்து எடுத்ததிலேயே ஓர் அளவு பயன்பெற்றுவிட்டது. சமித்தும், நெய்யும், போட்டு செய்த ஹோமப்புகை பிரதிதினமும் மூக்கில் ஏறவேண்டியிருக்க புளித்த கள்ளின் நாத்தம்தான் அந்த உத்தமமான பிராமணனின் மூக்கில் ஏறிக் கொண்டிருந்தது.

ஆங்கிலப் பயிற்சியின் காரணமாகவோ சமூக சீர்திருத்த இயக்கத்தின் இலவசமான பிரசுரங்களின் மூலமாகவோ சுப்ரமணியத்தின் மனது சில புதிய கொள்கைகள் கொண்டிருந்தது. பட்டுவின் கலியாணத்தை அவசரப்பட்டு கடைசி நிமிஷத்தில் 'காமா சோமா' வென்று முடித்து விடக்கூடதென்பது அவருடைய அந்தரங்கமான அபிப்பிராயம். காலா காலத்தில் பட்டுவுக்கென்று பிறந்திருக்கும் கணவன் வந்து சேர்வான். மரத்திலிருக்கும் கனி பக்ஷியைப் கூப்பிட்டா கொத்தச் சொல்கிறது? பழய வேத கால ரீதியாக பட்டு தன் புருஷனை அடையட்டும்.—என்பதெல்லாம் அவர் எண்ணம். ஆனால் தன் மனைவியிடத்தில் பேசி அவளைச் சமாதானப்படுத்துவதற்கு மட்டும் வேறு காரணத்தையும் காரிய முறையையும் கையாண்டார்.

''இதோ பார், நம்ம நிலை என்ன இப்போது இந்த வருஷமோ அல்லது அடுத்த வருஷமோ பட்டுவின் கலியாணத்தை கொஞ்சம் சுமாராகக்கூட நடத்த நமக்கு சக்தி கிடையாதென்று உனக்குத் தெரியாதா?'' என்று மெள்ள சமாதானமாகப் பேசினார்.

''உங்கள் அண்ணா கையில் அகப்பட்டுக்கொண்டிருக்கும் நிலங்கள்? ஒரு மூட்டை அரிசி ஒரு சேர் புளி ஏதாவது வருகிறதோ அங்கிருந்து? உங்கள் அண்ணாவுக்கு சம்பிரன்னமா உபயோகப் படாது. அதை வித்தோ ஒத்தி வைத்தோ—''

''யாருக்கு? ஊரிலும் சுற்று வட்டாரத்திலும் அண்ணாவுக்குத்தான் செல்வாக்கு அங்கே கடன் வாங்குகின்றது நடக்காது.''

''ஆமாம், இப்பொழுது கள்ளு குத்தகைக்கு காலமில்லையோ. இந்த சாலவேடு

புதயல் என்றும் வருஷத்துக்கு இரண்டாயிரம் ரூபாய் வரும்னு அன்னிக்கி சொன்னீர்களே? இன்ஸ்பெக்ஷன் ஒன்றுமில்லாமல் இந்த ஊரிலேயே மூணு வருஷமிருக்க வைத்தால் திருப்பதி வெங்கடாசலபதிக்குக்கூட அபிஷேகம் செய்து வைப்பதாக வேண்டிக்கொண்டீர்களே ?''

"ஆனல் அதை நம்பி யார் நமக்கு கடன் கொடுப்பா? ''

"எப்படியோ இந்த வருஷம் கலியாணம் பண்ணித் தீரவேண்டும். சோம்பலை தூரக் கட்டி வைத்துவிட்டு இந்தத் தென்னம் பாழ்களை சுற்றுவதிலிருக்கும் அக்கரையில் பத்தில் ஒன்ருவது காட்டி நம்ப ஜில்லாவை ஒரு தரம் சுற்றுங்களே. பி. ஏ. படிக்கிற நல்ல வரனு ஒருவன் கிடைக்காமல் போகமாட்டானு. ஆயிர ரூபாய் வரதக்ஷிணை கொடுத்து பாக்கியை பி. எல். சிலவுக்குக் கொடுப்பதாகச் சொல்வோம்.''

"அடியே பிளான் எல்லாம் நீ ரொம்ப அழகாகத்தான் போடறே. அதிலே உன் தகப்பனுர் சாமர்த்தியம் உனக்கும் கொஞ்சமிருக்கு.''

சுப்ரமணியம் சமயம் பார்த்து போட்ட போட்டில் விசாலம் கொஞ்சம் சாந்தமடைந்தாள். இடது கையால் கன்னத்தை தாங்கிய வண்ணம் கொஞ்சம் பதட்டமற்று நின்ருள். சுப்ரமணியம் நிதானமாக அவள் குறிப்பை அறிந்து மறுபடியும் ஆரம்பித்தார்.

"உன் யோசனை பேஷானதுதான் ஆனல் கள்ளு குத்தகை காலம் மார்ச்சு மாதம்தான் ஆரம்பமாகிறது. ஜூலை கடைசியில்தான் முடிவடைகிறது. வசூலும் கொஞ்சம் கொஞ்சமாக ஜூலை கடைசியிலும் ஆகஸ்ட் முதலிலும் ஆகும். அதற்குள் கலியாணம் பண்ண வேண்டிய மாதங்களும் முடிந்துவிடும்.''

"அப்படியானல் நம்ம துரைச்சுவைப் போய் முதலில் சுற்றிப் பார்க்கச் சொல்லலாமே'' என்று விசாலம் புதுதிட்டம் ஒன்று போட்டாள்.

"நம்ம துரசு! உன் துரசுவைத்தானே சொல்கிருய்? அவன் ஒன்றுக்கும் லாயக்கில்லே விஷயம் தெரிந்த நீ கூட இப்படி—''

புஸ்தகத்தை நெட்ரு பண்ணி பரிக்ஷை பாஸ்பண்ண - வேண்டுமானல் தெரியாமலிருக்கலாம், ஜாதகங்கள் தேட அவனுக்குத் தெரியாதா அதில் அவன் மகா கெட்டிக்காரனுயிற்றே''

"மகா ஊதாரி ஆயிற்றே? அவனிடம் பணம் கொடுக்கலாமோ? காபி கிளப்புக்கும் தாசி வீட்டுக்குந்தான் போதும். ரயிலில் முதல் வகுப்புச் சார்ஜை கணக்கெழுதுவான். தன் நேரத்தையும் நம் பணத்தையும் வீணுக்கி நாலைந்து பொய் ஜாதகங்களை அனுப்பிவிடுவான். முதலில் பட்டணத்திலிருக்கிறபோது அவனை வைத்துக்கொண்டு பட்டபாடு போதும். அவன் சமாச்சாரமே எனக்கு வேண்டாம்.''

"நீங்கள் இப்படிச் சொல்வீர்கள்என்று எனக்குத் தெரியாதா என்ன. உங்களுக்கு நானும் வேண்டாம் என் குழந்தையும் வேண்டாம். நீங்கள் 'ஹாய்யாக' இந்தக் குடிக்காரர்களுடன் கள்ளுக்கடைகளை சுற்றிக்கொண்டிருப்பீர்கள். துரைச்சுவை விட்டால் நமக்கு ஒத்தாசை செய்வான் வேரே யாரும் கிடையாது. நீங்கள் சொல்லுங்கள் வேறே யாரிருக்கிருர்கள் என்று? இல்லாவிட்டால் நானே ஊருக்குப் போய் பொம்மனுட்டி கார்யமா ஏதாவது செய்யணும்.''

"எல்லாம் யோஜித்து அடுத்தவாரம் சொல்கிறேன்.''

ஹாம்லெட் நாடகத்தை பக்தியுடன் படித்து ஷேக்ஸ்பியரில் முதல்தரமாகத் தேரின சுப்ரமண்யமா திடீரென்று ஒரு கார்யத்தில் தீர்மானத்துக்கு வந்துவிடுகிறவர்.

"யோசிக்கப் போகிறீர்களா? அதாவது அதைப்பற்றி ஒண்ணும் யோஜிக்கப் போவதில்லை என்று அர்த்தம். இப்பவே மார்ச்சு பிறந்துவிட்டது. நாளைக்கு நீங்கள் நீண்ட முகாம் போகப்போகிறீர்கள், நூறு கள்ளுக் குத்தகை மனுக்களைத் தூக்கிக்கொண்டு.''

அன்று விசாலாக்ஷி ரொம்பவும் கலங்கிப் போயிருந்தாள். சுப்பிரமணியத்துடன் சண்டை. ஓர் தீர்மானத்திற்கு வந்து விடுவது என்று அவள் நிச்சயம்

செய்துகொண் டிருந்தாள் என்பதை அவர் கண்டார்.

விரலை உதடுகளில் தட்டிய வண்ணம் சுப்பிரமணிய சாஸ்திரி சிறிது நேரம் யோசித்துவிட்டு முகத்தில் விசனத்துட னும் குரலில் கவர்ச்சியுடனும் பேச ஆரம் பித்தார்.

"விசாலம், நீ இன்று ஏதேதோ பேசு கிருய். பட்டுவின் கலியாணத்தைப்பற்றி எனக்கு ஒன்றும் கவலையே இல்லை போல் பேசுகிருய்; உன் கவலை எனக் கில்லையா? பணம் மட்டுமல்ல இப்போது விஷயம்; மற் ருெரு ஆபத்துக்கூட இருக்கிறது. நம் பெண்ணுக்குக் கலியாணம் என்று 'லீவு' எழுதிப் போட்டால், அது கிடைத்து விடுகிறது என்றே வைத்துக்கொள்வோம் நிச்சயம் என்னை ஒரு பொட்டலுக்கு மாற்றிவிடுவார்கள். சாலவேடு வரும்படி யும் போச்சு. தூலா் ரேன்ஞ் சப்இன்ஸ் பெக்டர் செய்டின்களும், பெங்ளூர் புடவை யும் கையில் வைத்துக்கொண்டு இந்த இடத்துக்கு வர பிரயத்தனம் செய்வ தாகக் கேள்வி. லீவிலிருந்து திரும்பி வரும்பொழுது கொசுவும் மலேரியாவும் நிறைந்த ஜவாதி மலையடிவாரத்தில்தான் ஏதாவது ஒரு இடம் கிடைக்கும்."

விசாலாக்ஷிக்குக் கோபத்தால் முகம் சிவந்தது.

"உங்கள் ஆட்சேபனைகளுக்கும் கார ணங்களுக்கும் முடிவே யில்லை. உங்களைத் தெரியாதா என்ன எனக்கு, நீங்கள் ஒன் றும் செய்யமாட்டீர்கள், வீடுபற்றி எரிந் தால் கூட மேஜையண்டை உட்கார்ந்து கணக்குப் போட்டுக்கொண் டிருப்பீர்கள். தூரச்சுவுக்கு தந்தி அடிக்கிறேன். நீங் கள் காபியை நிரைய குடித்துக்கொண்டு இங்கேயே கணக்குப் போட்டுக்கொண்டு உட்கார்ந்து இருங்கள்."

"எதற்காக இப்படிப் பிடிவாதம் பிடிக் கிருய்; இப்போது என்ன அவசரம்? குழந்தை இன்னும் கொஞ்சம்தான் வள ரட்டுமே? கலியாண மென்ருல் விவரம் தெரிய வேண்டாமா?"

இதற்கு மேல் விசாலாக்ஷி வேறொன் றும் பேசவில்லை. அவள் வெகு நேரமாக கையில் காப்பியுடன் ரேழியில் நின்று கொண் டிருந்தாள். அந்த வருஷம் பட்டு வுக்குக் கலியாணம் செய்ய தன்னுல் ஆன பிரயத்தனம் செய்வதாக புருஷனிட மிருந்து வாக்கு வாங்கிக்கொண்டுதான் காபி டப்ளரை அவரிடம் கொடுப்பாள் போலிருந்தது. இப்பொழுது அவளுக்கு வெகு கோபம் வந்துவிட்டது. லோடாவை 'லொட்' என்று திண்ணையின் மீது வைத்து கோபமாக புருஷன் பக்கம் தள்ளி ஞள். அதென்ன பொம்மை மோட் டாரா? லோட்டாக்களுக்குச் சக்கரங்கள் இல்லாததால் கோபம் கொண்ட புருஷன் மனைவிகளுக்கும் அவற்றிற்கும் ஒத்துக் கொள்வதில்லை. இந்த லோட்டா முகம் கீழாக உருண்டு விழுந்தது. காபி அவர் பக்கத்தில் ஒரு சிறு தாரையாக ஓடி சின்ன நீர் வீழ்ச்சி போல திண்ணையி லிருந்து கீழே விழுந்தது. லோடா ஒரு சுற்று சுற்றிவிட்டு நின்றது.

முத்தத்தில் உட்கார்ந்து ஒரு படப்புத்த கத்தை கையில் வைத்துக்கொண்டு ஆழ்ந்து பார்ப்பதுபோல் உட்கார்ந்திருந் தாள் பட்டு! ஆனுல் உண்மையில் அந்த சம்பாஷணையைத் தான் கேட்டுக் கொண்டிருந்தாள். சுப்பிரமணியம் கர் வத்துடனும் சந்தோஷத்துடனும் அவ ளைப் பார்த்தார். முகச்சாயலும் நிறமும் அவர் போலவே இருந்தது.

காபிப்ரவாகமும் லோடாவின் சுழலும் சேர்ந்து அப்பொழுதே ஒரு தீர்மானத்தை ஏற்படுத்திவிட்டன. விசாலாக்ஷி அதற்கு முன் அவ்வளவு முறட்டுத்தனமாகவும் கலக்கம் கொண்டவளாகவும் இருந்ததே கிடையாது. ஆகையால் பெண்மையின் இந்த பெருத்த கோபத்திற்கும் பட்டுவின் கலியாணத்தைப்பற்றி அவசரத்தையும் ஆண் தன்மைக்கு அரிமுகமாகாத ஏதோ ஒரு காரணமிருக்கவேண்டுமென்று அவர் எண்ணினுர். அந்த சூசனையை அறிந்து அவர் உடனே படிந்துவிட வேண்டுமென தீர்மானித்தார் காபியின் தாரை அழகாக வளைந்து பூமியில் வீழ்வதை கவனித்த வண்ணம்.

## 3

பிரசித்திப்பெற்ற சாலவேடு சர்கிள் கள்ளுக்குத்தகை காலத்தின் முழுபலனை யும் சுப்ரமணியம் அடையவில்லை. பெண் ணின் கலியாணத்திற்காக அவர் 'லீவு'க்கு எழுதிவிட்டார் என்பது எப்படியோ வெளியாகிவிட்டது. மோப்பம் பிடித்துத் திரியும் அந்த ஆறு சேவகர்களுக்கும் தங்கள் வேலையை லாபம் காட்டும் குடும்ப ரகஸ்யங்களை எப்படியாவது வெளியேற்று வதைத் தவிர வேறென்ன வேலை.

அந்த சமயத்தில் சப் இன்ஸ்பெக்டர் மாறுவதுதானே கள்ளுக் கடைக்காரர் களுக்கு லாபம். அவ்வளவுதான். மாமூல் களை அடுத்த தவணையில் கொடுப்பதாக வெகு நயமாக வாக்குறுதிகள் அளித்து நிறுத்திக்கொண்டார்கள். ஆனால் சாமர்த் தியமாக நெருக்கி சுப்ரமணியம் ஐந்நூறு ரூபாயுக்குமேல் எப்படியோ வசூல் செய்துவிட்டார்.

“தஞ்சாவூர் ஜில்லாவை சுற்றி அலைந்து மாப்பிள்ளை தேடும் செலவுக்குக்கூட காணாது ஐநூறு ரூபாய். இன்றும் மோசம் போகவில்லை. இப்பொழுதும் லீவு வேண்டாமென்று சொல்லி சாலவேட்டி லேயே இருந்துவிடலாம்” இந்தமாதிரி சுப்ரமணியம் விசாலக்ஷியுடன் மற்றொரு நாள் பேசிப்பார்த்தார். ஊர் வாய் திறந்து பழிபேசுமுன் குழந்தைக்குக் கலியாணம் செய்துவிட வேண்டும் என்று ஒரு தாய் படும் கவலையும் துக்கமும் ஊர் சுற்றும் சப் இன்ஸ்பெக்டருக்கு என்ன தெரியும். அடகுவைத்து பணம் கேட்ப தற்கு தன் நகைகள் பூராவும் கொடுப்ப தாகச் சொல்லி விசாலக்ஷி புருஷன் வாயை அடைத்துவிட்டாள். அடுத்த குத்தகை காலத்தில் மீட்டுக் கொள்ளலா மென்றும் சொன்னாள். அந்த மாதிரி தியா கத்தையும் சிரத்தையையும் கண்டு எந்த புருஷன் என்ன சொல்ல முடியும்.

ஆகவே பட்டுவிற்கு புருஷன் தேடு வதற்காக ஒருவித குதூகலத்துடனேயே சுப்ரமணியம் சாலவேட்டை விட்டுப் புறப் பட்டார். கொஞ்ச நாள் முன்பாக அவ ருடைய மைத்துனன் ஐம்பது ரூபாய் மணியாடரைப் பெற்றுக்கொண்டு பதிலாக நாலு ஜாதகங்களை அனுப்பியிருந்தான். அதில் இரண்டு படு கிழங்கள் மூன்றும் கல்யாணம். சொத்துத் தெரியாது கடன் தெரியும் பார்க்காத கடைகளையும் தோப்பு களையும் பார்த்ததாக அவன் சாமர்த்திய மாக ஜோடனைசெய்து எழுதியிருந்த குறிப்புகள் அடங்கி இருந்த டையிரியை யும் அந்த ஜாதகங்களையும் வைத்துக் கொண்டு விசாலக்ஷி பட்டு சகிதம் சுப்ர மணியம், தன் கிராமம், ஆலங்காட்டுக்கு வந்து சேர்ந்தார்.

ஆலங்காடு காவேரிக்கரையிலுள்ளது. விசாலக்ஷி அங்கே போய் பனிரண்டு வருஷங்களுக்கு மேலாகிறது. அங்கே முக்கியமாக சிந்திக்கவேண்டிய விஷயம் அவளுடைய ஓரகத்திதான். புருஷனைப் போல மனைவியும் கைகாரி. அவள் ஒரு கிராமாந்திரத்தின் மலடு. விசாலக்ஷியின் நகைகளையும், பெண்ணையும் பையனையும் கண்டு அவள் பொறுமையால் பொரு மினாள். அது ஒரு கூட்டுக் குடும் பம். வீட்டுக்குப் பெரியவளான கிழ விக்கு கிட்டே இருந்த பெரிய பிள்ளை மேல்தான் பிரியம். அதாவது அவன் ப்ரீ தியை சம்பாதித்து வைத்துக்கொள்வது தான் தனக்கு நல்லது என்பது அவள் கருத்து. அவள் தைரியத்தில் நில வருமா னத்தை பூஜ்யக் கணக்காக எழுதி தம் பிக்கு வருஷா வருஷம் அனுப்பிக் கொண்டே வந்தான் அண்ணா கொஞ்சம் கூட தயக்கமின்றி.

பட்டுவுக்குக் கலியாணம் ஆகவேண் டுமே. சாலவேடு பொட்டலில் வந்து கலியாணம் செய்துகொள்ள எந்த மாப் பிள்ளை சம்மதிப்பான். அதற்காக ஓரகத் தியின் 'அழிச்சாட்டியம் பூராவையும் எப் படியாவது ஒரு மாதத்திற்குத் தாங்கிக் கொள்வது' என்று விசாலாக்ஷி தீர்மா னித்தாள். ஆனால், வந்த தினமே ஓர கத்தி சொன்ன ஓர் இரு வார்த்தைகளி லிருந்தே அவளுக்கு திகில் பிடித்துவிட் டது. “பட்டுவோ தளதளவென்று நல்ல அங்க மோப்புகொண்டிருந்தாள். 'ஆங்கா ரத்தில்' வேண்டுமென்றே அவள் ஆலங் காட்டு வம்பிகளிடம் 'பட்டு பெரியவளாகி

விட்டாள்' என்று ஒரு வார்த்தை சொல்லி வைத்தால் குடி முழுகிப்போகுமே.''

எனவே வருஷம் இரண்டாயிரம் ரூபாய் வரும்படியுள்ள சால்ட் சப் இன்ஸ்பெக்டர் அவ்வளவு சாதாரணமான மனிதனல்ல என்றவாறு நடந்துகொள்ளும்படி தன புருஷனைத் தூண்டினாள். தான் வயதுவந்துவிட்ட பெரியவன் என்பதை அண்ணா முன்பு ஸ்தாபிக்கவும், சுப்ரமணியம தன்னாலானவரை செய்தார். ஆனி மாசம் எப்படியாவது கல்யாணமாகி தீபாவளிக்கு மாப்பிள்ளை சாலவேட்டில் வர வேண்டும் என்று விசாலாக்ஷியும் குலதெய்வமாகிய சுவாமிநாத சுவாமிக்கு வேண்டிக்கொண்டாள். ஒரு தேங்காய் உடைக்கிறேன் என்று வேண்டிக்கொண்டு எவ்வளவு வரங்களைத்தான் கேட்கலாம். ஆனால் பிரம்மசாரியான விக்னேஸ்வரர் மட்டும் இந்தப் பெண்பிள்ளைகளின் வலைக்கு சிக்கமாட்டார்.

## 4

சுப்ரமணிய சாஸ்திரிக்கு அது மிகவும் நெருக்கடியான மாதம்தான். கைக்கொண்ட கார்யத்தில் தீவிரமாக முனைந்தார். தொழில் பழக்கத்திலேயே அவர் கார்யவாதிதானே: ஏககாலத்தில் இரண்டு வேலை செய்யமுடியாது. அவ்வளவுதான். கள்ளுக் குத்தகை மனுக்களையும் ஜாதகங்களையும் ஒரே சமயத்தில் கவனிக்கமுடியாது. ஆனால் சென்ற பதினைந்து வருடங்களாக தன் ஜில்லாபக்கமே வந்தது கிடையாது. அதனால் கொஞ்சம் க்ஷீணமடைந்த போதிலும் மிகவும் நாஸூக்கான அந்த ஜில்லாவின் பழக்கவழக்கங்களின் நுணுக்கங்கள் அவருக்கு அவ்வளவாகத் தெரியாது. இன்று மத்ய ஐரோப்பாவில் ஏற்பட்டிருக்கும் அரசியல் சிக்கல்கள் போன்றது அந்த ஜில்லாவின் நாகரீகமான ராஜதந்திர முறைகள். கலியாணப் பேச்சு சம்பந்தமாக நயங்களும் சாதூர்யங்களும் கூட அவருக்குத் தெரியாது. எனவே மனதிற்குப் பிடித்தமில்லாமலேயே அவர் மைத்துனரின், வெகு சாதுர்யமான கைங்கர்யத்தை ஏற்றுக்கொள்ளவேண்டியதாயிற்று. தஞ்சாவூர் ஜில்லா நடைமுறைகளிலும் நயத்திலும் அவன் கைதேர்ந்தவன். துரச்சு அத்திம்பேரை ஒவ்வொரு ஊருக்காக கூட்டிக்கொண்டுபோனான். வழியில் பார்க்காத நாடகங்கிடையாது. கேட்காத சங்கீதக் கச்சேரி கிடையாது. நடுவில், பிரபலமாகிக் கொண்டுவரும் சில அழகிய தாசிகளும் விட்டுப்போகவில்லை.

நாள் நாளாக ஜாதகம் தேடுவதுதான் பார்ப்பதுதான். ஆனால் ஒரு ஜோஸ்யன் சொன்னதை மற்றொருவன் சொல்வதில்லை. அவ்வளவு கிரகங்கள் அவ்வளவு தினுசாகப் பார்வைகள் பார்த்து மூளையை கலக்கினால் அவர் என்னதான் செய்வார். பூமியில் ஊரும் மனிதப் புழுவுக்கு எந்தக் கிரகம் தன்னுடைய தசா பலத்தை உண்மையாக உரைக்கிறது. அலசித்தேடினமட்டில் பட்டுவுக்கு ஒரு புருஷன் தமிழ் நாட்டில் பிறந்திருப்பதாக சுப்ரமணியத்திற்கு படவில்லை! ரூபாயிக்கு ரூபாய் சேர்ந்து சிலசமயம் செல்லாததற்கு நல்ல ரூபாய் சேர்ந்து இருக்கும்சொத்து இரட்டிப்பாதாயிருந்தலொழிய கலியாணமாக வேண்டி எந்தப் பையனும் பெண்ணைப் பற்றி கவலைப்படுவதாகவே தெரியவில்லை.

## 5

இந்த அலைச்சலிலும் ஆராச்சியிலுமாக சுப்ரமணியம் வைத்திருந்த ஐநூறுரூபாய் ஐம்பது ரூபாயில் வந்து நின்றது. லீவு முடிந்ததும் சாலவேட்டிற்கு திரும்பி ஓடுவதற்குத்தான் அது போதும். ஆனியில் இருபது நாட்கள் போய்விட்டன. பட்டுவிற்குக் கலியாணமாக வேண்டுமென்றால் ஒரு பூரா கள்ளு குத்தகை காலமும் அதன் வருமானமும் செலவழிந்தால்தான் முடியும், என்பது சுப்ரமணியத்திற்கு அப்பொழுதுதான் அனுபவ பூர்வமாகத் தெரிந்தது. கலியாணம் என்ற புனிதமான ஏற்பாடு தமிழ்நாட்டில் இவ்வளவு கேவலமான நிலைமைக்கு வந்ததும் சர்க்கார் உத்யோகஸ்தன் அதை நடத்துவது இப்படி அசாத்தியமாகப் போய்விட்டது, கல்வி கேள்வி நிறைந்த அவர் மனதிற்கு விகாரமாகப்பட்டது.

ஆனி மாதம் இருபத்தைந்தாம் தேதி பொழுது விடிகிற நேரதில் சுப்ரமணியம்

# யுத்தகால முதலீடுகள்!

யுத்தமும் அதன் விளைவான பொருளாதார நெருக்கடிகளும் அசாதாரண சம்பவங்கள் அல்ல. ஆனால் அவை மனிதவர்க்க சரித்திரத்தில் தோன்றி மறையும் அம்சங்கள். அவை லைப் இன்ஷ்யூரன்ஸ் பாலிஸியைப் பாதிக்க முடியாது. லைப் இன்ஷ்யூரன்ஸ் பாலிஸியின் மதிப்பு ஸ்திரமானது, ரொக்கமாக மாற்றக்கூடியது; கடன் வாங்கவும் பொருத்தமானது ; லாபம் ; வருமான வரி விலக்கு உண்டு ; இதனால் யுத்த காலத்தில் மற்றெதிலும் முதல் போடுவதை விட லைப் இன்ஷ்யூரன்ஸ் மிகச் சிறந்தது.

சிறுகச் சிறுகத் திரண்டுள்ள ஏராளமான லைப் பண்ட்கள், சிலாக்கியமான முறையில் உபயோகிக்கப்படும் ஆஸ்திகள் இந்தியா எங்கும் கிழக்கிலும் விஸ்தரிப்புள்ள ஸ்தாபனம் உடைய ஹிந்துஸ்தான் கடந்த காலத்திலும் இப்பொழுதும் எல்லா நெருக்கடிகளையும் வெற்றிகரமாக சமாளிக்கக்கூடிய சக்தி வாய்ந்ததாகும். அதன் பாலிஸிகள் பந்தோபஸ்தானவையும், சிலாக்ய மானவையும், லாபகரமானவையுமாகும் ; ஒவ்வொரு தேவையையும் பூர்த்தி செய்யக் கூடியவாறு பலதரப்பட்டதுமாகும்.

---

நம்பிக்கையான சேவைக்குப் பிரக்யாதி வாய்ந்தது

## ஹிந்துஸ்தான் கோவாப்பரேடிவ் இன்ஷ்யூரன்ஸ் சொஸைட்டி லிமிடெட்.

ஹெட் ஆபீஸ் :
"ஹிந்துஸ்தான் பில்டிங்ஸ்"
6-ஏ, சுரேந்திரநாத் பானர்ஜி ரோடு, கல்கத்தா.

சென்னை பிராஞ்சு :
"ஹிந்துஸ்தான் பில்டிங்ஸ்"
அரண்மனைக்கார தெரு, சென்னை.

வீடு திரும்பினர். வாசலில் பட்டு, அவளுடைய அழகுக்கு ஒரு நிகர் என்று சொல்லக்கூடிய விசித்திரக் கோலங்களைப் போட்டுக்கொண்டிருந்தாள். தகப்பனரைக் கண்டதும் மெதுவாக கவலை கொண்ட புன்சிரிப்பு சிரித்தாள். அவளுடைய அதிர்ஷ்டத்தைப்பற்றி வாய் கேட்காத ஒரு கேள்வியை அவள் கண்கள் கேட்டன. பருவத்தில் பழுத்து நிற்கும் பெண் மாதுளை போலும் நின்றாள் அவள், அவரைப் பார்த்தவண்ணம். அந்தக் கனகக் காக்ஷியைக் கண்டு சுப்ரமணியம் அப்படியே குன்னிப்போய்விட்டார்.

வெகு கூர்மையான விஷமக் கண்களை சிமிட்டிய வண்ணம் அவர் தமயனர் வெளியே வந்தார். இந்தக் கலியுகத்தில் பிள்ளை பெறுவதே துர்பாக்கியம் என்ற கொள்கையுடன்தான் பிள்ளை பெறவில்லை என்பதுபோல் அவர் பேசுவது வழக்கம். நீண்ட ஆபீஸ் கவர் ஒன்றை சுப்ரமணியம் கையில் கொடுத்தவண்ணம் அவர் பேசலானர்.

"சுப்பு என்பேரில் பிசகில்லை நான் செய்ய வேண்டியதைச் செய்துவிட்டேன். கலியாணத்திற்கு வேண்டி சகல சாமான்களையும் சேகரித்துவிட்டேன். பந்தலுக்கு வேண்டிய ஐம்பது சவுக்கக்கழிகளும் மூவாயிரம் கீத்துகளும் வந்துவிட்டன. ஒரே நாளில் முப்பதுகலம் நெல்லை அரைத்துவிட்டேன். சமயல்காரன் மேளக்காரன் எல்லோரையும் பேசி வைத்துவிட்டேன். பூதலூர் வரனை நிச்சயம் பண்ணிவிட்டாயோ இல்லையோ? நம்ப பட்டுவுக்கு அவன்தான் சரியான பையன். நமக்குக் கொஞ்சம் மேல் சம்பந்தம்தான். ஆனி முப்பத்தொண்ணில் தானே முகூர்த்தம்?"

அந்தப் பேர்வழி வாழ்க்கையில் நன்றாக அடிபட்டவர். பிறர் கஷ்டங்களை கண்ணாரக் கண்டு மகிழ்வதில் தீரன். வெகு சாமர்த்திய மாகப் பேசுபவர். ஏனென்றால் சுப்ரமணியத்தின் முகக் குறிப்பிலிருந்தே அறிந்துவிட்டார். ஆபீஸ் கடிதத்தையும் படித்து அர்த்தம் சொல்லச் சொல்லி கேட்டுக்கொண்டுவிட்டார்.

ஆரணி சர்கிளில் இருந்துவந்த ஆபீஸ் உத்திரவு பின்வருமாறு:—

சாலவேடு ரேன்ஞ் ஆராம் கிரேட் சப் இன்ஸ்பெக்டர் சுப்ரமணியம் போளூர் சர்கிள் மூலக்காடு ரேன்ஞ்சுக்கு மாற்றப் பட் டிருக்கிறார். லீவு தீர்ந்ததும் போய் ஒப்புக்கொள்ள வேண்டியது.

ஆமாம், மூலக்காடு பேரிலேயே தெரிகிறதே? ஜவாதி மலையடிவாரத்தில் கொசுக்களும் மலேரியாவும் நிறைந்த இடம். சென்னை சர்க்காரின் ஆப்காரி இலாகாவில் வேலை செய்யும் சப்இன்ஸ்பெக்டர்களில் உணர்வே மழிங்கிப்போனவன் கூட மூலக்காடு என்கிற பெயரைக் கேட்டாலே தூக்கி வாரிப்போட்டு திகிலடைவான்.

---

(7-ம் பக்கத் தொடர்ச்சி)

வேண்டிய ஏற்பாடுகளை யெல்லாம் ரஷ்யா செய்திருப்பதாகத் தெரிகிறது. பிரிட்டனுக்கு ஆசை வார்த்தை காட்டி. சும்மாவிருக்கச் செய்து ரஷ்யாவை முழு பலத்துடன்தாக்க நாஜிகள் விரும்பினர். ஆனல் இது தன் கழுத்துக்கே சுருக்காக முடியும் என்று தெரிந்துகொண்ட பிரிட்டன், ரஷ்யாவுடன் ராணுவ உடன்படிக்கையை செய்து கொள்ளுந் தருவாயில் இருந்து வருகிறது. ரஷ்ய யுத்தத்தின் விளைவாக, கீழ்க் கோடியில் ஜப்பான் புது திசைகளில் ஆக்கிரமிக்கக் கூடிய அபாய நிலை ஏற்பட்டிருக்கிறது. அமெரிக்காவும் ஐரோப்பாவை நெருங்கி வந்துகொண்டிருக்கிறது. ஐரோப்பிய யுத்தம் எங்கும் வியாபிக்கும். மாபெரும் உலக யுத்தமாக மாறும் தருவாயில் இருக்கிறது. அது எப்படி உருவாகும் என்பது ரஷ்யா எதிர்த்து நிற்கக் கூடிய காலம், பிரிட்டன் வேகமாய் ஆயுதங்களை தயாரித்து தாக்குதலுக்கு ஆயத்தமாவது — இரண்டையும் முக்கியமாய் பொறுத்திருக்கும் (12-7-41)

# 'வளர்பிறை'

[ரா. ஸ்ரீ. தேசிகன், எம். ஏ.]

பகவானுடைய விக்கிரமம் ஒன்றொழியாமல் மனச் சுவரிலே எழுதிக்கொண்ட பெரியாழ்வார் கிருஷ்ணனுடைய பாலியச் சேஷ்டைகளிலே ஈடுபடுவானேன், என்ற கேள்வியை ஒருவர் கேட்கலாம். அதற்கு நான் கண்ட அளவிலே பதில் கூறுகிறேன். இப் பதில்தான் நிச்சயமான பதில் என்று சொல்லுவதற்கில்லை; ஏனெனில் ஆழ்வாருடைய உண்மையான சரித்திரம் நமக்குக் கிடைக்கவில்லை. கர்ண பரம்பரைக் கதை யுலகத்தில் நடக்கிற பொழுதெல்லாம் பனிபடர் அந்திப் பொழுதின் மங்கலான ஒளியில் நடக்கிற உணர்ச்சிதான் வரும். நமக்கு ஆதாரமாயுள்ளவை அவர் பாடல்கள் தான். அவைகளிலிருந்து அவருடைய சரித்திரத்தின் போக்கை ஒருவாறு ஊகிக்கலாம்.

"தோட்டம் இல்லவன் ஆத்தொழு ஓடை
 தடவையும் கிணறும் இவையெல்லாம்
வாட்ட மின்றி உன்பொன்னடிக் கீழே
 வளைப்பகம் வகுத்துக் கொண்டிருந்தேன்"

இவ்வரிகளை நோக்கினல் ஆழ்வார் ஒரு துறவியில்லை, மனைவியோடு இல்லறம் நடத்திவந்தார் என்பது புலனாகும். தோட்டத்தில் பூக்கொய்து பகவானுக்கு அர்ப்பணஞ் செய்கிற கைங்கர்யத்தில் மனையாளோடு தம் வாழ்நாட்களை இன்பமாகக் கழித்து வந்தார். தம்முடைய உடல், பொருள் ஆவியை பகவானுக்கு அர்ப்பணஞ் செய்தாலும், தம் இல்லாள் வயிற்றில் குழந்தை பிறக்கவில்லையே என்ற தாங்கல் இருந்திருக்க வேண்டும். ஒரு குழந்தையின் இன்பக்குரல் அவர் வீட்டில் எழவில்லை. குழலையும் யாழையும் வெல்லுகிற குழந்தையின் மழலை முற்றாத மென் சொல் கேட்காது மனம் ஏங்கியிருப்பார். மனத்தில் குழந்தையின் எண்ணிலாத விசித்திர சேஷ்டைகளை நடித்திருப்பார் என்று தோன்றுகிறது. அவருடைய தோட்டத்தில் ஒரு குழந்தையை யாரோ கொண்டுபோட்டார்கள். அக் குழந்தையின் எழிலில் ஈடுபட்டு அதை எடுத்து வளர்த்து வந்தார். அவர் இருள் அடைந்த வீட்டில் தோன்றிய வளர்பிறைச்சந்திரன், குழந்தை ஆண்டாள்தான்.

குழந்தை ஒரு பெரிய பெண்ணாக வளர்ந்தது. ஒரு பறவைபோல் அழகிய பாடல்களைப்பாடி மறைந்து விட்டது. குழந்தை வந்ததும், பெரியாழ்வார் வீட்டிலே ஒரு தனிச் சோபை எழுந்தது; அக் குழந்தை போனதும், அச் சோபையும் நீங்கிற்று. அவர் இல்லத்தின் மீது ஓர் இருள் கவிழ்ந்து விட்டது. அவ்வீருட்டில் ஓர் உருவங்காணாது, ஓர் ஒலிகேளாது திகைத்து ஏங்கிப் பாடுகிறார் ஆழ்வார்

"ஒருமகள் தன்னை யுடையேன் உலகம்
 நிறைந்த புகழால்
திருமகள் போல வளர்த்தேன்
 செங்கண்மால் தான்கொண்டுபோனான்"

உள்ளத்திலே வெகுநாளாய்க் கிடந்த உருவங்களையும் தோற்றங்களையும் இக் குழந்தையின் தெய்வீக உருவம் தட்டிக் கிளப்பி விட்டன. அவைகள் ஆழ்வார் பாடல்களில் அநேக அழிவிலாச் சித்திரங்களாய் அலர்ந்துவிட்டன.

குழந்தை பிறந்தது முதற்கொண்டு, ஆடுமாடு மேய்க்கிற பிராயம் வரையில் கண்ணன் சேஷ்டைகளைப் பல சித்திரங்களில் தந்திருக்கிறார். பெரியாழ்வார் அவருடைய கண்கள் நுட்பமான விஷயங்களைத் துருவி ஆராய்கின்றன. உதாரணமாக: குளிப்பாட்டுகிறபொழுது குழந்தைக்கு நாக்கு வழிக்கிற சம்பிரதாயத்தை இவர் கவனித்திருக்கிறார். குளிப்பாட்ட நீர் வைத்திருந்தால் அதைக் கவனிக்காமல் அங்கும் இங்கும் ஓடுகிற குழந்தைகளின் சித்திரம் நம் முன் எழுகிறது. நம் மகத்து கோபுவும், பாலுவும் இப்படித்தான் படுத்துகிறார்கள் என்று நாம் நினைக்கிறோம்.

தாயார் பரிந்து பேசுகிறது நம் மனத்தை விட்டு அகலாது.

"குடையும் செருப்பும் கொடாதே..." என்ற வரியில் எப்படித் தாயின் அன்பு ததும்புகின்றது பாருங்கள்.

"ஆடி அமுது செய் அப்பனும் உண்டிலன்......" என்ற சொல்தான் எப்படித் தந்தையின் அன்பை முரசடிக்கிறது நோக்குங்கள்.

"சிற்றாடையும் சிறுப்பத்திரமும் இவை கட்டிலின்மேல் வைத்துப் போய்" என்ற அடியில் ஆழ்வாரின் கூர்மையான திருஷ்டியைப் பார்க்கிறோம். அவருடைய கண்கள் கண்ணன் கட்டிலுக்கு விரைந்து போய்க் கட்டிலின்மீது வைக்கப்பட்டிருக்கிற சிறிய உடையையும், அம்பையும் கண்டு களிக்கின்றன.

இத்தனை இயற்கைமணம் கமழும் பாடல்களைப் பார்ப்பது அரிது. பிள்ளைத் தமிழ்ப் பாடல்களுக்குக் கங்குகரையில்லை. ஆனால் பாலிய சேஷ்டைகளை வர்ணிக்கிற நிலையில் அதுவும் தெய்வங்கள் பாடல்களுக்கு விஷயங்களாய் விட்டால், வெறுந் தோத்திரங்களாய்ப் போய்விடுகின்றன. "மீனாட்சி அம்மை பிள்ளைத் தமிழில்" சொல்நயத்தைப் பார்க்கிறோம். ஆனால் பெரியாழ்வாரின் இயற்கைச் சித்திரங்கள் போல வேறு பிள்ளைத் தமிழ்ப்பாடல்களில் இல்லையென்றே சொல்லிவிடலாம்.

குமர குருபர சுவாமிகள் எழுதிய பிள்ளைத் தமிழில், காணப்படுகிற "நிலவு விரிந்திடு குறுநகை 'மழலை ததும்பு பசுங் குதலை' பாயிருட் படலங் கிழித்தெழு சுடர்ப் பருதி" "புதையிருள் கிழிதர வெழுதரு பருதி" முதலிய பதரசனைகள் நம் மனத்தைக் கவராமற்போகா. வெறும் பதரசனைகள்மட்டும் போதுமா? பதரசனைகள் இயற்கைச் சித்திரங்களை எழுப்பினால் தான் அவைகளுக்கு ஒரு சோபை உண்டு; ஒரு பிரயோஜன முண்டு.

பெரியாழ்வார் பாடல்களில் அநேகமாய் இயற்கைச் சித்திரங்கள் அமைந்துகிடக்கின்றன என்று சொல்லிவிடலாம். ஆனால் தாயுக்கும் குழந்தைக்கு முள்ள சம்பந்தத்தை வர்ணிக்கிறபொழுது, 'அடியேன்' என்ற தாஸபாவம் தன்னறியாமல் பாட்டில் வந்து விழுந்து விடுகிறது. கிருஷ்ணனுடைய பாலிய லீலைகளைச் சித்திரிக்கிற விஷயங்களில் ராமனைக் கூப்பிடுகிறார்.

"என் சிற்றயர் சிங்கமே!
சீதை மணாளா!
சிறுக் குட்டச் செங்கண்மாலே!"

இத்தொடர்கள் கலாரசத்திற்கு முரண்பாடென்பதில் சந்தேகமில்லை. இதுமாதிரி அசந்தர்ப்பமான தொடர்களைத் தவிர, மற்ற இடங்களில் இயற்கைச் சித்திரங்களைப்பார்க்கிறோம்.

குழந்தைகளின் வெளிப்படையான சேஷ்டைகளைச் சித்தரிக்கிற படியால், அவைகள் உள்ளவாறு அமைந்து கிடக்கின்றன. குழந்தைகள் பேசுவதாகக் கவி பேசத் தொடங்கினால் குழந்தைகளின் அனுபவம் வருவதற்கு இடமில்லாமற் போய்விடும். குழந்தைகள் மூலம் கவி பேசுவதாகத்தான் முடியும். குழந்தையின் உணர்ச்சிகளைச் சித்திரிக்க வேண்டிய கற்பனையை வைத்துக்கொண்டு, மற்ற உணர்ச்சிகளிலிருந்து விலகிவிடவேண்டும் அது சாதாரண காரியமில்லை. ஒரு பெரிய கவிக்குத்தான் அது சாத்தியம். கவி ரவீந்திரர் குழந்தையைப்பற்றிப் பேசுகிறபொழுது சித்திரங்கள் ஒழுங்காய் அமைந்து கிடக்கின்றன. குழந்தைகளையே பேசவைக்கிற சந்தர்ப்பங்களில் கவியினுடைய சாமர்த்தியத்தைப் பார்க்கிறோம். குழந்தைக்கும் இவ்வளவு கற்பனை இருக்குமோ என்ற வியப்புத்தான் வருகிறது.

'மலர்ப்பள்ளி' (Flower - School) என்ற ரவீந்திரரின் பாட்டை ஆராய்வோம்.

புயற் காற்று மேகங்கள் விண்ணில் குமுறுகின்றன. ஆனி மழையும் அடிக்கின்றது. நீர் தோய்ந்த கீழ்க்காற்று மைதானத்துமீது விரைந்து போய் மூங்கிற் காடுகளில் புல்லாங்குழல் வாசிக்கிறது.

எங்கிருந்து வருகிறதென்று ஒருவருக்கும் தெரியாது: திடீரென்று கூட்டங் கூட்டமாய்ப் புஷ்பங்கள் வெளியிலே வந்து அதிக உவகை வெறியில் புல்லின்

மீது நடனமாடுகின்றன. இக்காட்சியைப் பார்த்த குழந்தை சிந்திக்கிறது.

"அம்மா, இந்தப் புஷ்பங்கள் கீழே தரைக்கடியே உள்ள பள்ளிக்கூடத்தில் வாசிக்கின்றன. கதவுகளைச் சாத்திக் கொண்டு அவைகள் பாடங்கேட்கின்றன. பள்ளிக்கூடம் விடுவதற்கு முன் அவைகள் வெளியிலே ஓடப் பார்த்தால் அவைகளின் உபாத்தியாயர் ஒரு மூலையிலே நிறுத்திவைத்துவிடுகிறார்."

மழை பெய்கிறபொழுது அவைகளுக்கு விடுமுறை நாட்கள்.

காட்டிலே கிளைகள் ஒன்றுக்கொன்று உராய்கின்றன. இலைகள் கடுங்காற்றில் சல சலவென்று ஆடுகின்றன. பேர் இடி மேகங்கள் தங்கள் பூதக் கைகளைக் கொட்டுகின்றன. மலர்க் குழந்தைகள் ஊதா, மஞ்சள், வெள்ளை அங்கிகளை அணிந்துகொண்டு வெளியிலே விரைந்து வருகின்றன.

அப்பொழுது குழந்தை கேட்கிறது:—

"அம்மா, அவைகளின் வீடு அதோ வானத்தில் நக்ஷத்திரங்கள் தெரிகிறதே அந்த இடத்தில் இருக்கிறது உனக்குத் தெரியுமோ?

"எத்தனை வேகமாய் அங்கே போவதற்கு அவைகள் பார்க்கின்றன, எதற்காக அவ்வளவு வேகத்தில் அவைகள் இருக்கின்றன தெரியுமோ?

"எனக்குத் தெரியுமே. என் தெரியுமா? அவைகள் யாருக்குத் தங்கள் கைகளைத் தூக்குகின்றன? என்னைப்போல அவைகளுக்கும் ஓர் அம்மா இருக்கிறாள்."

இப் பாட்டில் கவிதாகூரின் கற்பனைச் செல்வத்தைப் பார்க்கிறோம். இத்தனைச் செல்வம் ஒரு குழந்தையிடம் காண முடியுமா? மேலும் விஷயத்திற்கு விஷயம் சங்கிலிப் பிணைப்பில் ஒழுங்காய்க் குழந்தையின் மனம் செல்லுமா? இங்கே குழந்தையை வியாஜமாக வைத்துக் கொண்டு தம் கற்பனையைத் தான் காண்பிக்கிறார் கவி. எடுத்துக்கொண்ட விஷயத்திற்கும் கலா ரசத்திற்கும் பொருத்தமாயில்லை. ஆனால் 'போஸ்டாபீஸ்' என்ற நாடகத்தில் குழந்தைகளின் பேச்சுக்களில் இயற்கை மணம் வீசுகிறது. குழந்தை தயிர் விற்க ஆசைப்படுகிறது; பூ விற்க ஆசைப்படுகிறது.

பெரியாழ்வார் குழந்தைகளின் சேஷ்டைகளை ஒரு தாய் மூலமாக வெளியிட்டிருக்கிறார். வெளியிட்டிருக்கிற விஷயங்களெல்லாம் நிதம் நடக்கக் கூடிய விஷயங்கள் தான். ஆனால் பக்திரசம் ஆங்காங்குத் தன் தலையை நீட்ட ஆரம்பித்து விடுகிறது. நீட்டினால் என்ன? அவர் ஓர் உண்மையான கலைஞன், ஓர் உண்மையானகவி என்பதை உலகம் மறக்க முடியாது. அவர் சித்திரங்கள் நம் மனப் பிராந்தங்களில் சதா நடமாடுகின்றன. அவ்வளவு களையும், அவ்வளவு வர்ணமும், அவ்வளவு உயிரும் அவைகனில் தென் படுகின்றன.



# புண் ஆறினும் வடு மறையுமா?

[ரா. சந்திரசூடன் பி. எஸ். ஸி.]

இப்பொழுது அந்த நினைவுகள் வடுக்களாகவே யிருக்கின்றன. எத்தனை நாட்களாயின! ஆனால் அப்பொழுது பட்டவடு இன்னும் பள பளப்புடன் கண்ணை உறுத்தி நின்று வருகிறது. அடிக்கடி தான்—ஏன். கற்பனாதேவி என் மனக் குடிலுக்கு எழுந்தருளும் பொழுதெல்லாம்—மின்சார அலைகளின் சலன வேகத்தைக் காட்டிலும் துரிதமாக மனம் அந்தப் பழைய இடத்திற்கு என்னை இழுத்துச் செல்லுகிறது. பின், முன்னைக்கும் இப்பொழுதைக்கும் என்ன பேதம்? புத்தி யாதொரு பதிலும் சொல்லத் தெரியாது தவிக்கிறது. ஆனால் ஏதோ வித்யாசமிருக்கிறதாக மட்டும் உணர்கிறேன் என்று சொல்லத் தெரிகிறது. புத்தியை மயக்கி மனிதனை ஆட்டி வைத்துக் கொண்டிருக்கும் உள்நெஞ்சமோ "உண்மையைக்கண்டு அறிய உன் புத்தி இஷ்டப்படவில்லை. உன் உணர்ச்சியின் தீவிரம் வர வரக் குறைந்து கொண்டே வருகிறது. பழைய உணர்ச்சி முனை தேய்ந்து போயிற்று. அதனால் வளர்ச்சி எங்கு ஏற்படும்? மேலும், புதுப்புது உணவு உனக்கு நாட்கள் செல்லச் செல்ல கிடைத்து வருகின்றனவல்லவா?" என்று என்னை இடித்துக் கூறுகிறது. எதுதான் உண்மை?

அச்சம்பவங்கள் நடந்து பதினன்கு வருடங்கள் பூர்த்தியாக இன்னும் மூன்று மாதங்கள் தானிருக்கின்றன. அப்பொழுது நான் கோடை விடுமுறைக்கு வீடு சென்றவன். ஊர் ஒரு சிறிய குக்கிராமம். கிழக்கு மேற்காக ஓடும் ஒரே ஒரு சிறிய தெரு தான் அக்கிரகாரம். அதில் வாசமின்றி பூட்டப் பட்டிருந்தன முப்பது வீடுகள். குடியிருந்து வாசத்திற்கு லாயக்குள்ளதாகத் தோன்றியது பதினேழு தான்.

என் சரகில் கோடி வீட்டில் தான் என் மனம் கோவில் கட்டி ஒரு விக்ரகத்தைப் பிரதிஷ்டை யிட்டு கணம் தவருமல் பூஜை செய்து வந்தது. முதன் முதலில் பார்க்கும் பொழுது அப்படி மிகவும் வசீகரமாகத் தோன்றி விட வில்லை என்பது உண்மை. ஒரு சாதாரணப் பெண் போல் தான் தோன்றினாள். உருண்ட வதனத்திற் கேற்கசிறிய மின் மினுக்கும் டோலக்குகள் காதில் அசையும் பொழுதெல்லாம் "டால்" அடித்துக் கொண்டிருந்தன. வெகு நாட்களுக்கு முன் சிறிய குழந்தையாக அவளைப் பார்த்திருக்கிறேன். நான் இந்த தரம் அந்த வீட்டிற்குச் சென்றபொழுது முற்றத்தில் தன் கடைத் தங்கையை மடியில் வைத்துச் சீராட்டிக் கொண்டிருந்தாள். என் காலடி அரவம் கேட்டதும் திரும்பினாள். உடனே "அம்மா" என்று சத்தமிட்டு விட்டு என்னை எதிர் கொண்டழைக்க விரைந்து வந்தனள். ஒரு கண் சிவந்து வீங்கியிருந்தது. "என்ன கண்ணில்?" என்று வினவினேன். "கண்வலி, பாவம், குழந்தை மிகவும் சிரமப்படுகிறது வலி பொறுக்காமல்" என்றாள் அவள் தாயார் அதற்குள் அங்கு வந்து. அவளிடமிருந்து என்ன பதில்? "களுக்" என்ற சிரிப்பு தான். அதுதான் முதலில் என்னை மயக்கிற்றோ? என்னையும் அறியாமல் என் மனம் உடனே அவளிடம் ஒரு வித பற்று கொண்டது. இருவரும் ஒருவரை யொருவர் முன்னால் நன்றாகத் தெரிந்திருந்தும், அச்சயம் அதற்கு முன் அறியாத ஒரு புது உணர்ச்சி என்னைக்கவர்ந்தது. கண் உபத்திரவம் இருந்தும் கூட லக்ஷணங்கள் பொருந்தி சாந்த தேவி குடி கொண்டிருந்த முகம் அது. சென்னைக் கடற்கரையில் செயற்கை யழகில் நாட்டிய மாடும் நாரீ மணிகளைப் பார்த்து அலுத்த என் கண்களுக்கு, இயற்கையின் அழகு அம்முகத்தில் பிரதிபலித்து என்னைப் பரவசமாக்கிற்று.

அன்று முதல் தவறாமல் காலையிலும் மாலையிலும் அங்கு செல்லும் வழக்கம் கொண்டேன். முற்றத்தில் கால்களைத் தொங்கவிட்டு தாழ்வார முகப்பில் உட்கார்ந்து இருவருமாக புஸ்தகங்கள் படிப்பதுண்டு. குமுவுக்கு புத்தகமென்றால் பெரிய பைத்தியம். நானும் விடுமுறைக்கென்று சென்னையிலிருந்து அனேகம் படித்துமுடிக்க எடுத்துச் சென்றிருந்தேன். தமிழில் என்னைவிட அவளுக்கு விற்பன்னம் அதிகம். நான் ஆங்கிலத்திலுள்ள பல அரிய நூல்களை வாசித்து அவளுக்கு விளங்கச் சொல்லிக் கொடுப்பதுண்டு. சிற்சில சமயங்களில் அவளிடம் பாட்டு கேட்பதுண்டு. சங்கீத ஞானம் எனக்கில்லையாயினும், குமுவினுடைய பாடல்களில் ஒரு தனித்த இன்பம் அனுபவிப்பதுண்டு.

சிலநாட்களுக் கெல்லாம் என்மனதும் என்புத்தியும் என்னிடமில்லை. இதை அவள் நன்கு அறிந்தனள். இது பரஸ்பரம். அவளும் என்னிடம் பிரேமைகொண்டாள் என்று எனக்குப்பின்னால் ஒரு சம்பவத்திலிருந்து விளங்கிற்று.

ஒரு நாள் நான் அவள் வீட்டிற்குச் செல்லவில்லை. "கண்ணும் முகமும் உனக்கு நன்றாக இல்லை. நேற்றிரவும் நீருசித்து உண்ணவில்லை இன்று நீவெளியில் செல்ல வேண்டாம். உடம்பை அலட்டிக் கொள்ளாதே" என்று கனிவுடன் சொன்னாள் என் பாட்டி. வாஸ்தவம்தான். முதல் நாளே இரவு ஒருவருக்கும் தெரியாமல் வாயிலெடுத்தேன். வீட்டில் யாருக்காவது தெரிந்தால் பெரிய ரகளை உண்டாகிவிடும் என்ற பயம். ஆனால் என் பாட்டியின் சூக்ஷ்மபுத்தி அசாத்தியம். என்னிடமும் அளவற்றபிரியம். தலைவலி மண்டையை உடைத்து விடும்போலிருந்தது. நான் அவளிடம் சொல்லுமுன் அவளாகவே என்னிடம் "தலைவலியோ, அப்பா, கொஞ்

இன்ஷ்யூர் செய்யுங்கள்!

## ஜூபிடர் ஜெனரல் இன்ஷ்யூரன்ஸ் கம்பெனி லிமிடெட்

கீழ்க்கண்ட இன்ஷ்யூரன்ஸ் அலுவல்களை கவனிக்கும்:

ஆயுள், மோட்டார், நெருப்பு, பஸ், டாக்ஸி, கப்பல், தொழிலாளர் நஷ்டஈடு, சமுத்திரம், ரெயில்வே, தபால்

**பிரபல இந்திய இன்ஷ்யூரன்ஸ் கம்பெனி**

வாக்களிக்கப்பட்ட மூலதனம்:

**ஒன்றரைக்கோடி ரூபாய்**

**எங்கும் ஏஜண்டுகள் தேவை**

பிராஞ்சு ஆபீஸ்:

**99, அரமனைக்காரத் தெரு, மதராஸ்.**

பிராஞ்சு மானேஜர்: N. வெங்கடராம அய்யர்.

சம் மிளகு கஷாயம் செய்து கொடுக்கட்டு மா?" என்று கேட்டுவிட்டாள். இந்த கஷாயங்கள் என்ருல் எனக்குத் திகில். இருந்தும் பாட்டியின் மனது சாந்தியடை யவும் என் தலைவலி ஒரு வேளை குறைய லாம் என்ற ஒரு ஆசை. "சரி" என்றேன். இதனுல் அன்று காலையில் குமுவைச் சென்று பார்ப்பது தடையாயிற்று; பார்த் துப்பார்த்து ஏமாந்து நின்றனள் போலும். "என், பாட்டி என்ன விசேஷம்," என்று கேட்டுக்கொண்டு, மாலை அங்கிருந்து வந் தாள்.

என் பாட்டி, "வாடியம்மா, குமு ஸுசி லனுக்குத்தான் உடம்பு குணமில்லை. முன் ரூமில் படுத்திருக்கிறுன் பார்த்துவிட்டு வா" என்ருள். எனது பாட்டிக்கு அவளி டம் அதிகமதிப்பும், ஆசையும்.

குமு என்னிடம் வந்து என்ன அசுகம், என்று விசாரித்தாள். நான் "என் பாட்டி எனக்கு உடம்பு ஜுரம் என்று சொல்லி யிருக்கிருள்" என்று சொன்னேன். இரு வரும் வெகு நேரம் சிரித்துக் கொண் டிருந்தோம். அதை நினைத்து மூன்று நாட் களாக அவளுக்குக் கையில் சுட்டுவிரலில் பெரிய கொப்பளம். இரவில் வலி பொறுக்க முடியாமல் அழுவதாக அவள் தாயார் என்னிடம் சொல்லிக் கொண்டிருந்தாள். "உன் கைச்சிரங்கு எப்படியிருக்கிறது?" என்று கேட்டேன். "அதெல்லாம் இரண்டு நாட்களில் சரியாகிவிடும்" என்று சொல்லி விட்டு எழுந்தாள் வீட்டிற்குத் திரும்ப. நானும் எனது பாட்டியும் அவளை வாயில் வரை கொண்டுவிட்டு அவள் தன்னகத் திற்குள் சென்று மறையும் வரை பார்த் திருந்தோம்.

அன்றிரவு எனக்கு உணவு பிடிக்கவில்லை மறு நாட்காலை நான் பதினேறு மணிக்கு விழித்தேன். இவ்வுலகத்தில் இருப்ப தாகவே தோன்றவில்லை. டாக்டர் காலையில் வந்து கைபார்த்து என் ஜுரம் டைபாயிட் என்றும், 103° இருப்பதாகவும் சொல்லி, மருந்துகள் எழுதிக் கொடுத்துவிட்டு தலை யில் ஜுரம் குறைய ஐஸ் வைத்துக் கட்டி விட்டுச் சென்ருர். சாத்துக்குடி சார்தான் உணவு கொடுக்கலாம் என்று கண்டிப்பாகச் சொல்லிச் சென்றிருந்தார். பக்கத்தில் என் பாட்டி மனம் குன்றி உட்கார்ந்திருந்தாள். நான் விழித்ததும் ஏதோ ஒரு குரல் கேட்டு, "குமு" என்றழைத்தேன். எனது பாட்டி "குமு இதோ வந்து கொண்டிருக்கி ருள், அப்பா" என்று சொல்லிவிட்டு "உனக்கு எப்படியிருக்கிறது" என்று கேட் டாள். அப்பொழுதுதான் எனக்கு சுய நினைவு வந்து எனக்கு என்ன நேர்ந்தது என்று என் பாட்டியைக் கேட்டுத் தெரி ந்து கொண்டேன்.

ஐந்து நிமிடங்களுக்கெல்லாம் சலங் கைச் சத்தம் கேட்டது. என் மார் பட பட வென்று அடித்தது. ஒரு புது உணர்ச் சியுடன் அவளது தம்பியைத் துணையாகக் கொண்டு ஓடி வந்திருந்தாள் அவள். கையில் பெரிய கட்டு இருந்தது. என்ன என்று கேட்டேன். "குமு காலையில் ஆப்ரேஷன் செய்து கொண்டாள்" என் ருன் அவள் தம்பி. நான் என் நிலைமையை மறந்து "உனக்கு இது இன்று நடக்கப் போகின்றதென்ருல், நானும் கூட வந்தி ருப்பேனே. உனக்கு ஆறுதல் சொல்லி யிருக்கக்கூடும். வலி பொறுக்க முடியா மல் இருந்ததோ?" என்றேன். கூட இருந்தவர்கள் பரிகாசமாக என்னை நோக் கிச் சிரித்தனர். அதை நான் பொருட் படுத்தவில்லை. அவளைக் கவனித்தேன். அவள் கண்களில் குபீர் என்று எழுந்த நன்றியும் அன்பும் நிறைந்த பிரகாசத் தைக் கண்டு புளகாங்கிதமானேன். அப் பொழுதுதான் அவள் உள்ளத்தினூடே மறைந்து ஒளிந்து கிடக்கும் ஆர்வ ஒளி யைக் கண்டேன்.

நாட்கள் கழிய இந்தப்பாசம் வேர் ஊன்றிக் கிளைகள் விட்டன. என் மன அலை யெழுச்சிகளைப் பல நாளிரவு நிலவில் வெளித்திண்ணையில் உட்கார்ந்து அலசி ஆராய்ந்து பார்த்திருக்கிறேன். கேவலம் காதல் அதல்ல, அல்பசுகத்தின் குறியு மல்ல. நான் கதைப்புத்தகங்களில் வாசித் துத் தெரிந்திருந்த உணர்ச்சிகளுள் ஒன்று மல்ல. அது என் இளமனதிற்குத் தெய் வீகமானதாகத் தோன்றியது.

ஆனிமாதம் நெருங்கியது. அவளுக்கு விவாகப்பருவம். பெண்ணின் பெற்ருேர்

ஊர்வம்பு இல்லாம லிருக்கவேண்டுமே என்ற கவலையில் தகுந்த வரனுக்காக மிகவும் பிரயாசைப்பட்டனர். குமுவின் பிற்கால வாழ்விற்கு உதவி நாயகனைத் தேடிப்பிடிக்க நானுந்தான் அவள் தகப்பனுடன் ஊர் ஊராகச் சுற்றினேன்.

குமுதினி விவாகம் செய்துகொள்ள இஷ்டமில்லாதிருந்தாள் என்று எனக்குத் தெரியும். ஆனால் ஊர் வழக்கப்படி செல்லவேண்டுமே. அவளுக்குக் குடும்பக் கவலைகள் ஒன்றும் கொள்ளாமல் கரையின்றி பலவித பாஷைகளும், வித்தைகளும் கற்க மிகவும் ஆவல் உண்டு. அவள் தன் வாழ்விற்கு அதுதான் பூர்த்தி என்று கருதினாள். ஆனால் பெற்றோர்சொல் தட்டாதவள். பூமிதேவியின் பொறுமையுடன் பெற்றோர் தேர்ந்தெடுத்த புருஷனை மணந்தாள். மனது ஆனால் உற்சாகமிழந்து இருந்தது. இம்மாதிரி நவநாகரீகமும், சுயநல உணர்ச்சியும் முற்றிய இந்நாளிலும் எவ்வளவு பெண்கள் தங்கள் உயிரையும், வாழ்க்கையின் சுகத்தையும், பெற்றோர் மனம் நோவாமலிருக்க அர்ப்பணம் செய்கிறார்கள்! இவ்விதத்தியாகம் ஜன சமூகத்திற்கு முடிவில் நன்மை பயக்குமா என்பது ஆராயத் தகுந்தது.

மணமகன் வந்து மாலையிட்டுச் சென்றான். ஒருநாட்காலை ரயிலடிக்கு சென்று ரயில் ஜன்னலின் வழியாக அவள் முகத்தைக் கடைசியாகக் கண்டு வழி யனுப்பினேன். கார்ட் பிகில் ஊதினான். மூன்றாவது மணியும் அடித்தாயிற்று. ரயில் புகைந்துகொண்டு நகர்ந்தது. உலகமே என்னை வெறுத்து நாலாபக்கங்களிலும் சிதறி ஓடுவதுபோல் தோன்றியது. கடைசி முறையாக அந்தக் கண்களைச் சந்தித்தேன். சில மாதங்களாக நாட்தவறாமல் கண்டு சாந்திபெற்ற அதே ஒளியும், கனிந்த ஆசையும் அந்தக் கண்களில் என்றுமில்லாத திர்க்கத்துடன் அன்று இருந்தது. "குமு, என்னை மறந்து விடாதே. கடிதம் அடிக்கடி எழுதிக் கொண்டிரு உன்னுடைய க்ஷேம லாபத்திற்கு" என்றேன். வேறு ஒன்றும் பேச அப்பொழுது எனக்கு நா வெழவில்லை. மறுபடியும் ஒரு மின்னலைக் கண்டேன் அவள் கண்களில். கண் ஓரத்தில் பளபளப்பு தெரிந்தது அவைகள் நீர்த்திவலைகள் போலும். அந்த டோலக்குகள் ஆடி எனக்குக் கடைசியாக பதிலளித்தன.

கண்ணுக்கெட்டும் தூரம்வரை அவள் இன்பவதனத்தைப் பார்த்துக் கொண்டிருக்கத்தான் ஆசை. ஆனால் துர்ப்பாக்கிய இந்த நீர்த்திரைவந்து மறைத்துவிட்டதே என் பார்வையை. கார்ட் வண்டியும் தொலைவில் மறைந்தது. வீடு திரும்ப கால்கள் மறுத்தன. அப்பொழுதுதான் மனப்புண் உதித்தது.

இப்பொழுது நானும் ஒரு வாழ்க்கைத் துணைவியைக் கொண்டுள்ளேன். நல்ல பெண். அவளிடம் எனக்குப் பிரியத்திற்குக் குறையில்லை. இவ்வளவிருந்தும் அந்தப் பழைய புண்ணின் ஞாபகம் இருந்துதான் வருகிறது. அந்த வடுக்கள் சதா சர்வகாலமும் என் கண்முன் தென்படுகின்றன. வடு அழியாது போலும்!




# *சிறு கதையின் லக்ஷணம்

[நா. ரகுநாதன் எம்.ஏ., பி.எல்., உதவி ஆசிரியர், "ஹிந்து."]

உலகம் ஏற்பட்டது முதல், 'ஒரு கதை சொல்லு' என்று கேட்காத குழந்தை இல்லை. அதற்கு இணங்கி 'ஒரே ஒரு ஊரிலே' என்று ஆரம்பிக்காத பாட்டியும் இல்லை. ஊன்றிப் பார்த்தால் எல்லாம் பழங்கதைகள் தாம். ஆனால் சொல்லு கிறவன் சொல்லால் ஒவ்வொன்றிலும் புதுமையே தொனிக்கிறது. அதுதான் கலைத்திறன். அநேகமாகக் கேட்ட கதைகளையே கேட்பதில்தான் குழந்தைகளுக்குத் திருப்தி. அவர்கள் ரஸிகர்கள். 'கதைக்குக் காலில்லை' என்பது சொல்லாமலே அவர்களுக்குத்தெரியும். புதியசமாச்சாரங்களைப் பற்றிப் பத்திரிகைகளில் நாம் படிக்கும் ஆவலல்ல, அவர்களுக்குக் கதை கேட்பதில். முதல் முதல் அந்தக் கதைகளைக்கேட்டபோது தங்கள் மனத்தில் பயமோ, உற்சாகமோ, சந்தோஷமோ, சோகமோ, எந்த ரஸம் உதித்ததோ அதையே நினைத்து அதையே திரும்பி அநுபவிக்க வேண்டுமென்னும் ஆவல் தான் அவர்களுக்கு. அதனாலேயே, ஒரே கதையைத் திருப்பித் திருப்பி, வாசகத்தில்கூடச் சிறிதளவு மாறுதலும் இல்லாமல் கேட்பதில் அவர்களுக்கு அலுப்பதில்லை. வயசானவர்களிலோ பெரும் பாலோர் பொழுது போக்குக்கு 'நாவல்' படிக்கிறவர்களாதலால் கதையையே கவனிக்கிறார்களென்றாலும், கலைஞானமுள்ளோர் மட்டும், அக் குழந்தைகள் போலவே, தம் மனத்தில் எழும் நுகர்ச்சிகளையே குறிப்பாய் வைத்துக் கொள்ளுவதுமன்றி அவ்வித நுகர்ச்சிகளின் நுட்பங்களைப் பகுத்தறியும் கூர்மையைக் குழந்தைகளைவிட அதிகம் பெற்றுள்ளார்கள். அப் பகுத்தறிவே கதைக்கலையின் பயன்.

கதை சொல்லுவதும், வேறு அநேக சிறந்த விஷயங்கள் போலவே, நம் தேசத்திலிருந்து வெளியேறின சரக்குத்தான். பல நூற்றாண்டுகளுக்கு முன் பஞ்ச தந்திரக் கதைகளும், விக்கிரமாதித்தியன் கதைகளும் அரேபியா, பெர்ஸியா, துருக்கிதேசங்கள் வழியாய் ஐரோப்பாவில் வியாபித்து 'ஈஸாப்கட்டுக் கதைகள்' முதலிய கிரந்தங்களுக்கு ஆஸ்பதமாயிருந்தன. ஆயினும் பிற்காலங்களில் மேல்நாடுகளில் கதையைக் கலையாய் வளர்த்தது போல் நாம் வளர்க்கவில்லை. இங்கிலாந்தில் தற்காலம் 'நாவல்' என்று வழங்கும் நவீனம் சுமார் 300 வருஷங்களுக்கு முன் நாடோடியாய் ஆரம்பித்து இப்போது ஆயிரக்கணக்கான கால் விட்ட ஆலமரம்போல் தழைத்து ஓங்கி நிற்கிறது. ஆனால் அந்தத் தேசத்திலும் பிரான்ஸ் முதலிய தேசங்களிலும் சிறுகதை (Short story) என்கிற கதையினம் மட்டும் சமீப காலத்திலே-அதாவது 19-ம் நூற்றாண்டில்தான்-பிரபலமானது.

பொதுவாக, நாவல் எழுதுவதைக் காட்டிலும் சிறுகதை எழுதுவதிலேயே சிரமம் ஜாஸ்தி என்பது இருவிதங்களிலும் ஆற்றலுள்ளவர்களின் அபிப்பிராயம். அப்படியுள்ளவர்களும் சிலரே. நாவலுக்கும் சிறுகதைக்கும் முக்கியமான அங்கங்கள் வெவ்வேறு என்றே சொல்லலாம். இந்த வித்யாசம் கதையின் நீளத்தைப் பொறுத்தது மட்டும் அல்ல; நீளம் ஒரு முக்கியமான விஷயமும் அல்ல. ஓர் அழகிய சிறுகதையென்றால் அதைப் படிப்பவனுக்கு உள்ளம் நிரம்ப வேண்டும். உருட்டித் திரட்டிவிட்ட மணி விக்கிரகம்போல் மனக்கண்ணில் நின்று அது ஒளிவீசவேண்டும். சிறுகதை யெழுதுபவனுக்கு, சொல்லுவதைவிடச் சொல்லாமல் விடுவது என்னும் ரந்திரம் அதிகமாய்த் தெரிந்திருக்க வேண்டும். படம் சிறிதாயும் அதில் சித்திரம் வீரியமாயும் வர்ணங்கள் கண்ணைக் கவரும் படியானவையாயும் இருக்க வேண்

*'கதைக்கோவை'யில் எழுதியமுன்னுரை.

டும். இந்தச் சிற்பத்தில் நகாசு வேலையில் தான் சுவாரசியம் முழுவதும். ஒரு சம்பவத்தையோ, ஓர் இடத்தையோ, ஒருகணப் போதையோ, ஓர்ஆத்மாவையோ, அல்லது ஏதோ ஒரு நிகழ்ச்சியால் நினைவூட்டப்பட்ட ஞாபகங்களையோ, மனத்தில் எழும் எண்ணங்களையோ ஸ்பஷ்டமாகவும், உள்ளது உள்ளபடியேயும் மறக்க முடியாத அழுத்தத்துடனும் படிப்பவர் காணச் செய்வதுதான் இக்கலையின் நோக்கம்.

இப் புத்தகத்தில் பல பெரிய எழுத்தாளர்கள் பலவிதத்திறமையைக் காட்டியிருக்கிறார்கள். அவைகளை இங்கே விஸ்தரிப்பது சாத்யமல்ல. கதை சொல்லுவதில் கலை என்ற அம்சம் எது என்பதை மட்டும் சற்று உற்று நோக்குவோம். மனித வர்க்கத்தில் சேர்ந்த கோடிக் கணக்கான பேர்களுக்குக் கை, கால், கண் முதலிய அவயவங்கள் ஒன்றாயிருந்தும் ஒருவனைப்போல் மற்றொருவன் இல்லை யென்பது எல்லோருக்கும் தெரிந்த விஷயம். யோசிக்குங்கால், இதைவிட வேறு அதிசயமுண்டோ? ஒவ்வொரு மனிதனையும், அவன் முகஜாடையால் அறிந்து கொள்கிறோமல்லவா? அவனுடைய ஸ்தூல சரீரத்துக்கு ஒருமுகஜாடை யிருப்பதுபோலவே, அவனுடைய ஆத்மாவிற்கும் ஒரு பிரத்தியேகமான முகச்சாயல் இருக்கிறது. மனிதனுடைய ஆத்மாவுக்குமட்டுமல்ல பிரகிருதியிலுள்ள எல்லா ரூபங்களுக்கும் ரஸங்களுக்கும் இவ்வித அந்தரங்கமான அடையாளம் உண்டு. அந்த அடையாளத்தைக் கையாளுவது தான் கலை. அந்த ஆத்மார்த்தமான அடையாளத்திற்கும் வெளிச்சின்னங்களுக்கும் தகர்க்க முடியாத சம்பந்தம் ஒன்றுமில்லை. 'நான்' என்று சொல்லப்பட்ட வஸ்து, நான் அணிந்திருக்கும் ஆடையல்ல; என்னுடைய தனிப்பட்ட சைகைகளுமல்ல; என் குணகுணங்களும் அல்ல. என்னில் உலகத்தாரால் அறியப்படும் பாகங்கள்


# கதைக்கோவை

Vol. II] ● [2-ஆம் தொகுதி

## முதல் தொகுதியில் விட்டுப்போன

"கல்கி." "வ. ரா." முதலிய

பிரபல சிறு கதை எழுத்தாளர்களின்

25-முதல் 30-கதைகள் கொண்டது. 31-10-41 க்குள் வெளிவருகிறது.

பெண்மணிகள் எழுதிய கதைகளும் இதில் சேரும். இத் தொகுதியில் கலந்துகொள்ள விரும்புவோர், 31-8-41 க்குள்ளாக தத்தம் கதைகளை அனுப்பிவிட வேண்டும். கதைகளைத் தேர்ந்தெடுப்பதற்கும் நிராகரிப்பதற்கும் எங்களுக்கு உரிமை உண்டு. அங்கீகரிக்கப்பட்ட கதைகளுக்கு சன்மானம் அளிக்கப்படும்.

எங்கள் விவரமான புத்தக ஜாப்தாவுக்கு எழுதிக் கொள்ளவும்.

அல்லயன்ஸ் கம்பெனி, பிராடீஸ் ரோட், மயிலாப்பூர், சென்னை.

சிலவே. நானே என்னை முழுதும் அறிந்து கொண்டேனென்று சொல்லுவதற்கு இல்லை. 'நான்' என்பதன் பூரண கலையையும் காட்டிக் கொடுக்கும் பூதக்கண்ணாடிதான் கவிதையென்றும் கலையென்றும் பலவிதமாய் வழங்கி வருகிறது. 'சிறு கதை' என்ற வகுப்பு, மேற்கூறிய முகச் சாயல் போன்ற அகச்சாயலைப்படம் பிடிக்கும் வித்தை யென்றே கூறலாம். பழக்கமுள்ள ஒரு மனிதனின் ஞாபகம் வந்தால், அவனுக்கு வழக்கமாயுள்ள நடையுடைபாவனைகள் நம் கண் முன் தோன்றினாலும், அவன் முகக்குறியே எல்லாவற்றிற்கும் முன் நிற்கின்றது. அதுபோல், இடம், பொருள், ஏவல் என்ற அங்கங்கள் 'சிறு கதை'க்குச் சில அளவு தேவையே யென்றாலும், மேற்சொன்ன ஜீவகளையை வெளிப்படுத்துவதுதான் அதற்கேற்பட்ட விதி.

இந்தக் கதைக் கோவையில் அடங்கிய கதைகளில் அத்தகைய ஜீவகளை நிரம்பியிருக்கிறதை அறிஞர் நன்குணர்வர். இந்த 40 கதைகளும் தமிழ் நாட்டின் அன்பையும் மதிப்பையும் பெற்ற எழுத்தாளர்களால் எழுதப்பட்டவை. ஒவ்வொன்றும் அதனதன் ஆசிரியரால் தம்மால் இயற்றப்பட்ட பல கதைகளிலிருந்து மேலானது என்று பொறுக்கி எடுக்கப்பட்டடு, இக் கோவையில் தொகுக்கப்பட்டது. இவற்றுள் சிலவற்றைப் பற்றி, அவைகளைவிட இன்னும் திறமான கதைகளை அவ்வவ்வாசிரியர்கள் இயற்றியிருக்கிறார்கள் என்ற அபிப்பிராயத்துக்கும் ஒருகால் இடமிருக்கலாம். என்றாலும் அவ்வபிப்பிராய பேதங்களை நாம் ஆராய வேண்டியதில்லை.

இப்புத்தகத்தில் அடங்கிய கதைகள் தமிழின் கண் உண்டான புதுக்கிளர்ச்சிக்கு ஓர் அரிய பெரிய சான்றாகும். இக் கிளர்ச்சி இற்றைக்குச் சுமார் 20 வருஷங்களுக்கிப்பாலே விருத்தியாயிற்று என்பதையும், அதிலும் 'சிறுகதை'கள் எழுதும் ஆற்றல் ஏற்பட்டு எல்லாமாய்ப் பத்து வருஷங்களுக்குட்பட்டுத்தான் ஆகிறது, என்பதையும் நினைக்கும்பொழுது இந்த 40 கதைகளில் காணப்படும் பாவ புஷ்டியும் விஷயவைசித்திரியமும், உலகப் போக்கின் சூக்ஷுமங்களும், இயற்கை யழகும், கருத்தொத்த நடைச் செல்வமும் வியப்பை அளிக்கின்றன. குற்றங் குறைகள் இருக்கலாம். எதில் இல்லை. ஐரோப்பிய எழுத்தாளர்களின் நிழல் சில கதைகளில் கொஞ்சம் அதிகப்படியாகவே விழுந்திருக்கிறது என்று எனக்குத் தோன்றுகிறது. இருந்தாலும் என்ன? வளரும் கலை அல்லவா ? சிறு கதைகள் எழுதுவதில் தமிழ் நாட்டில் அபாரமானஊக்கமும் லாகவமும் ஏற்பட்டிருப்பது இக்கதைகளைப் படிப்பவர்களுக்கு நன்கு விளங்கும். இந்த ஊக்கத்தை விருத்திசெய்து, இக் கதைக் கோவை எழுத்தாளர்கள் மேல்மேலும் கற்பனைசக்தியைக் காட்டவும், புதுப்புது எழுத்தாளர்கள் வெளிவரவும், இப்புத்தகம் பேருதவி செய்யக்கூடும் என்பதைத் தமிழபிமானிகள் உணர்ந்து இப் புத்தகத்தை ஆதரித்தலே இதன் பிரசுரதாரர்கள் தமிழ்த்தாய்க்குப் புரிந்துவரும் அரிய தொண்டுக்குத் தகுந்த கைம்மாறாகும்.

# காரணம் ஒன்றே

"விஜயலக்ஷ்மி"

ரயில் புறப்பட இன்னும் ஒரே நிமிஷம் தான் இருந்தது. ப்ளாட்பாரத்தில் ஏகப்பட்ட சந்தடி.

டிக்கட் கொடுக்கும் இடத்தில் ஒரு மனிதர் அவசர அவசரமாக மதராஸுக்கு ஒரு டிக்கட் வாங்கிக்கொண்டு தனக்குச் சேர வேண்டிய சில்லரையையும் பொருட்படுத்தாமல் ரயிலை நோக்கி ஓடினார். அவருடைய அவசரத்தில் அவர் அங்கு நின்றுகொண்டிருந்த டிக்கட் பரிசோதகரையும் கவனிக்க வில்லை. அதன் பயனாக அவ்விருவருடைய தலைகளும் ஒரு வினாடி காலம் க்ஷேமலாபங்களை மிக மும்முரமாக விசாரித்துக் கொண்டன. டிக்கட் பரிசோதகரின் தொப்பி ஒரு கெஜ தூரத்திற்கப்பால் பறந்து போயிற்று.

இதை யெல்லாம் கவனிக்க நம் பிரயாணிக்கு அவகாசமில்லை. எங்கே ரயில் தப்பி விடுமோ என்ற பயந் தான் அவனுக்குப் பெரிதாய் இருந்தது. அதற்கேற்றாற் போல் மணியும் அடிக்கப் பட்டது. கார்டு ஊது குழலை ஊதி பச்சைக் கொடியைக் காட்டினான். ரயிலும் 'கூ' வென்று அலறிக்கொண்டு ப்ளாட்பாரத்தை விட்டு நகர்ந்தது.

நம் பிரயாணி தன் இடது கையில் இருந்த கன மிகுந்த பெட்டியையும் கவனிக்க வில்லை. தன் வலது கையிலிருந்த மலை போன்ற படுக்கையையும் லக்ஷியம் செய்ததாய்த் தெரிய வில்லை. எப்படியாவது ரயிலில் ஏறிவிட வேண்டும் என்பதே அவன் நோக்கம் போலிருந்தது. எனவே ரயிலுடன் ஓட்டப் பந்தயம் ஆரம்பித்து விட்டான்.

அவன் கண்களில் இரண்டாம் வகுப்புப் பெட்டி யொன்று தென்பட்டது. திறந்திருந்த ஜன்னல் ஒன்றின் வழியாக தனது ட்ரங்குப் பெட்டியை உள்ளே விட்டெறிந்தான்.

ஆனால் பாவம்! மிகவும் உல்லாசமாய் அப்பெட்டியினுள் கால் மேல் காலைப் போட்டுக்கொண்டு, அடித் தொண்டையில் ஏதோ சினிமாப் பாட்டை பாடிக்கொண்டிருந்த டைரக்டர் லக்ஷ்மணனுக்குத் தன்னை ஓர் ஜடப்பொருள் எதிர் பாராத விதமாய்த் தாக்கப் போகிற தென்று எப்படித் தெரியும்? தன் மூக்கின் மேல் மிகவும் உக்கிரமாய் ஓர் ட்ராங்குப் பெட்டி உராய்ந்துகொண்டு 'படார்' என்ற சத்தத்துடன் கீழே விழுந்ததும், அவர் அலறிக்கொண்டு, உடைந்து ரத்தம் வழியும் தன் மூக்கை தனது மேலங்கியால் துடைத்துச் சமாதானப் படுத்தியபடி கோபத்தோடு யார் தன்மேல் அதை எரிந்தது என்று திரும்பிப் பார்த்தார். ஆனால் அவர் பார்க்கு முன் அவர் தலைமேல் நம் பிரயாணியின் பாரமான படுக்கை மோதிக்கொண்டு, அவர் துடைமேல் புறண்டு, அவர் பாதங்களில் சாஷ்டாங்கமாய் விழுந்து கால்பெருவிரல் நகத்தைப் பக்குவமாய்ப் பெயர்த்து விட்டது. இம் முறை லக்ஷ்மணனால் வலியைச் சகிக்க முடிய வில்லை. "ஐயோ" என்று கூச்சலிட்ட வண்ணம் தன் இடத்தை விட்டெழுந்து பெட்டியின் கதவண்டை ஓடினார்.

அப்பொழுது தான் நம் பிரயாணி இரைக்க இரைக்க ஓடி வந்து பெட்டியின் கதவைத் திறந்து கொண்டு, உள்ளே நுழைந்து 'அப்பாடா' என்று உட்கார்ந்து கொண்டு சிரமபரிகாரம் செய்து கொள்ளும் பொருட்டுத் தன் சட்டையின் பித்தான்களைக் கழற்றி வியர்வையால் நனைந்திருந்த தன் மார்பின்மேல் காற்று பாயும் படி செய்து கொண்டான்.

"உம் மண்டையில் மூளை கீளை இருக்கா?" என்றார் லக்ஷ்மணன் நம் பிரயாணியைப் பார்த்து மிக ஆத்திரத்தோடு.

"மூளை நிறையத் தான் இருக்கிறது. ஆனல் நீர் கூறிய 'கிளை' என்பது என்னமோ புதிதாக இருக்கிறது. ஒரு வேளை உம் மண்டையில் அது தான் இருக்கோ என்னவோ" என்றான் பிரயாணி மேல் மூச்சு வாங்கிய படி.

"போதும் ஐயா, மூடும் வாயை. இதற்கென்ன சொல்கிறீர்?" என்று உதிரம் பெருகும் தன் மூக்கையும், பெயர்ந்து நின்ற தன் காற் பெருவிரல் நகத்தையும் சுட்டிக் காட்டினன் லக்ஷ்மணன்.

"நான் என்ன சொல்ல விருக்கிறது. மூக்கில் ரத்தம் வழிகிறதென்றும், காலில் நகம் பெயர்ந்து விட்டதென்றும் நீங்கள் உடனே ஒரு டாக்டரைப் பார்ப்பது நல்லது என்று தான் சொல்ல வேண்டும்," என்றான் பிரயாணி.

"என்னைக் காயப் படுத்திய தல்லாமல் பரிகாசம் வேறு செய்கிறீரா? என்னைக் காயப் படுத்தியதற் கென்ன சொல்கிறீர்?" என்றான் லக்ஷ்மணன் கடுகடுப்போடு.

"என்ன சார்! ஒரு பாவத்தையும் அறியாத என்னையா இப்படிக் கூறுகிறீர்? இப்போது தானே நான் வண்டிக்குள் நுழைந்து கொண்டே இருக்கிறேன். நான் வரும் போதே ரத்த வெள்ளத்தில் தோய்ந்திருந்தீரே நீர். அப்படி யிருக்க நான் காயப்படுத்தியதாய்க் கூறுகிறீரே?" என்றான் பிரயாணி.

லக்ஷ்: ஏனையா, அந்த ட்ரங்குப் பெட்டியை உள்ளே விட்டேறிய வில்லையா நீர்? அந்தப் படுக்கையை......

பிர: ஆம் யார் இல்லை யென்றார்கள்?

லக்ஷ்: உள்ளே யாராவது இருக்கிறார்களா, என்றாவது பார்த்தீரா? அந்த ட்ரங்கு என் மூக்கை உடைத்துவிட்டது. அந்த நாசமாய்ப்போன படுக்கை இருக்கிறதே அது என் காலை முறித்து விட்டது.

பிர: ஓ! அப்படி நடந்து விட்டதா, ஆனல் உண்மையில் என் செய்கைக்காக நான் வருந்துகிறேன்.

லக்ஷ்: உம் செய்கைக்காக நீர் வருத்தப்படுவதாய்த் தெரிவித்து விட்டால் அனுபவிப்பது யாரையா?

பிர: கோபித்துக் கொள்ளப்படாது. எப்படியாவது இந்தரயிலில் ஏறிவிடவேண்டியிருந்தது. அது தப்பினல் மறு வண்டி நாளைக்குத்தானே! நாளைக்கு நான் கட்டாயம் மதராஸில் இருந்தாகவேண்டும். அதனல்தான் இப்படி நிகழ்ந்துவிட்டது. மன்னிக்கணம்.

லக்ஷ்: வாய் நிறையப் பேசிவிட்டால் ஆய் விட்டதா. கொஞ்சமாவது யோசனை வேண்டாமா? நான் 'கம்ளெய்ண்ட்' தந்தால் என்ன ஆகும் தெரியுமா?

பிர: என்ன சார் பயப்படுத்துகிறீர்களே! நான்தான் உண்மையில் வருந்துவதாய்த் தெரிவித்தேனே. அப்படி யிருந்தும் 'கம்ளெய்ண்ட் கிம்ளெய்ண்ட்' என்று தபாய்க்கிறீர்களே! நானும் கொஞ்சம் படித்தவன்தான் சார்.

லக்ஷ்: படித்துவிட்டால் மாத்திரம் தலைகால் தெரியாமல் ஆடலாம் என்றிருக்கிறதா என்ன? ஆகட்டும் அடுத்த ஸ்டேஷனில் ரயில்வே போலீஸ்........

பிர: அடேயப்பா! போலீஸை நீர் தான் பார்த்திருக்கிறீர்போல் இருக்கிறது. முதலில் நான்தான் உன் மூக்கை உடைத்தேன் என்பதற்கு என்ன சாக்ஷி? அல்லது யார் சாக்ஷி? நீராகவே என் அந்தப் பெட்டியின்மேல் மோதிக்கொண்டு உம் மூக்கை உடைத்துக்கொண் டிருக்கக் கூடாது.

லக்ஷ்: என் மூக்கை நானே உடைத்துக்கொள்ள எனக்கென்ன பயித்தியமா?

பிர: காரணமின்றி உன் மூக்கை உடைக்க எனக்கென்ன பயித்தியமா? வீணுகக் கலங்காதீர்கள். போலீஸை வெகுதடவை நான் பார்த்திருக்கிறேன். முதலில் உம் மூக்கைக் கவனியுங்கள். போனது போகட்டும் உண்மையில் நான் வருத்தப்படும்போது இன்னும் என் கோபம் ஸ்வாமீ!

லக்ஷ்: ஸ்வாமியுமாச்சு. பூதமுமாச்சு. பாப்பாரப் பயல்களைக் கூப்பிடுவது போல் என்னைக் கூப்பிடவேண்டாம்.

பிர: இல்லை. இல்லை. உங்களைப் பிராம்மணன் என்று நினைத்தேன். நீர் பிரும்

மத்வேஷி என்று எனக்கெப்படித் தெரியும்?

லக்ஷ: நான் பிரும்மத்வேஷி என்று உமக்கு யார் சொன்னது?

பிர: நீங்களேதான். "பாப்பாரப் பயல்கள்" என்று மிகவும் எளப்பமாய்ப் பேசினீரே!

லக்ஷ: நீர் பிராம்மணர் என்று எனக்குத் தெரியாது. அதனுல்தான் சொன்னேன்.

பிர: நான் பிராமணன் என்று உமக்கு யார் சொன்னது?

லக்ஷ: நீர் தான். பின் ஏன் பிராம்மணர்களுக்குப் பரிந்து பேசினீர்?

பிர: பரிந்து கொண்டு பேசவில்லை. இருந்தாலும் பிறரை ஏன் அவசியமின்றி இகழவேண்டும் என்றுதான் சொல்ல வந்தேன். நீங்கள் என்ன ஜாதியோ?

லக்ஷ: நான் முதலியார்.. நான் என்ன ஜாதியாயிருந்தால் உமக்கென்ன?

பிர: நானும் முதலியார்தான். அதனுல்தான் கேட்டேன். எந்த ஊருக்குப் போகிறீர்களோ?

லக்ஷ: சுண்டைக்காய் ஊருக்கு. தெரிந்ததா? 'வள வள' என்று பேசிக்கொண்டே இருக்கிறீரே?

பிர: சுண்டைக்காய் ஊருக்கா? நான் கேள்விப்பட்டதே இல்லையே அப்படி ஒரு ஊர் இருக்கிறதென்று. நீர் மறந்து இந்த ரயிலில் ஏறி விட்டாற்போல் இருக்கிறது. இது மதராஸ் போகிற வண்டி. வழியில் 'சுண்டைக்காய் ஊர் வெண்டைக்காய் ஊர்' என்ற ஊர் எதுவும் இல்லை. அடுத்த ஸ்டேஷனில் இறங்கி நீர் வேறு வண்டி ஏற வேண்டியதுதான்.

லக்ஷ: மூடையா வாயை! பரிகாசமா செய்கிறுய்? இனி என்னுடன் பேசினுல் உம்மை 'மூளைகெட்டமிருகமே' என்று தான் கூப்பிடுவேன்.

பிர: புத்தி; புத்தி; நல்லவேளை. இதுவரை என்னேடு பேசினுயே. மூளை கெட்ட மிருகமே என்று கூறவில்லையே!

மூக்குடைந்த லக்ஷ்மண முதலியாருக்குச் சுமார் நாற்பது வயதிருக்கும். சற்று ஸ்தூல சரீரி என்ருலும் விகாரமாக இருக்கவில்லை. பருமனுக்குத் தக்க உயரம். முகத்திலும் நல்ல களை.

அவருடன் வாதித்துக்கொண்டே வந்த அப்பிரயாணியின் பெயர் வேணுகோபால் முதலி என்பது. அனைவரும் அவனை வேணுவென்றே கூப்பிட்டு வந்தார்கள். நல்ல வசீகரமான முகம். ஆங்கிலேயர் தோரணையில் உடை. நல்ல சரீரம். கம்பீரமான தோற்றம். ஏன் சினிமாவில் நடிக்க அவன் சகல விதித்திலும் பொருந்தியிருந்தான். அவன் அவ்வளவு அவசரமாக மதராஸ் செல்லும் காரணம் சினிமாவில் சேரும்பொருட்டுத்தான்.

அவன் செய்துகொண்ட மனுவின் பேரில் மதராஸ் லக்ஷ்மி சினிடோன் டைரக்டர் அவனை மறுநாள் பதினேரு மணிக்குத் தன்னை வந்து காணும்படி உத்தரவு பிறப்பித்திருந்தார். சினிமாவில் சேரக்கூடாது என்று அவன் தாயார் வீட்டில் தடுத்துக்கொண்டே வந்ததால் அவனுல் இன்னம் சில தினங்கள் முன்னதாகப் புறப்படமுடியாது போயிற்று. கடைசியில் திடமான மனதோடு யார் என்ன சொன்னுலும் கேட்பதில்லை யென்று திட்டம் போட்டுக்கொண்டு வேறு, கடைசி வண்டியான மலபார் எக்ஸ்பிரஸை வெகு சிரமப்பட்டுப் பிடித்தான். மறுநாட் காலை டைரக்டரைப் பார்த்து விடுவதென்றும், தன்னை நடிகனுகத் தேர்ந்தெடுத்தால் உடனே சேர்ந்து விடுவதென்றும், இல்லையென்ருல் வேறு கம்பெனிகளில் மனுச் செய்துகொண்டு எப்பாடு பட்டாவது சினிமாத் தொழிலிலேயே இறங்கி விடுவதென்றும் நிர்ணயித்துக் கொண்டுதான் அவன் புறப்பட்டான்.

பெட்டியில் இருவரும் ஒருவரை யொருவர் வாய் நோகும் வரையில் வசை மொழிகளால் வாழ்த்திக் கொண்டனர். பிறகு களைத்துப்போய்ப் படுத்துறங்கினர்.

* * *

மறுநாட் காலை சென்ட்ரல் ஸ்டேஷனில் வண்டி வந்து நின்றது. லக்ஷ்மண முதலியும், வேணுவும் வண்டியை விட்டிறங்கி தத்தம் வழிச் சென்றனர்.

வேணு தன் தகப்பனார் இருந்த மயிலாப்பூரை யடைந்தான். காப்பிப் பலகாரங்கள் செய்த பின் தன் தகப்பனிடம் தன் விஷயத்தைச் சொன்னான். அவன் தகப்பன் சோமசுந்திரத்திற்கு அவன் ஒரே பிள்ளை. ஆதலால் அவர் அவனுக்குக் குறுக்குச் சொல்வதே கிடையாது. அவ்வளவு செல்லம். தனது ஆஸ்தி முழுவதிற்கும் அவன் தானே வார்சு. அவன் கோபித்துக்கொண்டு எங்காவது ஓடி விட்டால் என்ன செய்வது.

ஒன்பதரைக்கு லஸ் கார்னரில் ட்ராம் ஏறினான் வேணு. டைரக்டர் தன்னை என்ன என்ன கேள்விகள் கேட்கக்கூடும், தான் எப்படி எப்படி பதில் சொல்ல வேண்டும் என்றெல்லாம் அவன் ஆகாயக் கோட்டைகள் கட்டலானான். கண்டக்டர் தன்னைத் தட்டியெழுப்பி "ஸார் பாரிஸ் கார்னர் வந்துவிட்டது எழுந்திருங்கள்" என்றபோது தான் அவனுக்கு மனக்கோட்டை கட்டிய வண்ணம் தூங்கிவிட்ட விஷயம் தெரிந்தது. தான் இறங்க வேண்டியது ஹைகோர்ட்டண்டை யாதலால் திரும்பவும் அவன் வந்த வழிநடக்க நேர்ந்தது.

பிறகு தம்புச்செட்டித் தெருவில் லக்ஷ்மீ சினிடோனை யடையும்போது மணி பதினொன்றடிக்கப் பத்து நிமிஷம் இருந்தது. டைரக்டர் அறைக்கு வெளியில் பலர் நின்றுகொண் டிருந்தனர். சில பெண்கள் தமக்கெனக் கட்டப்பட்டிருந்த பிரத்தியேகமான அறையொன்றில் குழுமி இருந்தனர். அவர்களும் அவனைப்போல் சினிமாவில் சேர விண்ணப்பம் போட்டவர்கள் என்பதும் தெரிந்தது.

டைரக்டர் அறையின் வெளியில் நின்ற ஜவான் ஒவ்வொருவராக உள்ளேவிட்டுக் கொண்டிருந்தான். கடைசியில் நம் வேணுவையும் உள்ளேவிட்டான்.

உள்ளே நுழையும்போதே வேணுவின் மனம் 'பகீர், பகீர்' என்றபடி இருந்தது. தன்னை என்ன என்ன கேள்விகள் கேட்பானோ. தான் எப்படி எப்படி பதில் சொல்லப் போகிறோமோ என்று அவன் மனம் அஞ்சியது. கடவுள் இருக்கிறார் என்று கடவுளின்மேல் பாரத்தைப்போட்டு விட்டு தைரியமாய் உள்ளே நுழைந்தான்.

வேணுவுக்குத் தன் முதுகைக் காட்டியபடி உட்கார்ந்திருந்தார் டைரக்டர். "குட் மார்னிங் சார்" என்றபடி பல்லிளித்த வண்ணம் அவருக்கெதிரே போய் நின்றான் வேணு. ஆனால் அவருடைய முகத்தைப் பார்த்ததும் அவனுக்குத் தூக்கி வாரிப் போட்டது. அவன் முதல் நாள் யாருடைய மூக்கை உடைத்தானோ, யாரோடு விதண்டா வாதங்கள் செய்து வந்தானோ, அவரேதான் அங்கு டைரக்டர் என்று உடனே தெரிந்து கொண்டான். அவன் அடைந்த சங்கடத்திற்கு அளவே இல்லை. தான் அவரிடம் அவ்வளவு துடுக்காக நடந்துகொண் டிருக்கும் போது தன்னை அவர் தேர்ந்தெடுப்பது முடியாத காரியம் என்று அவனுக்குத் திண்ணமாய்த் தெரிந்தது.

"ஓ! நீயா?" என்றார் லக்ஷ்மண முதலி ஏளனமாகச் சிரித்துக்கொண்டு.

"அடெடெ நீங்கள் தானா?" என்றான் வேணு பதிலுக்குச் சிரித்தபடி. அவனுக்கு தான் தெரிந்துவிட்டதே இவர் தன்னை நிராகரித்து விடுவார் என்று, பின் பதில் சொல்லப் பின் வாங்குவானேன்?

"நீ இதுவரை சினிமாவில் ஆக்ட் செய்திருக்கிறாயா?"

"கிடையாது."

"உனக்கு அதற்கெல்லாம் அவகாசம் ஏதப்பா! வீண் வம்புக்குத்தானே உன் பொழுது சரியாய் இருக்கும்" என்றார் லக்ஷ்மணன் குத்தலாக.

"எனது குணாதிசயங்களை நன்றாகத் தெரிந்து கொண்டிருக்கிறீர்களே! அதிருக்கட்டும். இப்போது உம் மூக்கு எப்படி இருக்கிறது?" என்றான் வேணு பரிகாசமாக.

"த்தாங்க்ஸ். உனக்குப் பாடத் தெரியுமா?"

"தெரியும். பாடட்டுமா"

"பாட்டு கதை யெல்லாம் அப்புறம் ஆகட்டும். உன்னை இதில் சேர்த்துக் கொண்டால், மரியாதையோடும், கீழ்ப்

# பெங்கால் ஷேர் டீலர்ஸ் ஸிண்டிகேட் லிமிடெட்

தலைமை ஆபீஸ் :—**3 & 4, ஹேர் தெரு, கல்கத்தா**

கிளை ஆபீஸ்கள் :—லாகூர்; பெனரீஸ்; பாட்ன; பகல்பூர்; டார்ஜீலிங்; டிப்ருகார்; ஜேம்ஷெட்பூர்; கொமில்லா.

---

| | | |
|---|---|---|
| அதிகாரம் பெற்ற மூலதனம் | ... | ரூ. 25 லக்ஷம் |
| ஸப்ஸ்க்ரைப் செய்யப்பட்ட மூலதனம் | ... | ரூ. 8,50,000 |
| கொடுக்கப்பட்ட மூலதனம் | ... | ரூ. 2,35,000 |

முதல் வருஷத்தில் (வருமான வரிக்குள்ளாகாத) டிவிடெண்ட் 100-க்கு 10-வீதம் தீர்மானிக்கப்பட்டது.

100-க்கு 6-வீதம் வட்டிக்கு ஒரு வருஷத்துக்கு பிக்ஸட் டிபாஸிட்டுகளை ஒத்துக்கொள்ளுகிறோம்.

ஏஜண்டுகள் கவனிக்கவேண்டியது. 1941 ஜுலை 1-ம் தேதியிலிருந்து 100-க்கு 10-ப்ரிமியம் விகிதப்படி இந்த ஸிண்டிகேட்டின் ஷேர்கள் கிடைக்கும்.

நமது சொந்தக் கட்டடம் சௌரிங்கி ஸ்கொயர (கல்கத்தா)ருக்கு அருகில் இந்த ஸிண்டிகேட் கட்டடத்துக்கு நிலம் வாங்கி இருக்கிறது. இந்த மாதத்திலிருந்து கட்டட வேலை ஆரம்பிக்கப்படும்

நாங்கள் எல்லாவிதமான விற்கத்தகுந்த ஷேர்கள், கவர்ன்மெண்ட் செக்யூரிடிகள் முதலியவைகளில் வியாபாரம் செய்கிறோம். எங்கள் "மாதாந்திர ஷேர் மார்க்கெட் ரிப்போர்ட்டு" ஒன்றுக்கு எழுதுங்கள்.

**வருஷ சந்தா ரூ. 3**

மாதிரி பிரதி கேட்பவர்களுக்கு இனமாக அனுப்பப்படும்

இந்த ஸிண்டிகேட்டின் ஷேர்களை விற்க ஏஜண்டுகள் தேவை

படிதலோடும் நடந்து கொள்வாய் என்று எனக்குத் தோன்றவில்லை. அப்படி இருக்க உன்னை நான் தேர்ந்தெடுப்பேன் என்று உனக்குத் தோன்றுகிறதா?"

"எனக்கு நம்பிக்கையில்லை. எப்போது உங்கள் முகத்தைப் பார்த்தேனோ அப்போதே நான் இதில் தோல்வி அடைவேன் என்று எனக்குத் தெரிந்துவிட்டது. நேற்றைய அனுபவத்திலிருந்தே உமக்கும் எனக்கும் அஜகஜாந்திரம் என்று உமக்குத் தெரியவில்லையா? குட்மார்னிங். நான் சென்று வருகிறேன்" என்று புறப்பட எத்தனம் செய்தான்.

லக்ஷ்மணன் அவனோடு பேச்சுக் கொடுத்துக் கொண்டே யோசித்தபடி இருந்தார். இந்தப் பயலுக்கு என்ன கர்வம். "இவனைத் தேர்ந்தெடுத்துவிட்டு அக்ரிமெண்ட் முதலிய எழுதி வாங்கிக்கொண்டு பிறகு அவனைப் படாதபாடு படுத்தித் தக்க புத்தி கற்பிக்க வேண்டும்" என்று முடிவு செய்துகொண்டு புறப்பட எத்தனித்த வேணுவைத் தடுத்து, "என்னப்பா. ரொம்ப பிகு பண்ணுகிறாயே! நான் அற்பவிஷயங்களையெல்லாம் பொருட்படுத்துகிறவனல்ல. அவைகளையெல்லாம் நான் அப்போதே மறந்துவிட்டேனே! உன் குரல் முகவெட்டு இவைகளெல்லாம் உன்னைச் சினிமாவுக்கு லாயக்காகச் செய்கின்றன. இதில் மாதம் முப்பத்தைந்து ரூபாயில் ஐந்து வருஷ காலம் இருப்பதற்கு என்ன சொல்கிறாய்?" என்றார்.

"ஐந்து வருஷமும் மாதம் முப்பத்தைந்து ரூபாய்தானா? அப்படியானால் எனக்கு வேண்டாம்"

"சேச்சே. முதல் வருஷம் அப்படி. பிறகு உன் யோக்கியதைக்குத் தக்கபடி உன் சம்பளத்தில் ஏற்றத் தாழ்வு ஏற்படும்."

"சரி. அப்படியானால் ஒரு வருஷத்திற்கு மட்டும் அக்ரிமெண்ட் எழுதிக் கொள்ளுங்கள்"

* * *

அன்று மாலை அவன் வீடு திரும்பும் போது அவனுக்கிருந்த சந்தோஷத்திற்களவே இல்லை. அவன் ட்ராமில் ஏறி உட்கார்ந்துகொண்டதுகூட அவனுக்குத் தெரியாது. தன்னையே மறந்திருந்தான் அவன். கண்டக்டர் வந்து "டிகட் ப்ளீஸ்" என்றபோது ஒரு ரூபாயை அவனிடம் நீட்டி 'லஸ் ஒண்ணு' என்றான்.

"இது எக்மோர் போகும் ட்ராம். மைலாப்பூர்வண்டி பின்னால் வருகிறது" என்றான் கண்டக்டர் சிரித்துக்கொண்டே.

வேணுவுக்கு அவமானமாக இருந்தது. பலர்முன் தன்னைத்தானே கேவலப்படுத்திக் கொண்டோமே என்று அவன் வெட்கப்பட்டான். என்றாலும் சமாளித்துக் கொண்டு "ஸெண்ட்ரலுக்கு ஒன்றுதா" என்றான். பிறகு செண்ட்றலில் இறங்கிப் பின்னால் வந்த மைலாப்பூர் வண்டியில் ஏறி உட்கார்ந்தான்.

தான் இன்னும் சில தினங்களில் ஓர் பிரபல நடிகனாய் விடப் போவதாகவும், தன் பெயர் இந்தியா முழுவதும் பரவப் போகிறதென்றும் அவன் மனக்கோட்டைகள் கட்டியவண்ணம் இருந்தான்.

இவ்வாறு ஆகாயக்கோட்டைகளுள் சஞ்சாரம் செய்துகொண்டிருந்த அவன் மனம் திடீரென இப்பூவுலகிற்கு வந்து சுய உணர்வு பெற நேர்ந்தது. யாரோ தன் வலக்கால்பெருவிரலை மிகவும் முரட்டுத்தனமாக மிதித்ததால் அவன் "யாரடா மிருகம்" என்று முகத்தைச் சுளித்துக் கொண்டு காலைத்தூக்கினான்.

தன் காலை மிதித்தது ஓர் ஸ்திரீயின் குதிகால் என்று தெரிந்ததும் அது யார் என்று மேலே நிமிர்ந்து பார்த்தான்.

"நான் மிகவும் வருந்துகிறேன்" என்றாள் அவன் முன்நின்றவள்.

அவளைப் பார்த்ததுதான் தாமதம் அவன் தன்னையும் அறியாமல் ஓர் அசட்டுச் சிரிப்புச் சிரித்தான். ட்ராமில் ஒரே கூட்டமாய் இருந்ததால் அவள் நின்று கொண்டிருக்கிறாள் என்றறிந்த அவன் தான் எழுந்து தன் ஆசனத்தை அவளுக்கு அளித்தான்.

"வந்தனம்" என்றபடி அவள் அவ்வாசனத்தில் அமர்ந்தாள். அவள் முகவசீகரத்தைக் கண்ட அவன், தனது சினிமா

உலகை மறந்து விட்டான். "அடாடா என்ன அழகு, என்ன அழகு! அவளுடைய கண்களுக்கு நிகர்வேறு ஏதாகிலும் உண்டா? அந்த உதடுகளின் அமைப்பைத் தான் என்ன வென்று சொல்லுவது அவள் குரல்தான் என்ன இனிமை" என்று சிந்திக்கலானுன்.

"காலில் காயம் பட்டுவிட்டதா? தெரியாதத் தனமாய் மிதித்து விட்டேன் மன்னிக்கவேண்டும்" என்ருள் அம்மாது.

"பரவாயில்லே. பிரமாத படுத்துகிரீர்களே," என்று இளித்தான் வேணு.

"இருந்தாலும் கடவுள் கொடுத்த கண்களிருக்கும் போது அவைகளே உபயோகித்திருக்கலாம் அல்லவா?"

"இந்தக் கூட்டத்தில் இதை யெல்லாம் கவனிக்க முடியுமா?" என்ருன் வேணு.

இதற்குள் அம்மாதுடன் இன்ெனுரு ஸ்த்ரீ பேச ஆரம்பித்து விட்டதால் அவன் அத்துடன் திருப்தியடைய வேண்டி வந்தது.

எட்வர்ட் எலியட்ஸ் ரோட் அண்டை ட்ராம் நின்றது. அம்மாது வண்டியை விட்டிறங்கினுள். வேணு இறங்கவேண்டியது மைலாப்பூரிலல்லவா? ஆனுல் அவனும் அங்கேயே இறங்கி விட்டான். தன்னே இழுக்கும் காந்தசக்தி முன்னுல் செல்ல, தான் மாத்திரம் பின் தங்க முடியுமா?

அவன் தன்னேப் பின்பற்றுவதை யறிந்த அவ்வனிதை சற்று நின்று அவன் அணுகியதும், "நீங்களும் இங்கு தான் இருப்பதோ?" என்ருள்.

"ஆம்" என்று விட்டான் ஒரு குண்டு. "நீங்களும் இங்கு தான் இருப்பதோ?"

"ஆமாம். சந்திரபவனம் இருக்கிறதே அங்குதான் இருக்கிறேன் தங்களுக்கு என்ன வேலேயோ?"

தன்னேக் கேவலம் ஓர் சினிமா நடிகன் என்று கூறிக் கொள்ள அவன் பிரியப்படவில்லே. சினிமா நடிகன் என்ருல் என்னவோ மிக இழிவானது என்று அவன் மனத்திற்குப் பட்டது.

"ப்ராட்வேயில் சங்கர்ராம் கம்பெனியில் மேனேஜராய் இருக்கிறேன். நீங்கள் படித்துக்கொண்டு இருக்கிறீர் போல் இருக்கிறது"

"ஆம். இந்தவருஷம் பி. ஏ. வுக்குப் பணம் கட்டணம்"

* * *

"என்னடீ என்னமோ பிரமாதப்படுத்துகிருயே! என்னதான் ஒரு மனிதன் பிடித்து விட்டாலும் அவனேப் புகழ்வதற்கு ஒரு எல்லே இல்லேயா" என்ருர் செல்வராஜ் தன் பெண் மதுரத்தை நோக்கி.

"இல்லேயப்பா. அவரை நீ நேரே ஒரு முறை பார்த்தாலல்லவாசொல்லுவாய். என் பரீக்ஷை முடிந்ததும் நான் அவரைத்தான் கல்யாணம் செய்து கொள்ளப் போகிறேன்."

"அவசரப் பட்டுக் கொண்டு அப்படியொன்றும் செய்து விடாதே. ஆசாமி ஓர் பக்கிரி என்று பிறகு தெரிந்தால் என்ன செய்வாய்? அவனேப் பற்றி ஆரத்தீர விசாரிக்க வேண்டாமா. அசடே."

"நான் ஒன்றும் அசடல்ல, அவருக்குச் சங்கர்ராம் கம்பெனியில் மேனேஜர் வேலே. மாதம் நூறு ரூபாய் சம்பளம், அவரையே நாளேக்கு வரவழைக்கிறேன். அவரோடு ஒரு வினுடி பேசிப் பழகினுல் நீயே சொல்வாய்" என்ருள் மதுரம்.

"பார்ப்போம். பிருகஸ்பதி எப்படிப் பட்டவன் என்று நான் சினிமா டைரக்டர் அல்லவா? சாதாரணமாய் என்னே யாரும் திருப்தி செய்ய முடியாது."

"இவர் அசாதாரணப் பேர்வழி தெரியுமா?"

* * *

மாலே நாலரை மணியிருக்கும், லக்ஷ்மி சினிடோனில் நம் லக்ஷ்மண முதலி வேணுவைப்படாத பாடு படுத்திக் கொண்டிருந்தார். வேணுவுக்குப் போதும் போதும் என்ருய் விட்டது. ஏன் இந்த வேலேயை ஏற்றுக் கொண்டோம் என்று அவன் தன்னே நொந்து கொள்ளாத வேளே இல்லே. இவனும் ஒரு மனிதனு? மிருகம்! அவனேயும் மற்ற நடிக நடிகைகளேயும் என்ன பாடுபடுத்திவைக்கிருன் பதர்.

டைரக்டர் வழக்கத்துக்கு மாருக இன்று சீக்கிரம் ஒத்திகையை முடித்து விட்டார்? வேணுவுக்கு அதிருஷ்டம்தான் போலும்.

4-40-க்கு ட்ராம் ஏறினன். சரியாய் 5-15-க்கெல்லாம் மதுரத்தின் வீட்டை யடைந்தான். தான் 15 நிமிஷம் முன்ன தாக வந்ததைப்பற்றி அவள் மிகவும் சந் தோஷித்தாள்.

"இன்று அப்பா உங்களை டெஸ்ட் பண் ணப் போரார் ஜாக்கிரதை. அவர் சினிமா டைரக்டர் என்பது ஞாபகமிருக்கட்டும்" என்று எச்சரித்தாள் மதுரம்.

"டைரக்டருக்கு ரெண்டு கொம்பு உண்டா என்ன? ஒரு சிறிய விஷயம் பாரு. நான் பட்டணம் வந்த வண்டியில் ஓர் கர்வம் பிடித்த சினிமா டைரக்டர் மூக்கைச் சட்னி செய்து, காலே முறித்து, அவன் கர்வத்தை அடக்கினேன் தெரி யுமா? துன்மார்க்கமான அந்த டைரக்டர் பயல்களையே ஒரு கை பார்த்த எனக்கு சாதுவான உன் தகப்பனுரைத் திருப்தி செய்வது முடியாதா?"

இம்மொழிகளைக் கேட்டதும் மதுரத் தின் முகம் விகாரமாய் மாறுபட்டது.

"அந்த டைரக்டர் பெயர் என்ன தெரி யுமா?"

"லக்ஷ்மண முதலி"

"லக்ஷ்மண முதலியா?"

"ஆம். அதில் என்ன அதிசயம் இருக்கிறது?"

"அவரையா நீர் அப்படியெல்லாம் செய்தீர். என் தகப்பனர் எனக்கு அப் போதே இதையெல்லாம் சொன்னர்"

"உன் தகப்பனுக்கும் லக்ஷ்மண முத லிக்கும் சினேகமாக்கும்."

"என் தகப்பனரை யார் என்று நினைத் துக்கொண்டு இருக்கிறீர்கள்? அவர்தான் லக்ஷ்மண முதலி."

"என்ன மதுரம் விளையாடுகிருய்? உன் தகப்பன் பெயர் செல்வராஜ் அல் லவா? நான ஏமாறுவேன்"

"விளையாடவில்லை உண்மைதான் சொன் னேன் சினிமாத் தொழில் மிக இழிவான தென்பது என் தகப்பனர் பாவம். தான் சினிமாத் துறையில் இருப்பதாய்த் தன் சினேகிதர்கள் அறியக்கூடாது என்று அவர் தன் பெயரை லக்ஷ்மணன் என்று மாற்றிக்கொண்டார். சினிமா வுலகில் செல்வராஜ் என்ருல் யாருக்கும் தெரி யாது லக்ஷ்மணன் என்ருல்தான் தெரி யும்"

வேணுவின் தலை சுற்ற ஆரம்பித்தது, கடைசியில் தன்னைப் படாத பாடும் படுத் திய "அந்தக் கிராதகன் மகள்தானு இவள்? அவன் வரும்முன் தான் மறைந்து விடவேண்டும். இனி இந்தப் பக்கம் தலை காட்டக்கூடாது. அவன் வந்தானு ருல் கார்யம் கெட்டுவிடும். சங்கர்ராம் கம்பெனியில் தனக்கு வேலை யென்று பொய் சொல்லி இருக்கிறோமல்லவா? அவன் வந்தால் உண்மை வெளி வந்து விடாதா? பிறகு அவள் முன் தன் மானம் ஒரு காசுக்கும் உதவாமல் போய்விடுமே. ஆம், ஏதாவது சாக்குப் போக்குச்சொல்லி தப்பிக்கவேண்டும். தாமதிக்கக்கூடாது." என்று தீர்மானித்தான்.

"மதுரம் ஒரு நிமிஷம் பொரு. இதோ என் வீட்டுவரை போய்விட்டு வந்து விடு கிறேன்," என்று எழுந்தான் வேணு.

"தகப்பனர் வரும் வேளையாயிற்று. அவரை அவமானப் படுத்திேேம என்ற பயமா! அந்த பயம் உமக்கு வேண்டாம். நான் பார்த்துக்கொள்கிறேன்" என்ருள் மதுரம்.

"இல்லை மதுரம். நான்தான் பயப் படும் பேர்வழி யல்லவே. 15 நிமிஷத்தில் திரும்பி வந்து விடுகிறேன்," என்று இரண்டடி முன் வைத்தான்.

வெளியில் ஓர் மோட்டார் வந்து நின் றது. வேணுவின் இருதயம் துடித்தது.

"அதோ, அப்பாவே வந்துவிட்டார்," என்ருள் மதுரம்.

"கெட்டது குடி" என்று முணு முணுத் துக் கொண்டான் வேணு.

"வந்து விட்டானு உன் மன்மதன்" என்றபடி நுழைந்தார் லக்ஷ்மணன்.

# நாரி கல்யாண்

அல்லது

## ஸ்திரீகள் சர்வ ரோக நிவாரண ஔஷதம்

மஹாத்மாக்களான நம் தேசத்து ரிஷிகள் நம்மிடம் கொண்ட கருணையினல் ஆயுர்வேத்தை யருளிச்செய்தனர். ஆயுர்வேதம் பூர்வத்தில் ஓலைச் சுவடியில் எழுதப்பட்டிருந்தது. இப்பொழுது புத்தக ரூபத்தில் நமக்குக் கிடைத்திருப்பவை மிகவும் சொற்பமாகும். ஆயுர்வேதம் அக்காலத்தில் எழுதப்படாமல் வாயினலேயே பயிலப்பட்டு வந்தது. பண்டைக் காலத்து ஓலைச் சுவடிகளிலொன்று எங்களிடம் கிடைத்திருக்கிறது. அதுதான் நாரி கல்யாண் என்னும் மருந்து. நாரி கல்யாண் வியாதிகளை ஆச்சரியப்படும்படி சொஸ்தப்படுத்துகிறது. நாரி கல்யாண் வைத்ய உலகத்துக்கே இது வரையில் புலனகாத அபூர்வ மருந்து. நாங்கள் இம் மருந்தை எல்லோரும் நன்மையடைய வேண்டும் என்னும் எண்ணத்துடன் குறைந்த விலையில் விற்கிறோம். ஆயுர்வேத வைத்யர்களும் ஆங்கில வைத்யர்களும் இந்த மருந்தைப் பரீக்ஷிக்க வேண்டுகிறோம்.

### நாரி கல்யாண்

மாதவிடாய்க் காலத்தில் அதிகத் தொந்தரவேற்படுதல் (Dysmenorrhoea) மாதவிடாய் நின்று போதல் (Amenorrhoea) வெள்ளை, மாதவிடாய்த் தவக்கம், ஸ்திரீகளின் மலட்டுத்தன்மை, முதலியவைகளுக்கு ஏற்றது என்று பரீக்ஷை செய்து உபயோகப்பட்டிருக்கிறது.

நாரி கல்யாண் Menorrohogia, Metrohogia, நரம்புத்தளர்ச்சி, மயக்கம், அடிவயிற்றிலும் அரையிலும் வலி காணுதல் முதலியவைகளுக்கு நிகரற்ற உத்தமமான மருந்து.

நாரி கல்யாண் ஆயுர்வேத மருந்துச் சரக்குகளையும் பச்சிலைகளையும் சேர்த்துச் செய்யப்பட்டிருப்பதனல் தொடர்ந்து அநேக நாட்கள் சாப்பிட்ட போதிலும் சரீரத்துக்குத் தீங்கு செய்யாது. உலோகப் பொருள்கள் இதில் சேர்க்கப்பட வில்லை.

நாரி கல்யாண் மாதவிடாய் சிரம மில்லாமல் ஏற்படச் செய்கிறது. ஆயாச முண்டாதல், ஹிஸ்டீரியா; தூக்க மின்மை முதலியவைகளுக்கு இணையற்றது. ஒரு டானிக்கைப் போலவும் உபயோகிக்கலாம். இரத்த விருத்தி, சரியான பசி, சரியான மலப்பிர விர்த்தி முதலியவைகளைக் கொடுத்து ஸ்திரீகளின் வாழ்க்கையை ஸந்தோஷ முள்ளதாகச் செய்கிறது.

விவரங்களுக்கு :

**பரசுராம் சித்த ஔஷதாச்ரமம்**

**59-A லாய்ட்ஸ் ரோடு, ராயப்பேட்டை மதராஸ்**

தலைமை ஆபீஸ் : திருவண்ணமலை.

"ஓ! உனக்காகத்தான் காத்துக்கொண் டிருக்கிறார்." என்று, மதுரம் வேணுவைக் சுட்டிக்காட்டி, ' 'வேணு, இவர்தான் அப்பா, அப்பா, இதுதான் வேணு. சங் கர்ராம் கம்பெனியில் மேனேஜர்."

"அடே நீதானா? உனக்கா சங்கர்ராம் கம்பெனியில் வேலை. மதுரம் எனக்குத் தெரியும் நீ மோசம் போவாய் என்று. இவன் உன்னிடம் பித்தலாட்டம் செய்து உன்னை ஏமாற்றி இருக்கிறான். இவன் என் கீழ் நாய்போல் உழைத்து வரு கிறான். நல்லகாலம், விஷயம் மிஞ்சுமுன் நான் வந்தேனே," என்று கடுகடு என்று கூறினார் செல்வராஜ்.

"வேணு, அப்பா சொல்வது உண்மை தானா?"

"ஆம்" என்றான் வேணு வேறு வழி யில்லாமல். அவள் முகத்தைப் பார்க்கவும் அவன் வெட்கினான்.

"அடேப்பாவி, என்னைக் கடைசிவரை யில் மோசம் செய்துவிட்டாயே. சிச்சி. "உன் முகத்தில் விழிப்பது பாவம்" என்று சீரிய நாகம்போல் சினந்தவளாய் மதுரம், "வேணு, இனி இந்த வீட்டின் பக்கம் காலை வைக்காதே! போ" என்று கடிந்து கூறினாள்.

"மதுரம்......"

"போ வெளியில். இனி எனக்கும் உனக்கும் பேச்சுக் கிடையாது. போ" என்றாள் மதுரம் கண்டிப்பாக.

தலை குனிந்தபடி வேணு வெளியே சென்றுவிட்டான்.

* * *

அன்று இரவு மதுரத்திற்குத் தூக்கமே வரவில்லை. தான் தன் உயிருக்கு உயி ராய்க் காதலித்து வந்த வேணு தன்னைப் பொய் சொல்லி வஞ்சித்ததால் அவளுக்கு வேணுவின் மேல் கோபம் கோபமாய் வந் தது. இனிப் புருஷர்களையே நம்பக் கூடாது என்று நினைத்தாள். மறுநாள் அவனை ட்ராமில் சந்திக்க நேர்ந்தால் அவ னைப் பார்க்கக்கூடக் கூடாது என்று தீர் மானித்துக்கொண்டாள்.

ஆனால் அவள் ட்ராமில் ஏறியபோது. வேணு அவளுக்கு அக்கஷ்டத்தைத் தர வில்லை. அவள் ஏறுகிறாள் என்று தெரிந்த தும் தான் ட்ராமைவிட்டு இறங்கிவிடு வான்.

இவ்வாறு இரண்டு தினங்கள் நடந்தன. மதுரத்திற்கும் வேணுவின் மேலிருந்த கோபம் ஒருவாறு தணிந்தது. வேணு ஏன் தன்னிடம் அவ்வாறு பொய் சொன் னான் என்றுகூடக் கேட்காமல் அவனை அவமானப்படுத்தியது நியாயமல்ல என்று எண்ணிக்கொண்டாள்.

மறுநாள் சென்ட்ரலண்டை ட்ராம் நின் றது. மதுரம் ஏறப்போகிறாள் என்று நினைத்த வேணு ட்ராமிலிருந்து கீழே இறங்கினான். ஆனால் அவன் நினைத்தபடி மதுரம் ட்ராமில் ஏறவில்லை.

"வேணு உன்னோடு ஒரு விஷயம் பேசவேண்டும்" என்றாள் மதுரம்.

வேணுவுக்குத் தன் காதுகளையே நம்ப முடியவில்லை.

"மதுரம் என்னோடா பேசவேண்டும் என்றாய்" என்றான் வேணு.

"ஆம். வருகிறீர்களா போகலாம்" என் றாள் மதுரம்.

"வேணு நீ ஏன் அன்று பொய் சொன்னாய்?"

என்னைக் கேவலம் ஓர் சினிமா நடிகன் என்று கூறிக்கொள்ள எனக்கு வெட்க மாய் இருந்தது. என் அக்ரிமெண்ட் ஒரு வருஷகாலமே யாதலால், அது முடிந்த தும் சொந்தமாக ஒரு தொழிலை ஆரம் பிப்பதென்றும், அதன் பிறகு உன்னிடம் உண்மையைச் சொல்வதென்றும் எண்ணி னேன். உன்னை வஞ்சிக்கவோ, அல்லது த்ரோகம் செய்யவோ நான் மனத்தாலும் நினைத்தவனன்று" என்றான் வேணு.

"வேணு என்னை மன்னிக்கமாட்டீர் களா? விஷயத்தை யறியாமல் அன்று உங்களிடம் மிருகத்தன்மையாய் நடந்து கொண்டேன்—" என்று வருந்தினாள் மதுரம்.

"நீ யல்லவா என்னை மன்னிக்கவேண் டும். பொய் சொன்னது நானல்லவா?"

# சாந்தியற்ற இரவு

[மு. கா. சுப்ரமணியன்]

காலையில் எழுந்திருந்தேன்; வெளுத்தது. முந்தியநாள் சாயங்காலத்திலும் இரவிலும் மேற்கிலிருந்து வீசிய பேய்க்காற்று நின்று, சுகமாக தென்றல் வீசியது. அதற்கு உருவம் மட்டுமிருந்தால் கட்டியணைந்திருப்பேன். காலைக் கடனை முடித்துத் திண்ணைமீது வந்துட்கார்ந்தேன். காலையின் சாயை இன்னும் மாறவில்லை. கதிரவனின் கிரணங்கள் சூடேறவில்லை. மனது உற்சாகம் நிரம்பி இருந்தது; சாந்தியும் இருந்தது.

காலையின் காட்சியை அனுபவிக்கலாமென்று எழுந்திருந்து ரோடுபக்கமாய் நடந்தேன். ரோடின் இருபக்கத்திலும் பெண்கள் வீட்டுவாசலில் கோலம் போட்டுக்கொண்டிருந்தனர். மனம் துள்ளிநின்றது; நடையும் வேகமாகவே விழுந்தது. இரண்டு பர்லாங்கு தூரம் சென்று காளி குளத்தின் படித்துறையில் உட்கார்ந்தேன். தூரத்தில், ரோட்டில், வானைமுட்டிய வைக்கோல் வண்டியொன்று மலை போல் நகர்ந்தது. பாலசூரியனின் செங்கதிர்கள், காற்றில் குதித் தெழும் வைக்கோல் சிலும்புகளைப் பொன்னிறமாக்கிக் காண்பித்தன. காளி கோயிலின் ஸ்தூபியும் ஒளியைப் பிரதிபலித்து கண்ணைப் பறித்தது.

நேராய் குளத்தை நோக்கினேன். சிற்றலைகள் வளையவந்து படியைத் திரும்பத் திரும்பச் சோர்வின்றி தொட்டன. ஏதோ நினைத்தவனாய் சட்டென்று கடைசி படிக்குச் சென்று தண்ணீரில் காலைத் தொங்க விட்டுக்கொண்டு உட்கார்ந்தேன். மீன் கொத்தி யொன்று ஜலமட்டத்திற்கு மேல் அப்படியே நகராமல் சிறகையடித்துக் கொண்டிருந்து, சமயம் பார்த்து ஒரு மீனை அடித்துக் கொண்டு சென்றது! பின் திரும்பினேன்.

அதே படியின் மற்றொரு கோடியில் ஒருவன் உட்கார்ந்திருந்தான். அவன் எனக்கப்புறம்தான் வந்திருக்க வேண்டும். அவனும் என்னைப் போலவே காலைத் தண்ணீரில் தொங்கப் போட்டுக்கொண்டிருந்தான். அவன் உட்கார்ந்திருந்த தோரணையும் என்னுடையதைப் போன்றே இருந்தது.

"இன்று காலை மிகவும் ரம்யமாக இருக்கிறது" என்றேன் நான், பேச்சை ஆரம்பிக்க.

அவன் என்னை விறைத்துப் பார்த்தான். அந்தப் பார்வையில் நான் நடுங்கி விட்டேன். நான் அவ்வாறு உற்சாகத்தோடு இருக்கக் கூடாதென்று என்னை அதிகாரம் பண்ணுவது போலிருந்தது அந்தப் பார்வை. நான் பேசாமல் நடுக் குளத்தை நோக்கினேன். மறுபடியும் அந்த மீன் கொத்தி மற்றொரு மீனை அடித்துக்கொண்டு போயிற்று.

'களுக்' என்று சிரித்துவிட்டேன் நான்.

அவனும் 'கடகட' வென்று சிரித்தான்; காளி கோயிலிலிருந்து எதிரொலி வந்தது. அது என் உற்சாகத்தை யெல்லாம் கொண்டே போய்விட்டது. காரணமில்லாமல் என்னை ஒருபயம் சூழ்ந்துகொண்டது.

துடைநடுங்க, மெல்ல எழுந்திருந்தேன். அவனும் எழுந்தான். என்னை யாரோ நெஞ்சைப் பிடித்து அமுக்குவதுபோ லிருந்தது. ஏனோ?

வீடு நோக்கி நடந்தேன். அவனும் தொடர்ந்தான். பாதி வழியில் அவன் கேட்டான்:

"பக்கத்துக் கிராமத்தில் எங்காவது சாப்பாடு போடுவார்களா?"

எனக்கு உயிர் வந்தது.

"ஏன்? என் வீட்டிலேயே சாப்பிடலாம் தாங்கள் பிராமணாள்தானே?"

"ஆமாம், எல்லாம் பிராம்ஹணந்தான்" என்று அலக்ஷியம் கலந்த கடுமையான குரலில் சொன்னான்.

## 2

அன்று பகலில் என்னோடு சாப்பிட்டான். பின் திண்ணையில் வந்து படுத்தோம். அவன் மல்லாந்து படுத்துக் கண்ணை மூடிக்கொண்டு ஏதோ யோசனை செய்தவாறு இருந்தான். அவன் முகம் மட்டில் கடுமையாகவே இருந்தது. நான் அவனுடன் பேச்சுக் கொடுக்கவில்லை. ஏன், பேச்சுக்கொடுக்கத் தைரியமில்லை. விருப்பம் உண்டு ஆனல்.

இருந்தாற் போலிருந்து, "நாளைக்குப் போகிறேன்" என்றான்.

"ஆஹா" என்றேன், சிறிது பயத்துடனேயே.

பகல் பூராவையும் அவ்வாறே கழித்தான்.

ராத்திரியும் சாப்பிட்டாய்விட்டது. திண்ணையில் வந்து உட்கார்ந்தோம். கிராமமான போதிலும் எலக்ட்ரிக் லைட் உண்டு. என் வீட்டிலும் போட்டிருந்தேன். தெருவில் விளக்கை அணைத்துவிட்டுப் படுத்துக் கொண்டோம். சிறிது நேரம் சென்றது.

"சொல்கிறேன் கேள்" என்றான். நான் திகைத்துக் கேட்க ஆரம்பித்தேன்.

## 3

"நான் இவ்வாறு தேசாந்திரியாய்க் கிளம்பி விடுவேனென்று ஒருக்காலும் நினைத்தவனல்ல. நான் மறுகல்யாணம் செய்துகொள்ளும் போது எனக்கு வயது 43 தான்................................"

நான் அதைக் கண்டிக்க வேணுமென்று ஏதோ சொல்ல ஆரம்பித்தேன். ஆனல் அவன் என்னைப் போசாமல் அடக்கிப் போட்டான்.

"அம்புஜத்திற்கு வயது அப்போது பதினேழு அவளை அவள் இஷ்டத்திற்கு மாறாகத்தான் கல்யாணம் செய்து கொடுத்தார்கள். அது எனக்குப் பின்னால் தெரிய வந்த விஷயம்."

இப்போது கொஞ்சம் கனைத்துக் கொண்டு தொடர்ந்தான்.

"அவள் என் வீட்டிற்கு வந்ததிலிருந்து என்னுடன் பேசுவதேயில்லை. ஊமையோ என்று நினைத்தேன் ஆனல் அண்டை அயல் வீட்டுப் பெண்களுடன் பேசி ஜமாய்த்துக் கொண்டிருந்தாள். சுருங்கச் சொன்னால், அவள் எனக்கு வேளா வேளைக்குச் சாதம் போடுவதைத் தவிர, அவளுக்கும் எனக்கும் யாதொரு சம்பந்தமுமில்லை. நானும் அவளுடன் பேசிப் பார்த்தேன்; குலாவிப்பார்த்தேன்; கெஞ்சிப்பார்த்தேன்; ஜபம் சாயவில்லை. 'ஏதடா, வயதானவனைக் கட்டிக் கொண்டோமோ' என்றவருத்தமோ என்றால், அவள் ஒரு நாளாவது அழுது நான் பார்த்தது கிடையாது. அவள் கண்கள் கலங்கிக்கூட நான் பார்த்ததில்லை. இதேபோல் நாட்கள் சென்றன. எனக்குக் கோபம் பொங்கி வந்தது. நான் நினைத்தேன்: 'இவள் நெஞ்சம் ஈரமற்றது. தவிர அது மிகவும் கடினமானது' என்று.

"எனக்குப் பொறுக்கமுடியவில்லை. கேட்டு விட்டேன் ஒரு நாள்.

"எவ்வளவு நாள் இவ்வாறு இருப்பதாக உத்தேசம்?"

"ஏன்?"

"இல்லை, கேட்கிறேன்."

"ஏன்? கடைசி வரையில்."

"அப்படி இருக்கக்கூடாதென்பது என் இஷ்டம்."

"என்னைப் பலவந்தமாகக் விவாஹம் செய்து கொண்டது தங்கள் இஷ்டமானல், என்னை என் இஷ்டத்திற்கு மாறாக கன்னிகாதானம் செய்து கொடுத்தது என் பெற்றோரது இஷ்டமானல், இவ்வாறு இருப்பதே என் இஷ்டம்."

"அவள் அமைதியுடன்தான் சொன்னாள்.

"ஒரே அடியாக அடித்துப்பேசி விட்டாள். அவள் கண்களில் நீர்ததும்பி அப்போது தான் பார்த்தேன். அவள் சுந்தர வதனத்தினின்றும் அதைத் துடைக்க நான் துடித்தேன். ஆனல் அவள் என்னை ஒருபார்வையால் நகரும்படி செய்து விட்டாள். அவளை நான் அணுகவேயில்லை.

"நான் ஒரு பண்ணையில் வேலைபார்த்து வந்தவன். சாப்பாட்டிற்கு வேண்டிய ஒரு வாய்க்கு மேலேயே கிடைத்தது. ஆனல்




## முன்னேற்றத்தில் முன்னணி!

பிணை

பாதுகாப்பு

துரிதமான பட்டுவாடா

முழு திருப்தி

ஆகியவைகளுக்கு

உங்கள் ஆயுளையும் மோட்டாரையும் வான்கார்டில் இன்ஷ்யூர் செய்யுங்கள்!

**தி வான்கார்ட் இன்ஷ்யூரன்ஸ் கம்பெனி**
**லிமிடெட்**

மவுண்ட் ரோட், சென்னை

போன்: 8558 தந்திவிலாசம்:— “வான்கார்ட்”

வாழ்க்கையின் சந்தோஷம் எனக்கு மறுக்கப்பட்டதாகவே நான் கருதினேன். என் மனம் இடிந்தது. உடல் சோர்ந்தது. வியாதியில் விழுந்து விட்டேன்.

"உபசாரங்களும் சிச்ருஷைகளும் செய்தாளவள். ஆனால், அதை யேற்றுக் கொள்ள தைரியமோ பற்றுதலோ எனக்கு இல்லை. உடம்பு கொஞ்சம் சௌகரியமாகியது. ஒரு நாள் இரவில், ஏதோ நினைத்துக் கொண்டு, எழுந்தேன். வேண்டிய சில துணிமணிகளை எடுத்துக் கொண்டு கிளம்பிவிட்டேன். அவளைப் பார்த்தேன் விளக்கின் வெளிச்சத்தில். நிச்சிந்தையாய் தூங்கிக்கொண்டிருந்தாள். ஆம், அவள் என் வீட்டிற்கு வந்து பத்து மாதங்கள்தான் ஆயின. இன்னும் ஐந்தாறு மாதங்கள் சென்றால், அவள் மனம் மாறி என்னைச் சேர்ந்தாலும் சேரலாம். ஆனால் நான் அதை விரும்பவில்லை. கிளம்பிவிட்டேன் இவ்வாறு. ஆனால் நான் என் மடத்தனத்திற்கு வருந்தினாலும், எனக்கு, வாழ்க்கையில் சந்தோஷம் மறுக்கப்பட்டதற்காக, அடிக்கடி கோபம் வருகிறது. அதற்கும் என் மடத்தனந்தான் காரணம். அதையும் நான் அறிகிறேன்."

## 4.

அப்போது எங்கள் வீட்டுச் சமையல்காரன் காரியங்களை முடித்துக் கொண்டு, படுக்க வருவதற்காக வாசல் 'லைட்'டைப் போட்டான்.

பளிச்சென்று வெளிச்சம் கண்ணைக் கூசியது. தவிரவானத்தில் கார்மேகம் புரண்டு, எங்கும் இருள் கவிந்திருந்தது! அது வெளிச்சத்தை பன்மடங்காகக் காட்டியது.

அந்நியனைக் கவனித்தேன். அவன் ஒரு பையை தலைக்கடியில் வைத்துப் படுத்திருந்தான். பையிலிருந்து ஒரு படம் பாதி வெளியில் தெரிந்தது. அதைக் கூர்ந்து கவனித்தேன். மனது அடித்துக் கொண்டது. பாய்ந்து அதை எடுத்தேன்.

"என் சித்தப்பா பெண் அம்புஜமல்லவா, இவள்?" என்று என்னையுமறியாமல் கத்தினேன்.

அதையே, மாரடைக்கப் பார்த்துக் கொண்டிருந்தேன். நான்மட்டும் அப்போது கல்கத்தாவில் இல்லாமல் இருந்தால் இவ்விவாஹம் நடந்திருக்குமா? சே, இதென்ன மடத்தனம், விதியை வெல்ல முடியுமா? இவ்விரண்டு கேள்விகளில் ஒன்றுக்கும் பதிலளிக்க முடியாமல் மனது தவித்தது.

தலையை நிமிர்த்தினேன். ஆளைக்காணோம்.* பையையும் காணோம். தெருக்கோடியைப் பார்த்தேன். ஒரு மின்னல் மாப்பிள்ளை பஞ்சு அய்யரின் உருவத்தை எடுத்துக் காட்டியது. மாப்பிளை பஞ்சு அய்யரை எனக்குத் தெரியாது. சொல்லித்தான் கேள்வி.

இரவு முழுதும் தூங்கவில்லை நான்.


மன்னார்குடி டி. மு. கோர்ட்டு
O. S. No. 460/1937.

R. அனந்தாழ்வார் அய்யங்கார்—வாதி
அண்ணாமலை பிள்ளை வகையரு—பிரதிவாதிகள்

ஷை நம்பர் வாதி வக்கீல் K. சின்னஸாமி அய்யர் தெரிவிக்கிறதாவது:—

இந்த நெம்பர் இஸ்தியார் சொத்துக்களை ஏலம் போடவேணுமாயும் ஷை ஏலத்தில் வாதியாவது அல்லது வாதி வக்கீலாவது ஏலம் கேழ்க்கவும் ஷை ஏலத்துகையை டிக்ரி துகை வகையறாவுக்கு உளவடைத்துக்கொள்ளவும் மனுக்கள் கொடுத்து 4-ம் பிரதிவாதி கமலக்கோனான் ஏல நோட்டீஸ் பர்மிஷன் நோட்டீஸ் வகையறாக்களை அவர் கடைசியாய் குடியிருந்த இடமாகிய மன்னார்குடி தாலுக்கா எடயரம்பேத்தி கிராமத்தில் உள்ள வீட்டிலும் ஷை நோட்டீஸ்களை இந்தக் கோர்ட்டு வாசலிலும் தனித்தனியே ஒட்டி சர்வு செய்யவும் பப்ளிகேஷனுக்கும் உத்திரவாகி 23-7-'41ல் ஈரங்கி போடப்பட்டிருப்பதால் ஆக்ஷேபனையை அன்று பகல் 10-மணிக்கு ஷை கோர்ட்டில் ஆஜராகி தெரிவித்துக் கொள்ளலாம் என்பதை இதின்மூலமாய் அறிய வேண்டியது.

மன்னார்குடி, 9-7-1941. } K. CHINNASWAMY IYER, *Vakil.*

# அனுராசபுரம்

[அ. வி. மயில்வாகனம்]

இற்றைக்கு இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன் இலங்கையின் தலை நகராக இலங்கிய அனுராசபுரம் என்னும் பட்டணம் தற்போது பார்வையிடுபவர்க்கு எங்ஙனம் காட்சியளிக்கின்ற தென்பதைக் கூறவே இக்கட்டுரை எழுகின்றது. எல்லாளன் முதலிய பழைய தமிழவரசரும் துட்டகைமுனு முதலிய சிங்களவரசரும் மிகச் சீருஞ்சிறப்பும் பெற ஆண்ட நாடே இவ் அனுராசபுரம். இது பிற்காலத்தில் பாழாயிற்று. எனினும், தற்காலம் இதனைப் புதுக்கியும் பெருக்கியும் கட்ட முயலும் சிங்கள அரசாங்க சபையினர் பலராவார். அவர்கள் வேணவா பலிப்பின் நாம் அனுராசபுரத்தின் பண்டைய புகழ் நிலையைக் கண்ணாரக் கண்டு களிக்கலாகும்.

வைகாசி விசாகம், போசன் முதலிய பெருநாட்களில் இப்பட்டணத்தைச் சென்று பார்த்தால் அது ஒரு கபிலவஸ்துவோ அல்லது புத்தகயாவோ என்று ஐயுறும் தன்மையதாகத் தோன்றும். இங்கு ஆயிரக்கணக்கான புத்த மதச் சிங்களவர் இக்காலங்களில் சென்று பழைய புத்த ஆலயங்களை வழிபடுவர். அவர்களுக்குப் 'பழைமை மறவாமை' என்பது இப்பட்டணத்தைக் குறிக்குமளவில் மிக அதிகம் உண்டு என்னலாம்.

இரண்டு பிரதான வீதிகள் தற்போதைய பட்டணத்தைச் சுற்றி உள்ளன. புறம்பே இருக்கும் வீதி உள் வளைந்து வளைந்து வட்டமாகச் செல்லும். இஃது ஏறக்குறைய ஆறு சதுர மைல் பரப்பு நீளத்தை உள்ளடக்கும். இவ்வீதியிலேயே நாம் பழைய ஆலயங்களின் பாழில்லங்களைப் பெரும்பாலும் காணலாம். ஊரின் மத்தியிலே ஆயிரங்கால் மண்டபத்திற்கு முன்பாக வெள்ளரசமரத்தின் கோயில் உண்டு. இவ்வரசமரத்தைப் பற்றி அறியாத இந்தியரும் இலங்கையினரும் இல்லை. இது, உருவத்தாற் சிறிதெனினும் எத்தனையோ ஆண்டுகளாக இதே நிலையில் நின்றிருக்கிறது, நிற்கின்றது, இன்னும் நிற்கும். அக்காலத்தில் புத்தகயாவில் நிகழ்ந்த சரித்திரம் தொடங்கி இன்று அனுராசபுரத்தில் நிகழ்வன ஈறாக, பௌத்தம் சம்மந்தப் பட்ட அளவிற்கு எதைக் கேட்டாலும் இவ்வரசமரம் கூறக் கூடும். இதுவும் ஒரு 'குளத்தங்கரை அரசமரம்' என்றால் தானாகவே வாய் விட்டுக் கூறிவிடுமன்றோ. இதற்கு முன்னால் உள்ள செப்புத் தகட்டு மாளிகை என்று அக்காலம் புகழுடன் விளங்கிய கட்டடம் இன்று நீண்ட கருங்கல் தூண்களின் தொகுதியாகத் தோன்றுகின்றது.

இதற்கு எட்டு ஆண்டுகளுக்கு முன் கட்டப்பட்டது மிருசுவெட்டி என்னும் கோபுரம். (158. கி. மு.) ஒருமுறை கைமுனு என்னும் அரசன், தான் வழக்கமாகக் குருமாருக்குக் கொடுத்துவரும் உணவுப் பொருட்களுள் மிருசுச் சம்பல் (மிளகாய்) ஒன்றைச் சேர்க்காதுவிட்ட குற்றத்திற்காக ஒரு கோயில் கட்டத் தீர்மானித்தான். பின்பு கூடிய சீக்கிரத்தில் ஒரு கோபுரத்தைக் கட்டி நிறுத்தி, அதற்கு அக் காரணப் பெயரையும் இட்டான் என்பதாக மகாவம்சம் கூறும்.

கி. மு. 140 வரையில் கட்டி எழுப்பியது உறுவன் வெலிசயா என்னும் கோபுரம். இதனையே அண்மையில் புத்த நண்பர்கள் புதுக்கி யமைத்துப் 'பேர்மா'விலிருந்து வந்த மணி முடியையும் ஏற்றினர். இம்முடி அனுராசபுரத்தின் எப்பாகத்தில் நின்று பார்ப்பினும் தோற்றமளிக்கும். இதன் அடிவாரத்தில் துட்டகைமுனுவின் சிங்களப்படைகளும் எல்லாளனின் தமிழ்ப் படைகளும் எதிர்த்துப் பொருவதுபோலும் அவர்களுக்கிடையே புத்தர் வந்து தடுப்பதுபோலும் ஒரு காட்சியை உருவகித்துக் காட்டும் சிலைகள் காண்கின்றன. இவற்றிலிருந்து அக்காலப்போர்

முறை, உடை, ஆயுதம், அணிவகுப்பு முதலியனபற்றிப் பல உண்மைகள் புலப் படுகின்றன.

இதனைத் தாண்டிக் கொஞ்சம் அப்பால் சென்றால் துப்பாராம, சேதவனராம, அபய கிரி முதலிய மூன்று கோபுரங்களும் தோன்றும். இவை எல்லாம் அழிந்து பட்டுப் பாழ்நிலையில் கிடக்கின்றன. குரங் குகள் மாத்திரம் குடியிருக்கும் மரங்களும் பற்றைகளும் இவற்றைச்சுற்றி உள. நாம் இக் கோயில்களைச் சுற்றிவரும்பொழு தெல்லாம் அக்காலத்திருந்த அரசர் புத்த மதத்திற்கெனச் செய்த பல தொண்டு களும் செங்கல்லால் இவ்வளவு உயரமான கோபுரங்களைக் கட்டி எழுப்பும் சக்தி வாய்ந்த சிற்பிகளின் ஆற்றலும் ஞாபகத் திற்கு வரும். ஆனால் இவற்றைப் பிற் காலத்தில் அழியவிட்ட அரசர்களின் சோம்பலையும் புத்திஈனத்தையும் நினைக்க மிக மனவருத்தமும் உண்டாகும். இனி, அப்பால் செல்வோம்.

பட்டணத்தின் மறுபக்கத்தில் இருப் பது இசுறுமினியா என்னும் கல்லாலயம். இது ஒரு கருங்கற் பாறை மேல் கட்டப் பட்டுள்ளது. இதனுள் ஆறடி நீளத்தில் ஒரு புத்த உருவம் கிடந்ததிருக்கோலத் துடன் காட்சியளிக்கின்றது. இதனைப் பார்த்தால் நம் புத்தர் பகவான் உயிருடன் எழுந்தருளி யுள்ளார்போல் தோன்றும். அவ்வுணர்ச்சிவரும் பொழுதும் இதனை உரு வகித்த சிற்பியை நாம் எப்படி மெச்சாது இருக்கலாம்?

இக் கோபுரத்தின் உச்சியில் ஏறினால் பட்டணம் முழுவதையும் பார்த்தல் ஆகும். இங்கு நின்றே கிழக்கு முகமாக நோக்கி னால் ஒரு சிறுமலைத்தொடர் தோன்றும். அத் தொடரில் சிகரங்களும் பலவுள. அவற்றுள் ஒன்றின்மேல் ஒரு பழைய கோபுரம் தோன்றும். அதுவே மிகிந்தலை மலையாகும்.

அனுராசபுரம் செல்பவர் எவரும் மிகிந் தலையைக் காணுதுவாரார். ஏனெனில், இந்தியாவிலிருந்து முதன் முதல் சென்ற மகிந்தன் என்பான் இங்கேயே முதன் முதல் இறங்கினதாகக் கதைகள் கூறுகின் றன. அப்படிப் பெயர்போன இடமொன் றைக் காண யாவரும் அவாவுவரன்றோ. இம்மலையின் உச்சியில் ஒரு கல்லில் 'பிராமி' எழுத்துக்கள் போன்ற பழைய பாளி மொழியில் ஒரு கல்வெட்டு இருக் கின்றது. இதனைப் பலர் சென்று வாசித் துப் பார்க்கின்றனர். இம் மலையின் வேறொருபாகத்தில் ஒரு சமநிலத்தில் இருப்புக்கம்பியால் செய்த அடைப்பு ஒன்று உண்டு. இவ்வடைப்பைச் சுற் றியே பல்லாயிரஞ் சனம் விழுந்து வணங் கும். மகிந்தமுனிவன் முதன்முதல் இறங் கியது இதனுள்ளேதான் என்பது தற்போ தைய கொள்கை. இம்மலையில் பல குகை கள் உள. இவற்றுள் புத்தகுருமார் இருந்து தவத்தில் காலங்கழிப்பர். இம் மலை அடிவாரத்தை நோக்கினால் நமது பழைய பட்டணம் தோன்றும். இவற் றிற் கெல்லாம் சிகரமாக உறுவன்வெலி சயா மணிமுடியானது வெளிச் சுற்றுத் தெருவிலுள்ள பல கோயில்களின் முடி களுக் கெல்லாம் ஒரு நடுநாயகம்போல் விளங்காநிற்கும். இப்படி இவ்வூர்க் கோயில்களின் சிறப்பு, மலை உச்சியில் நிற்பவருக்கு நன்கு காட்சியளிக்கும்.

பழைய காலத்து அரசர் கடவுள் வணக் கத்தில் மாத்திரமன்றி பயிர்ச்சியிலும் மிக ஈடுபட் டிருந்தனர் என்பதற்குச் சான்று கள் உள. தேவநம்பியதீசன் கட்டியதிச வீவா (288. B.C,) என்பதும், பசவாக் குளம் என்பதும், வட்டகாமினி அரசன் கட்டிய நுவரை வீவாவும், இவற்றைத் தொடுக்கும் கால்வாய்களும் வேறும் சில சிற்றோடைகளும் கமத்தொழில் விருத்தி அக்காலம் நடந்த வாற்றிற்கு ஆணித்தர மான அறிகுறிகளாகும். இனி மல்வதை ஓயா என்னும் நதியும் நீர்ப்பாய்ச்ச உதவி யது. இப்பொழுதும் நாம் முயற்சி செய் தால் இப்பட்டணம் தன் முன்னைய பெய ரையும் புகழையும் நிலை நாட்டக்கூடிய ஏதுக்கள் பலவுள என்னலாம். அந்நாளை நாம் யாவரும் ஆவலுடன் எதிர்பார்ப் போம்.

## இடைவிடாத முன்னேற்றம்

# நியூ ஏஷியாடிக் கம்பெனி

| வருஷம் | பூர்த்தியான பாலிஸிகள் | வருமானம் |
|---|---|---|
| 1934 | 15,38,500 | 55,537 |
| 1936 | 30,65,750 | 2,66,000 |
| 1938 | 41,74,000 | 4,42,000 |
| 1940 | 60,13,500 | 7,09,264 |

ஆயுள் நிதி 5,76,773

இந்தியா, பர்மா, சிலோன் எல்லா இடங்களிலும் கிளைகள் உண்டு

திறமை வாய்ந்தவர்களுக்குத் தக்க தருவாய்

**நியூ ஏஷியாடிக் லைப் இன்ஷ்யூரன்ஸ் கம்பெனி லிமிடெட்,**

மதராஸ் பிராஞ்சு : 289, லிங்க செட்டித் தெரு, ஜி.டி. மதராஸ்.

பிராஞ்சு மானேஜர்: அ. சுப்பையா.


மன்னார்குடி. டி. மு. கோர்ட்டு.

O. S. 332/36.

---

வாலம்பாளம்மாள்—வாதி

ராஜகோபால மண்டராயர்—முதல் பிரதிவாதி

ஷை மெம்பர் டிக்கிரியை வாதி நிறைவேற்றிய டிக்கிரியில் கண்ட சொத்துக்களுக்கு மதிப்பு ஏற்படுத்தி ஏலம் போட வேண்டுமென்று Or. 21R. 22 and 66ன் படி முதல் பிரதிவாதிக்கு நோட்டீசுபோய் சார்வாகாததினால் ஷியார் நோட்டீசை மன்னார்குடி தாலுக்கா அரிச்சபுரம் கிராமத்திலுள்ள வீட்டிலும் கோர்ட்டு வாசலிலும் ஒட்டி சார்வு செய்ய மனுக்கொடுத்து ஆர்டராகி 23-7-41ல் ஈரங்கி போடப்பட்டிருக்கிற விபரம் அரியக் கோருகிறேன்.

(Sd.) S. கோபாலய்யர்,
வாதி வக்கீல், மன்னார்குடி.


| | | |
|---|---|---|
| கதைக் கோவை 40 சிறந்த எழுத்தாளர்களின் கதைகள் | 3 | 0 |
| மங்கையர்க்கரசியின் காதல் வ. வே. சு. ஐயர் | 1 | 0 |
| விதியின் செயல் முதலிய கதைகள் ஸ்ரீ எ. எஸ். பஞ்சாபிகேச ஐயர், ஐ.ஸி.எஸ். | 0 | 6 |
| அற்புத உலகம் பெ. நா, அப்புஸ்வாமி, பி.எ., பி.எல். | 1 | 0 |
| கணையாழியின் கனவு "கல்கி" | 2 | 0 |
| தேசபக்தன் கந்தன் கா. சி. வேங்கடரமணி | 2 | 0 |
| கம்பன் கவிதை | 1 | 8 |
| தியாக பூமி "கல்கி" | 2 | 0 |
| ராஜாஜி குட்டிக் கதைகள் | 0 | 12 |

ஸ்வேதாரண்ய ஆசிரம புத்தகசாலை,
12, பிருந்தாவனம் தெரு, மயிலாப்பூர்,
மதராஸ்.

# ஸ்ரீ அரியநாயகம்

[சோ. சி.]

எத்தனையோ தகப்பன்மார்களிருக்கின்றார்கள் ; ஆனால் வட்டுக்கோட்டை வில்லியம்ஸ் போதகரைப்போலக் கொடுத்து வைத்த ஒரு தகப்பனை நான் காணவில்லை. "மகன் தந்தைக் காற்றும் உதவி இவன் தந்தை என்னோற்றான் கொல் எனும் சொல்" என்று வள்ளுவர் சொன்னது போல, இப்படிப்பட்ட ஒரு சற்புத்திரனைப் பெறுவதற்கு வில்லியம்ஸ் போதகர் மனசாரக் கொடுத்துவைத்த ஒரு மனிதர் தான். வயதுசென்ற வேளையிலும் இவர் முகத்தில் புத்திர திருப்தியின் களை சொட்டிக்கொண்டிருக்கிறது. உலகத்திலே பெரிய மனிதர் மகாத்மா காந்தியே புகழ்ந்து பேசும் வர்தா நிபுணர் ஸ்ரீ அரியநாயகத்தைப் பெற்றெடுத்த தந்தையல்லவா ?

"மகன் இருக்கிறாரோ?" என்று கேட்டுக்கொண்டே நாங்கள் வாசலில் கால் வைத்தவுடன் "உட்காருங்கள், இதோ இருக்கிறார்" என்று சொல்லிவிட்டு வில்லியம்ஸ் போதகர் "தம்பி, உன்னைத் தேடுகிறார்கள்" என்று மகனிடம் கூப்பிட்டுச் சொன்னார்.

விஸ்வரூபம் என்றால் இதைத்தான் சொல்லவேண்டும். ஸ்ரீ அரியநாயகத்தின் கம்பீரமான தோற்றமும் முகவிலாசமும் உறுதியான கண்களும் பார்ப்பவர் யாரையும் பரவசப்படுத்திவிடும். உழைப்புக்கே பிறந்த ஒரு பிறவி. விசாலமான நெற்றியில் படர்ந்த ரேகைகள் மன உறுதியைப் பிரதிபலிக்கின்றன.

பத்திரிகை நிருபர்களென்றால் 'இவர்கள் என்ன திருவிளையாடல்கள் செய்வார்களோ' என்று அஞ்சும் பேர்வழிகளில் ஒருவரல்ல ஸ்ரீ அரியநாயகம். தாராளமான உள்ளத்துடன் உட்கார வைத்துக் கொண்டு ஆரம்பித்தார் தமது வர்தா கல்வித் திட்டத்தின் பெருமைகளைப்பற்றி. "பத்து வருடம் பதினைந்து வருடம் ஆயிரம் பதினாயிரம் செலவழித்துக் கற்றுவிட்டு நமது வாலிபர்கள் என்ன செய்கிறார்கள்? கல்வியின் நோக்கமென்ன? மனிதனாய்ப் பிறந்த எவனும் கல்வி கற்றவன் என்றால், பிறரை எதிர்பாராது சுயாதீனமாக வாழக்கூடியவனாயிருக்கவேண்டும். தானாகவே தேடித் தன் சீவியத்தை நடத்தாத வாழ்க்கை மானங் கெட்ட வாழ்க்கை."

கல்வியின் நோக்கம் இதுதான் என்பதை ஸ்ரீ அரியநாயகம் வற்புறுத்தினார். மனிதர் பிறந்தது நல்ல சமூகத்தை வளர்ப்பதற்காகத்தான். நடைப்பிணங்களாகவும் புல்லுருவிகளாகவும் இருப்பதற்கல்ல. அத்தகைய நல்ல சமூகத்தவர்களாக வருவதற்கு—நாகரிகச் சிறப்புப் பெறுவதற்கு—மனமும் உடலும் பண்பெற வேண்டும். தொழிலோடு கூடிய கல்வி தான் அதைப் பண்படுத்தவல்லது. இந்தக் கடமை—நன்மக்களாக்கும் கடமை—சமுதாயத்தை ஆளும் அரசாங்கத்தைச் சேர்ந்தது. கோடிக்கணக்கான மக்களின் கல்விக்கென்று அரசாங்கம் செலவு செய்தும் அந்தக் கல்வியினால் மனிதன் சுய முயற்சியற்றவனாயிருந்தால் அரசாங்கம் தன் கடமையைச் சரிவரச் செய்யவில்லையென்பதுதான் கருத்து.

இந்தப் பிரச்னைதான் மகாத்மா காந்தியின் மனதில் வெகு காலம் பட்டது. பயனற்ற கல்வியைப் போக்கி மக்களின் சமுதாயத்தைச் சிறப்பிக்கும் ஒரு தொழில் முறைக் கல்வித் திட்டத்தை வகுக்க வேண்டுமென்று யோசித்தார்கள். ஸ்ரீ அரியநாயகம் வந்து அந்தப் பிரச்னையைத் தீர்த்துவைத்தார். வர்தா கல்வித் திட்டம் உருப்படியாயிற்று.

ஸ்ரீ அரியநாயகம் யாழ்ப்பாணத்து வட்டுக்கோட்டையிற் பிறந்தவர். 1919-ம் வருடம் இங்கிலாந்துக்குப் போய் லண்டன் ஆசிரிய கலாசாலை யொன்றில் பயின்றார். எடின்பரோ சர்வகலாசாலையில் வித்வான் பட்டம் பெற்றார். அதன் பின்பு அவர் கொலம்பியா சர்வகலாசாலையில் சில காலம் ஆராய்ச்சியாளராயிருந்து 1924-ம்

ஆண்டு இலங்கைக்குத் திரும்பிவந்தார். வரும் வழியில் ஜப்பான் முதலிய கீழ்நாடு களிலுள்ள அனேகம் சர்வகலாசாலைகளை யும் பார்த்து அவற்றிலுள்ள கல்வித் திட் டங்களையெல்லாம் படித்துவந்தார்.

இதன் பின்பு ஸ்ரீ அரியநாயகத்தின் கல்வி விசேஷத்தைக் கேள்வியுற்ற வங்க கவி ரவீந்திரநாத தாகூர், இவரைச் சாந்தி நிகேதனத்துக்கு அழைத்துத் தமது காரியதரிசியாக நியமித்தார். பத்துவருடங் கள் ஸ்ரீ அரியநாயகம் அந்தக் கவியின் கூட்டுறவைப் பெற்றிருந்தார்.

இங்குதான் தமது வர்தா திட்டத்தைப் பற்றி நீண்ட ஆராய்ச்சி செய்துவந்த ஸ்ரீ அரியநாயகம் அதைச் சாதனையில் போடு வதற்கு மகாத்மா காந்தியிடம் சமர்ப்பித் தார். பின்னர் காந்திஜியிடம் காரியதரிசி யாக இருந்த ஸ்ரீ அரியநாயகம் இப்போது அகில இந்திய கல்வி விசாரணைச் சபை யின் காரியதரிசியாக இருந்து இந்தியா விலே வர்தா திட்டத்தைப் பரப்பவேண் டிய முயற்சிகள் செய்துவருகிறார்.

**வர்தா திட்டம்**

வர்தா கல்வித்திட்டம் தொழில் முறை யில் கற்பிக்கப்படுவது. குழந்தைகளுக்கு ஏழுவயதிலிருந்து ஆரம்பித்து பதினன்கு வயதுவரையும்இத்திட்டம் அமைக்கப்பட் டிருக்கிறது. குழந்தை மனோபாவத்தை யறிந்தபெரிய பெரிய தத்துவ சாஸ்திரிக ளெல்லாரும் புத்தகக்கல்வியிலும் பார்க்கத் தொழில்முறைக் கல்வியே மனதையும் உடலையும் வளர்க்க வல்லது என்று கண் டிருக்கிறார்கள். புத்தகக் கல்வி இலகுவில் மனதைக் களைக்க வைக்கும். சுவையும் கெட்டுப்போகும். உடம்பு வளராது. ஆனல் ஒரு குழந்தையின் கையில் ஏதா வது விளையாட்டைக் கொடுத்துப்பாருங் கள். அது நாள் முழுவதும் அத்துடன் பிரியமாயிருந்து வேலைசெய்வதைக் காண லாம். மனச்சோர்வு தெரியாது. இடை யிடையே சிலவேளை வேறு பராக்கி. லிருந்துவிட்டு மறுபடியும்அந்தக் குழந்தை அந்த விளையாட்டிலேயே போய்க் கையை வைக்கும்.

இது மனோதத்துவ சாஸ்திரிகள் அறிந்த உண்மை. அதனுலேயே தொழில் முறைக்கல்வி மன ஊக்கத்தையும் உடல் நலத்தையும் தரவல்லது என வர்தா திட் டத்தி லமைக்கப்பட்டது.

ஆனல் செய்யும் தொழில் பயன்பட் டதாயிருத்தல் வேண்டும். விளையாட்டா யிருந்தாலும் அந்த வினை பயன்தரவேண் டும். அதற்காகவே முதலில் நூல் நூற்றல், நெசவு செய்தல், தோட்டம் போடுதல், விவசாயம், தச்சுவேலை ஆகிய கைத் தொழில்களை யமைத்திருக்கிறார்கள்.

அரசாங்கத்தின் செலவில் எல்லா மக்க ளுக்கும் இலவசமாயும் கட்டாயமாயும் ஏழு வருடங்களுக்குக் கல்வி கற்பிப்பதானல் செலவென்னவாகும்!

ஆகையால் ஆரம்ப செலவுகள் குறைவா யிருக்க வேண்டியதவசியம். விவசாயத் தையோ அல்லது தச்சுவேலையையோ முத லில் எடுத்துக்கொண்டால் ஆயுதங்களுக் கும் மற்றும் தளபாடங்களுக்கும் செல வதிகம் வரும். அதனல், மிகச் சுருங்கிய செலவுள்ள சர்க்காவும் நெசவுத்தறியு முண் டானல் நூல் நூற்று நெசவுசெய்த துணி செல்வமாகும். இதற்காகவே வர்தா திட் டத்தின் ஆரம்பக் கல்வி நூற்றல் நெய்த லோடு தொடங்குகிறது.

ஒல்லாந்திலும் டென்மார்க்கிலுமுள்ள ஒருவகைத் தொழிற் கல்வியைக் கேள்விப் பட்டு இலங்கையிலும் நாட்டியற் கல்வி முறை ஒன்றை அரசாங்கத்தார் ஆரம் பித்து வைத்தனர். ஆனல் 'எண்ணெய்ச் செலவல்லாமல் பிள்ளை வளர்ப்பில்லை.' என்ற மாதிரி அரசாங்கப் பணம் வீண கிறது.

மிரிகமாவிலுள்ள நாட்டியற் பயிற்சிக் கழகத்துக்கு ஸ்ரீ அரியநாயகம் சென் றிருந்தபோது "ஆறுமாதகாலம் படித்த பின்னர் அவர்கள் சிருட்டித் திருப்பது ஒரு விளக்குமாறும் ஒரு தும்புக்கட்டும் தான்" என்பதைக்கண்டு ஆச்சரியப்பட் டாராம்! இப்படி வரவுக்கு மிஞ்சிய செலவு அரசாங்கத்துக்கு ஏற்படுமானல் அதைக் கைக்கொண்டதில் என்ன லாபம்? என்று கேட்கிறார் ஸ்ரீ அரியநாயகம்.

"இந்த வர்தா திட்டம் ஒரு வேளை இந்தியாவுக்கு ஏற்றதா யிருக்கலாம். சீவி யச் செலவுகள் அதிகரித்த எங்கள் நாட்டில்

இலங்கையில்—இது பொருத்தமாக அமைக்க முடியுமா?" என்ற கேள்விக்கு அவர் பின்வருமாறு விடையளித்தார்.

"பணக்காரருடைய வாழ்க்கையை ஆதாரமாக வைத்துச் சமுதாயத்தின் தேவைகளைக் கவனிக்கவேண்டாம். எத்தனையோ ஏழை மக்கள் ஒரு நேரக் கஞ் சிக்கும் வழியில்லாது கிடக்கிறார்கள். சமுதாயத்தின் தேவைகளை முதலில் கவனிக்க வேண்டியதுதான் உண்மையான அரசாங்கத்தின் கடமை. ஆகையால் உண்ண உணவும் உடுக்க உடையும் தரவேண்டும். அதைத் தேடிக் கொடுப்பதே முதல் கடமை.

"இலங்கையிலிருந்து வருஷா வருஷம் எத்தனை கோடி ரூபாய் இந்தியாவுக்கு உணவிலும் உடையிலும் செலவழிக்கிறீர்கள் என்பதைக் கொஞ்சம் ஆறுதலாக விருந்து யோசித்துப் பாருங்கள். இந்தப் பணத்தையெல்லாம் உள்ளூரிலேயே செலவிட்டால் பணமிச்சமுமல்லாமல் தொழிலும் விருத்தியாகுமல்லவா? வர்தா திட்டத்திற் பயின்ற ஒரு பதினன்கு வயதுப் பையன் சுய முயற்சியால் தேடி வாழக் கூடியவனாகிறான். சீவியத்தின் செலவு சுருக்கமாய் விட்டாலும், வேலையில்லாத் திண்டாட்டம் நாட்டை விட்டோடும். இலங்கையில் எவ்வளவோ நிலம் பருத்தி சாகுபடி செய்ய ஏற்றதாயிருக்கிறது. நெசவுத் தொழிலுக்குக் கஷ்டப்படத் தேவையில்லை".

இன்னுமொரு பெரிய விசேஷமென்ன வெனில் வர்தா திட்டத்தில் பல சமூகப் பிள்ளைகளும் எல்லாவகையான தொழில்களையும் பயில்வதால், தொழில் வேறுபாட்டால் ஏற்படும் சாதி வித்தியாசம் நீங்கிவிடும். ஒவ்வொரு பிள்ளைக்கும் என்ன தொழிலில் விருப்பமாயிருக்கிறதோ அந்தத் தொழிலில்தான் விருத்தி பெற விடுதல் வேண்டும்.

ஆகையால் இலங்கையில் வர்தா திட்டம் மிக விசேஷமாக அமையக்கூடும். "கட்டாயமாக அந்தக் கல்விதான் வரவேண்டுமென்று நான் விரும்புகிறேன்" என்று ஸ்ரீ அரிநாயகம் கூறினார்.

### சமயக் கல்வி

"சமயப்பாடசாலை என்ற விஷயம்பற்றி இந்த நாட்டில் பல கல்வி கற்ற மனிதர் அடிபடுவதைப் பார்க்க விநோதமாயிருக்கிறது. இவர்கள் தாம் என்ன பேசுகிறார்களென்பதே தெரியவில்லை" என்று ஸ்ரீ அரியநாயகம் ஆச்சரியப்பட்டார்.

"ஒரு காலத்தில் கிறிஸ்தவ மிஷனரிமார் இலங்கைக்கு வந்து சமயப் பாடசாலைகள் ஸ்தாபித்தபோது அவர்கள் நோக்கம் வேறு. தமது சமயத்தைப் பரப்புதல், தமது மார்க்கத்துக்குரிய சில நற்பழக்கங்களைப் பழகச்செய்தல், முதலிய நோக்கங்களுடன் தான் சமயப் பாடசாலைகள் ஸ்தாபிக்கப்பட்டன. ஆனால் இன்று நாம் காண்பதென்ன? இப்பாடசாலைகள் யாவும் பழைய கொள்கைகளையெல்லாம் விட்டு அதிகார மோகம் பிடித்து வகுப்புவாதம் பேசுகின்றன. கிறிஸ்தவ பாடசாலையாயிருக்கட்டும், புத்த பாடசாலையாயிருக்கட்டும், ஒரு பாடசாலையிலாவது தங்கள் சமயத்துக்கு வேண்டிய மணத்தையாவது எனக்குக் காட்டுங்கள்; அப்படியானால் சமயப் பாடசாலை என்ற பேதம் இருக்கலாமென்று நான் ஒப்புக்கொள்ளுகிறேன்" என்று கேட்கிறார் ஸ்ரீ அரிநாயகம்.

மாணவர்களுக்குச் சமய போதனைகள் கற்பிக்கப்படுவதை ஸ்ரீ அரியநாயகம் ஆட்சேபிக்கவில்லை. "எல்லாச் சமயமும் பொதுவாக சத்தியம், அஹிம்சை, நீதி முதலிய தர்மங்களைப் போதிக்கின்றன. மனித வாழ்வுக்கு மிக இன்றியமையாதவை இவைதான். ஆகையால் அரசாங்கம் இவ் வின்றியமையாத தேவைகளைக் கவனிக்கவேண்டுமன்றி, மார்க்க பேத முறைகளைக் கவனிக்க முடியாது.

"ஒவ்வொருவரும் தத்தம் மார்க்கத்தில் புறம்பான போதனைகளையும் கற்பதற்கு எவ்வித ஆட்சேபமும் கிடையாது. ஆனால் அது அரசாங்கத்தின் கடமையல்ல; பாடசாலைக்குப் புறம்பே வைத்துக் கொள்வதுதான் அதற்குத் தகுதி. பறையனும் வெள்ளாளனும் கிறிஸ்தவனும் சைவனும் முஸ்லீமும் அரசாங்கத்துக்கு ஒரே வயிற்றுப்பிள்ளைகள். அவர்களின் வாழ்க்கையில் பொதுவாக அவசியமான

தேவைகளைக் கவனிப்பதுதான் அரசாங்கத்தின் கடமை. அது முடிந்தபின் அவரவர் தமக்குத் தேவையான சமயக்கல்வியை அனுட்டிக்க எவ்வித தடையுமில்லை.''

தாய்மொழியில் ஸ்ரீ அரியநாயகத்துக்கு இருக்கும் பற்றுதலைப்போல நான் வேறு யாரிடமும் கண்டதில்லை. இரண்டுமணி நேரம் ஓயாமல் பெரிய சிக்கலான விஷயங்களையெல்லாம் பேசிக்கொண்டிருந்த அவர் ஒரு சொல்லாவது ஆங்கிலத்தில் பேசாதது ஆச்சரியமாயிருந்தது. எந்தக் கடினமான புதிய ஆங்கிலக் கருத்தாயிருந்தாலும் சட்டென்று ஸ்ரீ அரியநாயகம் தமிழில் சொல்லிவிடுவார். நமது நாகரிக மனுஷர்களெல்லாம் இதைக் கண்டு தலை கவிழ வேண்டாமா?

கடைசியாக ஸ்ரீ அரியநாயகம் தாம் ஒரு இலங்கையராக இருந்தும் இந்தியாவிலிருந்து தொண்டாற்றுவதற்கு ஒரு காரணமும் கூறிவிட்டார். "இந்தியா இத்தகைய சமூகசேவைக்கு மிக எற்ற தேசம். அன்றியும் அங்கே நடைபெறும் எந்த விஷயமும் கூடியது ஐந்து வருஷத்துக்குள் இலங்கைக்கும் வந்துசேரும் என்பது திடமான நம்பிக்கை. இந்தியா சுயராஜ்யம் பெற்றால் கூட இலங்கையும் ஐந்து வருஷத்தில் சுயராஜ்யம் பெற்றே தீரும். ஆகையால் நான் சேவிப்பது இந்தியாவிலாயினும் இலங்கையையும் சேர்த்துத்தான்'' என்றார்.

"நாங்கள் இப்போது அமைப்பது இந்தியாவில் ஒரு இரட்டையாட்சியை. எந்த நெருக்கடியான சமயத்திலும் இந்தியாவில் ஆட்சிமுறை தத்தளிக்காது ஒழுங்காக நடைபெற வேண்டிய எற்பாடுகள் அமைக்கப்படுகின்றன. பிரிட்டிஷார் விலகினாலென்ன, அல்லது ஜெர்மனி, ஜப்பான் முதலிய தேசங்கள் படையெடுத்து வந்தாலுமென்ன, இந்தியரின் சுயஆட்சி நடைபெற யாவும் இப்பொழுதிருந்தே ஒழுங்கு செய்யப்படுகின்றன'' என்று ஸ்ரீ அரியநாயகம் முடித்தார்.

—"ஈழகேசரி"


★ உங்கள் ஆயுள்
★ உங்கள் வீடு
★ உங்கள் மோட்டார்

இவைகளுக்கு இன்ஷூரன்ஸ் பாதுகாப் பிருக்கிறதா?

இல்லையேல்

நேஷனல் இன்ஷூரன்ஸ் ம்பெனி, லிமிடெட்

(ஸ்தாபிதம் 1906)

நேஷனல் பயர் & ஜெனரல் இன்ஷூரன்ஸ் கம்பெனி லிமிடெட்

(தலைமை ஆபீஸ்:—கல்கத்தா)

இவைளை கலந்து ஆலோசியுங்கள்

பிராஞ்சு ஆபீஸ்

நேஷனல் இன்ஷூரன்ஸ் பில்டிங்ஸ்

362, சைன பஜார் தெரு, சென்னை.

# நவீன நாகரீகம்

[ஜி. பாலசுப்பிரமணியம்]

நமது தேசம் நாளுக்கு நாள் செல்வ நிலையில் க்ஷீணதசையடைந்து கொண்டிடிருக்கிற விஷயம் நம்முன் பெரும்பான்மையோர் நன்கு உணருவார்கள். பொதுவாய் தேசம் செல்வ வளர்ச்சியுள்ளதாகவும் க்ஷேமமாகவும் இருக்கிறதென்று சொன்னால் தேசத்திலிருக்கும் ஜனங்களின் தனித்தனியேயுள்ள திருப்திகரமான செல்வ நிலைமையையும் க்ஷேமத்தையும் தான் குறிக்கும்.

தற்காலம் பொதுவாக எல்லோருமே மேனாட்டாரின் பழக்கத்தை யனுசரித்து தங்களுடைய பழக்க வழக்கங்களை முற்றிலும் மாற்றிக்கொண்டு வருகிறார்கள். நான் சிறிய பையனாய் இருக்கும்போது என் பெற்றோர்கள் எனக்குச் செய்துவைத்த பழக்கத்தை என் குழந்தைகளுக்கு யாராலும் பழக்கிவைக்க முடியவில்லை. உதாரணமாக, பாலியத்தில் நான் காபிசாப்பிட்ட வழக்கமில்லை. இப்போது காபி இன்றியமையாத உணவுப் பொருளாக ஆய்விட்டது. காபிசாப்பிடுவதை விட்டால் குழந்தைகளுக்கு தலைவலி வந்து விடுகிறது. காலையில் காபிசாப்பிட்ட பிறகு தான் வெகுஜனங்களுக்கு மலச்சிக்கலில்லாமல் பிரவர்த்தியாகிறதி. பழஞ்சோறானது தற்காலத்தில் நகைப்புக்கிடமாகிறதோடுகூட உடம்புக்கும் அசௌகரியமாய்த்தான் இருக்கிறது. நமது உறவினர் வீட்டிற்கோ அல்லது சிநேகிதர் வீட்டிற்கோ நாம் போனால், நாம் போகும் நேரம் இரவாயிருந்தாலும் சரி, பகலாயிருந்தாலும் சரி, எந்த சந்தர்ப்பமாயிருந்தாலும் சரி, நாம் போய்ப்பார்க்கும் பேர்வழிகள் அவர்கள் அன்பைக்காட்டும் அறிகுறியாக நமக்கு முன்னால் ஓர்பாத்திரம் நிறைய காபிகொண்டு வைத்து விடுகிறார்கள். இதுதான் தற்காலத்தில் வழங்கி வரும் நாகரீகமான மரியாதை. யாராவது இந்தமரியாதையைச் செய்யா விட்டால், நாம் அவரைப்பற்றி இகழ்ச்சியாய் "ஒருவாய் காபிகூட அவன் கொடுக்கவில்லை" என்று சகஜமாய்ச் சொல்லிவிடுகிறோம். இந்தக் காபியினால் ஜனங்களுக்கு எவ்வளவு செலவு ஆகிறதென்பதும் இதை நிறுத்தி விட்டால் எவ்வளவு வகையில் சௌகரியங்களடையலாமென்பதும் ஒவ்வொருவருக்கும் தெரிந்த விஷயமே. இருந்தாலும் நவீன நாகரீகத்தில் அவர்கள் ஈடுபட்டவர்களாதலால் இந்தப் பழக்கத்தை விட முடியவில்லை. நம் சம்பாத்தியத்தில், நமது முன்னோர்கள் செய்யாமலிருந்து நாம் தற்காலம் செய்துவருகிற இந்தப் பழக்கமானது, ஒரு சுமாரான பாகத்தை வீணாக்கி விடுகிறது. வீண்செலவு என்று சொல்லக்கூடிய பலவிதப் பழக்கங்களுள் இது ஒன்று.

தவிர, காலையில் நம் முன்னோர்கள் பிராதஸ்னானம் செய்து அவரவர்கள் வஸ்திரங்களை அவரவர்களே நன்றாகத் தோய்த்து உலர்த்திக்கட்டிக்கொண்டு நித்தியகர்மானுஷ்டானங்களை முறைதவறாது செய்து கொண்டு வந்தார்கள். 'காலையில் எழுந்திருந்து பல் தேய்த்து சந்தியாவந்தனம் செய்தாய் விட்ட பிறகு இந்தக்காரியத்தைச் செய்துவிடு" என்று என் பெற்றோர்கள் நான்பால்யமாயிருக்கும் போது எனக்குச் சொல்வது வழக்கம். இப்போது என் பிள்ளைகள் காலையில் எழுந்திருந்தவுடன் கையில் சௌளப்பெட்டியை எடுத்துக் கொண்டு முகக்ஷவரம் செய்து கொண்ட பிறகுதான் பல் தேய்க்கிறார்கள். பல் தேய்த்தான உடன் முகத்தை சோப் போட்டு நன்றாகக் கழுவிக் கொண்டு பிரத்தியேகமாய் வைத்திருக்கும் சவுக்கத்தால் துடைத்துக் கொண்டு உடனே நிலைக்கண்ணாடிக் கெதிரில் நின்று கொண்டு தலையில் வாசனை எண்ணெய் தடவி தலைமயிரை நாகரீகமுறைப்படி சீவிக் கொண்டு பிறகுதான் காபிசாப்பிட வருகிறார்கள். மேற்

கூறிய காரியந்தான் காலையில் செய்யும் நித்திய கர்மானுஷ்டானமாக விருக்கிறது. பல் தேய்ப்பதற்காக தனி பிரஷ், சௌளசாமான்கள் முகத்திற்கு உபயோகிக்க டாய்லெட் பவுடர், இவ்வளவு சாமான்களும் காசு கொடுத்து வாங்கிக் கொள்ள வேண்டியிருக்கிறது. இவற்றுள் ஒன்றையாவது நம் முன்னோர்கள் வைத்துக்கொள்ளவில்லை. வீண் செலவாகக்கூடிய பழக்கங்களுள் இது விசனிக்கத்தக்கதான மற்றொன்று.

உடுப்புகள்: நான் வாசிக்கும் போது எனக்கு இரண்டு வேஷ்டியும் இரண்டு சவுக்கங்களும் தினசரி உபயோகத்திற்கு இருந்தன. எண்ணெ தேய்த்துக்கொண்ட தினங்களில் பழய வேஷ்டியைக் கட்டிக் கொள்வேன். விசேஷ தினங்களில் கட்டிக் கொள்ள ஒன்று அல்லது இரண்டு நல்ல வேஷ்டிகளும் மேலுக்கு சிறிய ஓர் பட்டும் உண்டு. இவைகள் என் பெற்றோர் பெட்டியிலேயே இருக்கும். அவர்கள் அதை எடுத்துக் கட்டிக்கொள்ளச் சொன்னாலொழிய நானகவே அவைகளை உபயோகிக்க முடியாது. பள்ளிக்கூடங்களுக்குப் போகும் போது ஒரு சாதாரண சட்டை போட்டுக்கொண்டு போவேன். மூன்று அல்லது நான்கு சட்டைக்கு மேல் எனக்கு இராது. வண்ணானுக்கு என்னுடையதாக ஒன்று அல்லது தவறினால் இரண்டு சட்டைகள் மாத்திரம் தான் இருக்கும். அந்தக்காலத்திற்குத் தக்கவாறு நான் சுத்தமாயும் நாகரீகமாயும் தான் இருந்தேன். ஆனால் என்னால் என் பெற்றோர்களுக்கு வீண் செலவு கிடையாதென்று நான் தைரியமாய்ச் சொல்லலாம். தற்காலத்தில் நமது பிள்ளைகள் வைத்திருக்கும் உடுப்புகளோ கணக்கிடக் கூடாமலிருக்கின்றன. வீட்டிலிருக்கும் போது ஓர் உடுப்பு, வெளியில் போனால் மற்றோர் தினுசான உடுப்பு. பள்ளிக்கூடத்திற்குப் போகப் பிரத்தியேகமாக வேறு வித உடுப்பு. வண்ணானுக்கு அவர்களின் உடுப்புகள் மாத்திரம் தடவைக்கு 30-க்குக் குறையாது. 50-வரையில் போகும். என் பெற்றோர்களும் மற்றுமுள்ள இதர முன்னோர்களும் சர்க்கார் உத்தியோகத்தில் ரூ 200-ம் அதற்கு மேலும் சம்பளம் வாங்கிக்கொண்டிருந்தார்கள். அவர்கள் புராதனமாயுள்ள வைதீக கர்மாக்களை ஒருபோதும் விட்டவர்களல்லர். அனுசாரமாக வில்லாமலிருக்கும் பொருட்டு பட்டில் தயாரித்த சட்டை ஒன்று அல்லது இரண்டு வைத்திருந்து உள்ளுக்குப் போடும் சட்டையை தினப்படி வேஷ்டியுடன் தோய்த்து உலர்த்திப் போட்டுக் கொள்வார்கள். அதனால் அவர்கள் பார்வைக்குக் கேவலமாகவும் இல்லை. வண்ணான் கூலிக்காக அவர்கள் அதிகமாய் ஒன்றும் செல வழித்து விடவில்லை. இப்படி அனாவசியமாய்ப் பலவித உடுப்புகள் தங்களுக்குத் தைத்துக்கொண்டு தினப்படி இவைகள் நனைத்துத் தோய்க்க லாயக்கில்லாதவைக ளாதலால் வண்ணானிடத்தில் வெளுக்கப் போடும்படி இருக்கின்றன. இதனால் நமக்கு வீண் செலவு ஏராளமாய் ஆகிறது. இதில் ஆகிற செலவுகள் சில்லறையாக விருப்பதால் மொத்தம் இவைகள் மூலமாய் எவ்வளவு ஆகிறது என்று பார்த்து அதைக் கட்டுப்படுத்தக் கூடுமாவென்கிற யோசனையே நமக்கு ஏற்படாமல் போய் விடுகிறது. நமது முன்னோர்கள் இம்மாதிரிச் செலவுகள் செய்யவில்லை. நாம் சுலபமாய் நிறுத்தக் கூடிய வீண் செலவுகளுள் இது வேறொன்றாக விருக்கிறது.

மானத்தைக் காப்பாற்ற வஸ்திரமும், ஜீவனைக் காப்பாற்ற உணவும் வேண்டியது முக்கியமானது என்ற விஷயம் ஜனங்களுக்குத் தெரிந்திருந்தும் துணிகளில் ஏராளமான வீண் செலவையும் நித்தியப்படியுள்ள பழக்க வழக்கங்களில் அனாவசியமான கோட்பாடுகளையும் மேற்கூறியவாறு தானே விருத்தி செய்துகொண்டு அதனால் வீண் செலவுகளையும் செய்து எவ்வளவு ரூபாய் சம்பாதித்தாலும் போதவில்லை என்று சொல்லிக் கஷ்டப்படுகின்ற நாம் எப்போது திருந்தி நம்முடைய செல்வ நிலையை விருத்தி செய்துகொள்வோமோ தெரியவில்லை.

# பசு வளர்த்தல்

[எம். எஸ். ராமச்சந்திர ஐயர்]

நமது தேசத்திற்கு முக்கியமான தொழில் விவசாயம். அந்த விவசாயத்திற்கு அவசியமானது கால்நடைகள். கால் நடைகள் என்ருல், சாதாரணமாக பசு, எருது, எருமை, ஆடு முதலியவைகள். அவற்றின் க்ஷேமத்திற்கும் அபிவிருத்திக்கும் வெகு காலமாக நமது பெரியவர்கள் பாடுபட்டிருக்கிருர்கள். ஆனல் வரவர, அவைகளுக்கு முக்கியமான மேச்சல் இடங்களும் வசதிகளும் கவனக்குறைவினல் நசித்துபோய் வருகிறது. நமது கவர்ன்மெண்டார்களும் சமீப காலத்தில் விழித்துக்கொண்டு அநேக இடங்களில் நல்ல ஜாதிக்காளைகள் விட ஏற்பாடு செய்திருக்கிருர்கள். ஆனல் அந்த காளைகளின் பலன் அநுபவிக்க நமது பசுக்களுக்கோ, எருமைகளுக்கோ தகுந்த போஷணை இல்லாமல் ஈனஸ்திதியில் இருப்பதை நாம் எல்லா கிராமங்களிலும் பார்க்கலாம். பண்டைய காலங்களில் கிராமப் பொது இடங்களை மேய்ச்சல் தரையாக வைத்து, கிராம கால்நடைகள் பயிர்க்காலங்களில் சாதாரணமாக வேண்டிய ஆகாரம் மேய்வதற்கு உபயோகப்படுத்தி வந்தார்கள். தற்காலம் ஒற்றுமைக் குறைவினலும் அதிக நிலம் சாகுபடிக்குக் கொண்டுவரவேண்டும் என்ற பேராசையினலும், கிராம உத்தியோகஸ்தர்களை தங்கள் வசப்படுத்தி அக்கம்பக்கத்திலுள்ள நிலக்காரர்கள் கிராமப் பொதுவை ஆக்ரமித்துக்கொண்டு நாளடைவில் பட்டாவும் செய்து, தங்கள் மாடுகளுக்குக்கூட மேய்வதற்கு வசதி இல்லாமல் செய்துவிட்டார்கள். சாதாரணமாக தென் இந்தியா கிராமங்களில், நஞ்சை நிலமுள்ள ஊர்களில், வருஷத்தில் ஒன்பது மாதம் மாடுகள் வீட்டைவிட்டு வெளியில் கூட போக இடம் இல்லை. அக்காலங்களில், காய்ந்த வைக்கோல் தவிர வேறு புஷ்டியான ஆகாரம் கிடையாது. ஏதோ புண்யவசமாக பால் கொடுக்கும் கறவை பசுக்களுக்கும், எருமைகளுக்கும் மேல் தீவனம் கொடுப்பதுதான் வழக்கம். அவைகளும் கறவை இல்லாத காலத்தில் இந்த தீவனம்கூட கிடைக்காது. இம்மாதிரி காப்பாற்றி வருகிற கால்நடைகள் எந்தமட்டில் புஷ்டியாக இருக்க முடியும், அவைகளுக்கு நல்ல ஜாதிக்காளைகளினல் பலன் எவ்வளவு எதிர்பார்க்க முடியும், என்று யோசிக்காமல் நமது ஜில்லா போர்டார்களும், நமது மாட்சிமைதங்கிய கவர்னர் ஜனரல் லின்லித்கோ பிரபுவின் திருப்திக்காக அநேக ரூபாய் செலவில் நல்ல ஜாதிக் காளைகளை வாங்கி சில பெரிய கிராமங்களில் விட்டிருக்கிருர்கள். ஆனல் அவைகள் யாரிடம் விடப்பட்டிருக்கிறதோ அந்தப் பெரியதனக்காரர்கள் அந்தக் காளைகளின் பிரயோஜனத்தை அடைகிருர்களா என்றுகூட சந்தேகப்படும்படியாக வைத்திருப்பதாக சில இடங்களில் நேரிலும் பார்த்திருக்கலாம். ஆரம்பத்தில் எந்தக் காரியங்களும் சரிவர நடப்பது கஷ்டந்தான். இருந்தாலும் ஏதோ நல்ல ஊக்கம் ஒன்று உண்டானதைப்பற்றி நாம் திருப்தி அடைந்து அதை பிரயோஜனத்திற்குக் கொண்டுவரும் வழியைக் கண்டுபிடிக்க வேண்டும். என்னுடைய 25 வருஷ அனுபவத்தில் இந்தியாவில் சிற்சில இடங்களில் உள்ள ஜாதி மாடுகளையும் அவைகளைக் காப்பாற்றவேண்டிய வழிகளையும் தெரிந்தவரையில் எழுதத் துணிந்தேன். அதில் குற்றம் குறைகள் இருந்தாலும் அதைப் பொருத்து உபயோகமுள்ள அம்சங்களைப் பழக்கத்திற்குக் கொண்டு வரும்படி வாசகர்களை நான் வணக்கமாய் கேட்டுக்கொள்கிறேன். தற்காலம் பால் மிகவும் அத்தியாவசியமானது என்று எல்லோரும் அறிவார்கள். ஆனல் அந்த பாலை விர்த்திசெய்ய யாதொரு வழியும் தேடவில்லை. அநேக ஜனங்கள் பணத்தைச் செலவழித்தால் பால் வேண்டியது கிடைக்கும் என்று எண்ணுவதைத் தவிர பணம் அதிகப் பால் எப்படி உண்

(56-ம் பக்கம் பார்க்க)




# விகட கவி

[பே. நா. அப்புஸ்வாமி பி.ஏ., பி.எல்.]

ரஷ்யா தேசத்திலே மஹா பீடர் என்று பெயர் பெற்ற அரசன் ஒருவன் இருந்தான். அவன் நாளிலே அவனுடைய சபையிலே ஒரு விகட கவி இருந்தான். அவன் மிகவும் சாமர்த்திய சாலி; சமயோசிதமாய்ப் பேச வல்லவன்.

அவன் அதிகப் பிரசங்கித் தனமாய் விகடம் செய்து எத்தனையோ தரம் அரசனுடைய கோபத்திற்கு உள்ளான போதிலும் ஒவ்வொரு தடவையும் தன்னுடைய கெட்டிக்காரத்தனத்தினால் தப்பித்து வந்தான். மற்றவர்களையும் பலமுறை ராஜகோபத்திலிருந்து தப்பச் செய்தான்.

அவனுடைய உறவுக்காரன் ஒரு சமயம் செய்த பிசகினால் அரசன் அவனுக்கு மரண தண்டனை விதித்திருந்தான். அதைக் கேட்டு வருத்தமடைந்த விகடகவி சில நாள் ராஜ சபைக்கு வரவேயில்லை. தண்டனை நிறைவேற வேண்டிய நாள் நெருங்கிக் கொண்டே வந்தது. அரசனிடம் போய் மன்னிப்புக் கேட்டு எப்படியாவது தன்னுடைய உறவுக்காரனுடைய உயிரைக் காப்பாற்ற வேண்டுமென்று தீர்மானித்தான்.

அரசனுடைய சபைக்குப் புறப்பட்டுப் போனான். சபா மண்டபத்தில் இருந்த அரசன், அவன் வருவதைக் கண்டு, அவன் இன்ன நோக்கத்துடன் வருகிறான் என்பதை அறிந்து, உரத்தக் குரலில் "நீ இங்கே வருவதினால் யாதொரு பிரயோஜனமும் கிடையாது நீ கேட்பதை நான் கொடுக்கவே மாட்டேன். தெய்வத்தின் மேல் ஆணை" என்று கோபமாய்ச் சொன்னான்.

சொன்னது தான் தாமதம் விகட கவி அப்படியே முழந்தாள் பணிந்து, கை கட்டி வணக்கத்தோடு "அரசே! என்னுடைய உறவுக்காரன் மிகவும் அக்ரமம் செய்பவன். அவனைக் கட்டாயமாக மரண தண்டனைக்கு உள்ளாக்க வேண்டுமென்று மன்றாடி வணக்கமாய்க் கேட்டுக் கொள்ளுகிறேன்," என்றான்.

இதைக் கேட்ட அரசன் பிரமித்துப் போனான். சபையோர்களுக்கு முன்னாலே தான் செய்த சபதத்தை நிறைவேற்றாமல் இருந்தால் தனக்கே குறைவென்பதை உணர்ந்தான். ஆகையால், மனம்மாறி, விகடகவியினுடைய சாமர்த்தியத்தைக் கண்டு சந்தோஷமடைந்து, சிரித்துக் கொண்டே பிசகு செய்த அவனுடைய உறவுக்காரனை மன்னித்துவிட்டான்.

# ஸ்வேதாரண்ய ஆசிரம பால பாடம் II

[கா. சி. வேங்கடரமணி]

## பாடம் II

மரங்கள்

| | | |
|---|---|---|
| ஆல் | புளி | இலுப்பை |
| வேல் | ஒதியை | செம்மரம் |
| அரசு | தேக்கு | கறுங்காலி |
| வேம்பு | பூவரசு | |

குழந்தை, மணி, இந்தப் பாடத்தில் நாம் இப்பொழுது இன்னும் சிலவகை மரங்களைப் பற்றித் தெரிந்து கொள்ளுவோம்.

இந்தப் பாடத்தில் மரங்களை இரண்டு பத்தியாக நான் பிரித்திருப்பதற்கு உள்ள காரணங்களை நீ எடுத்துச் சொல்லக் கூடுமா?

நம்முடைய வாழ்வுக்கு இந்த மரங்கள் ஒவ்வொன்றும் எப்படிப் பயன்படுகிறதென்று விஸ்தரித்து ஒரு கட்டுரை எழுதிக்கொண்டு வா.

இதில் கண்ட மரங்கள் எல்லாவற்றையும் நீ பார்த்திருக்கிருயா? எந்த மரத்திலாவது நீ ஏறி இருக்கிருயா? அப்படியானுல் எதற்காக நீ ஏறினுய்? இன்னும் நீ பார்த்த சில மரங்களைச் சொல்லு.

ஆலும் வேலும் பல்லுக்குறுதி என்னும் பழமொழியின் கருத்தை தெளிவாய் எடுத்துச் சொல்.

மானிடக் கணக்கில் மரங்களின் உயர்தர பலன் பழங்கள்தான். அது தப்பினுல் நிழல். இந்தப் பாடத்தில் கண்ட மரங்கள் புளி ஒன்றைத் தவிர மற்றவை பழங்கள் கொடுக்கக் கூடியவை யல்ல.

இம்மரங்கள் உயிர்நிலையில் நிழலைத்தந்து, பிறகு மானிட வாழ்வுக்குத் தியாகமாகத் தங்களையே அர்ப்பணம் செய்துவிடுகின்றன. அது எவ்விதத்திலென்று அறிந்து, ஒவ்வொரு மரத்தைப் பற்றியும் ஒரு குறிப்பு எழுதிக்கொண்டு வா, மணி.

REGD. No. 1506

அசோகா

MILD SCENTED

ASOKA

ஸ்ரீ

ரிஜிஸ்டர். நெ. 1506

# அசோகா சுகந்த பாக்குத்தூள்

தயாரிப்பவர் :—

## M. K. கிருஷ்ண செட்டி

கோயமுத்தூர்

---

மதராஸ் விற்பனையாளர் :—

## V. கனகய்ய செட்டி & Co.,

நைனியப்ப நாயகன் தெரு, பார்க் டவுன்

மதராஸ்.

# இந்திய ஊழியர் சங்கம், பூனா.

## 1940-41-ம் வருஷத்திய அறிக்கையின் சாராம்சம்.

தன்னலங் கருதாமலும், சமய வகுப்பு வாத பேதங்களைப் புகுத்தாமலும், சமூக முன்னேற்றத்திற்காக பல துறைகளிலும் தொண்டாற்றுவதே தமது வாழ்க்கையின் லக்ஷியமாகக் கொண்ட ஒரு தொண்டர் கூட்டத்தாரை தேச சேவைக்குத் தயார் செய்வதற்கென்று காலஞ் சென்ற ஸ்ரீ கோபால கிருஷ்ண கோகலேயால் ஸ்தாபிக்கப்பட்ட இந்திய ஊழியர் சங்கத்திற்கு 1941-ம் வருஷம் ஜூன் மீ 12 தேதியோடு முப்பத்தாறு வருஷங்கள் முடிகின்றன.

கடந்த வருஷத்தில் எதிர்பாராததும், சங்கத்தின் அடிப்படையான கொள்கைகளுக்கு முற்றிலும் முரண்பாடானதுமான ஒரு குழப்பம் சங்கத்தில் ஏற்பட, அதனால் ஸ்ரீ எம். என், ஜோஷியும், ஸ்ரீ எஸ். வி. பாருலேகரும், ஸ்ரீமதி கோதாவரி கோகலேயும் சங்கத்தினின்றும் விலக, பிரஸ்தாப வருஷ ஆரம்பத்தில், சங்கத்தில் 27 பெயர்கள் தானிருந்தனர். யுத்த நெருக்கடியினால் 1939-40 வருஷத்தில் சங்கத்திற்கு ஏற்பட்ட அதிகச் செலவு ரூ. 8000. விலைவாசியேற்றத்தாலும், நன்கொடையும் அச்சு யந்திரசாலைகளிலிருந்து வரும் லாப்மும், சுண்டி வருவதால் 1940-41-ம் வருஷத்தில் சங்கத்தின் அதிகச் செலவு ரூ. 10,000-த்திற்கு வரும் என்று எதிர்பார்த்தது, உண்மையாக 25,000-க்கு எட்டிப் பார்த்தது. எனினும் சங்கத்தின் சிப்பந்திகளுக்கு, யுத்தப்படி "அல்லவன்ஸ்" (Dearness allowance) கொடுக்கப் பட்டது. சங்கத்தின் அங்கத்தினர்களின் மாதச் சம்பளத்தில் நூற்றுக்கு 20 வீதம் குறைக்க வேண்டியிருந்தது. இம்மாதச் சம்பளத்தைக் குறைத்தும், அங்கத்தினர்கள் செய்துவரும் பொது நலத் தொண்டுக்கு எவ்விதமான பாதகமும் ஏற்படா வண்ணம் வேண்டிய பிரத்யேக முயற்சிகளையும் சங்கம் எடுத்துக்கொண்டது.

நல்ல வேளையாக, சங்கத்தின் நண்பர்கள் தாராள மனதுடன் அளித்த உதவினால், பிரஸ்தாப வருஷத்தின் அதிகச் செலவு ரூபாய் 25,000-ல் இருந்து ரூ. 6000-க்குக் குறைந்தது. எனினும் 1939-40, 1940-41 இந்த இரண்டு வருஷங்களில் ஏற்பட்ட ரூ. 14,000 அதிகச் செலவை ஈடு செய்ய முடியாமலிருக்கிறது.

யுத்த நிலைமையைப் பற்றி 1940-ம் வருஷத்தில் சங்கம் ஒரு அறிக்கையை வெளியிட்டது. ஹிட்லரின் தத்துவத்தை முற்றிலும் நிராகரித்தது. எனினும் பிரிட்டிஷாருக்கு இந்தியர்களிடத்து நம்பிக்கையில்லை. உண்மையான அரசியல் அதிகாரத்தை இந்தியர்களுக்கு பிரிட்டிஷார் விட்டுக் கொடுக்க மறுக்கிறார்கள். நாட்டிலுள்ள சிறுபான்மைக் கக்ஷிகளையும் வகுப்பு வாதங்களையும் தூண்டிவிட்டு, அவ்வித்தியாசங்களையும் வாதங்களையும் தங்களுக்கு அனுகூலமாக பிரிட்டிஷார் உபயோகித்து வருகிறார்கள். இந்தியா தன்னாலியன்றவளவு உதவி செய்து ஹிட்லரின் துராக்ரகத்தைக் கவிழ்க்க வேண்டுமென்று ஆத்திரப்பட்டாலும், பிரிட்டிஷார் அதை நிறைவேற்றப் போதுமான சௌகரியங்களையும் சந்தர்ப்பங்களையும் இந்தியருக்கு அளிக்காமலிருப்பதால் தான், இந்தியா யுத்த யேற்பாட்டுக்களில் கலந்து கொள்ள முடியாமலிருக்கிறது. இங்கிலாந்து இந்தியாவினிடத்து இப்போது கொண்டுள்ள மனோபாவத்தை முற்றிலும் மாற்றிக்கொள்ள வேண்டுமென்றும், இந்தியா தன்னாலியன்ற முழு உதவியையும் இங்கிலாந்துக்களிக்க, இந்தியர்களிடத்து ஒரு உத்ஸாகத்தையும் மனத்திருப்தியையும், இங்கிலாந்து தன் நடத்தையால் உண்டாக்க வேண்டுவது அவசியம் என்று சங்கம் தீர்மானித்தது. எனினும், தற்காப்பைப் பொறுத்த மட்டில், இந்தியா போதுமான ராணுவ பலத்தையடைவதற்கும், கைத்தொழிலில் முன்னேற்றமடைவதற்கும்,

இந்தியப் பாதுகாப்புப் படைகளைச் சீர் திருத்தியமைப்பதற்கும் வேண்டிய எல்லா நடவடிக்கைகளையும் சங்கம் ஆதரிக்கிறது.

கனம் பண்டித ஹ்ருதயநாத் குன்ஸ்ரூ சங்கத்தின் பிரசிடெண்டாகவும், ஸ்ரீ அமிர்தலால் வி. தக்கர் வைஸ் பிரசிடெண்டாகவும், ஸ்ரீ டி. வி. அம்பேத்கர் காரியதரிசியாவும் தேர்ந்தெடுக்கப்பட்டனர். சங்கத்தின் அங்கத்தினர்கள் அரசியல், பொருள் நூல், கூட்டுறவு, தொழிலாளர் இயக்கம், குடியான இயக்கம், கிராம முன்னேற்றம், ஹரிஜன முன்னேற்றம், சமூக சேவை, சமூகச் சீர்திருத்தம், ஹிந்துஸ்தானச் சாரண இயக்கம், கல்வி, இலக்கியம் பத்திரிகைத் தொழில், கஷ்ட நிவாரணம், போன்ற துறைகளில் உழைத்து வந்தனர்.

ஸ்ரீ குன்ஸ்ரு இந்திய அரசாங்கத்தின் மேல் சட்டசபை அங்கத்தினராயிருந்தார்; நிரந்தர அயல் நாட்டு இந்தியர் கமிட்டியின் மெம்பராகவும் இருந்தார். மகாகனம் ஸ்ரீனிவாச சாஸ்திரியார் அரசியல், கல்வி விஷயமாக அவ்வப்போது பல பிரசங்கங்களைச் செய்தார். ஸ்ரீ எஸ். ஜி. வஸே, பல்டன் சமஸ்தானத்துச் சட்ட சபையின் தலைவராகச் சில காலம் வேலை பார்த்தார்; போர் சமஸ்தானத்து அரசியல் திட்டக் கமிட்டியின் சேர்மனாகவும் இருந்தார். சென்னை அரசாங்கத்தார் மார்வாடி மசோதாவைப் பிரசுரித்தபோது ஸ்ரீ ஆர். சூரிய நாராயணராவும், கே. ஜி. சிவஸ்வாமியும், எஸ். ஆர். வெங்கட்ராமனும் அதற்கனுகூலமாகப் பிரசாரம் செய்து மசோதாவை ஆதரித்தனர். பஞ்சாபில் பொது வியாபார வரிச் சட்டம், பஞ்சாப் நகர ஸ்தாவர சொத்து வரி சட்டம் இவற்றின் குறைகளைப் பற்றி ஸ்ரீ ஹ்ரதத்த சரமா பிரசாரம் செய்தார். ஸ்ரீ பி. கோதண்டராவ் நாகப்பூரிலுள்ள பிச்சையை யொழிக்கும் சங்கத்தின் காரியதரிசியாக விருந்தார்; நாகப்பூர் இம்புரூவமெண்ட்டு டிரஸ்டைப் பற்றிப் பத்திரிகைகளுக்குப் பல கட்டுரைகளையும் எழுதினர்.

ஸ்ரீ சூரியநாராயணராவ் சென்னை கூட்டுறவுக் கமிட்டியின் மெம்பராயிருந்தார். சென்னை கூட்டுறவுப் பத்திரிகைக்கு ஆசிரியராயிருந்தார். ஸ்ரீ என். ஏ. திராவிட் சென்தூர்ஜன கிராம நிலயத்தைக் கவனித்து வந்தார். டாண ஜில்லாவிலுள்ள ஆதிவாசிகளுக் கென்று பிரத்யேகமாக 66 கிராமப் பள்ளிக்கூடங்களை ஸ்ரீ பக்லே, முர்பாத் கிராம நிலயத்தின் காரியதரிசியாயிருந்து நடத்தினர். ஸ்ரீராம சங்கர் மிஸ்ரா சர்கா, கிரி, கிராம ஸ்தாபனங்களையும்; ஸ்ரீ கே. ஸி. சிவஸ்வாமி மாயனூர் கிராம ஸ்தாபனத்தையும், ஸ்ரீ வி. ஆர். நாயனர் கள்ளிக்கோட்டை, தேவதார் மலபார் புனருத்தாரண நிலயத்தையும்; மங்களூர் டிப்ரெஸ் கிளாஸ்ஸ் மிஷனையும்; ஸ்ரீ கே. எஸ். நேகி, கார்வால் ஜில்லா, கோட்டத்வார் கிராம நிலயத்தையும், ஸ்ரீ சியாமசுந்தர மிஸ்ரா ஒரிஸ்ஸாவில் உள்ள டங்கி, சௌத்வார் கிராம நிலயங்களையும் நடத்தி வந்தார்கள்.

ஸ்ரீ கே. ஸி. சிவஸ்வாமி தமிழ் நாடு ஜமீன் குடியான சங்கத்தையும் கிருஷ்ணராயபுரம் விவசாயக் குடியான சங்கத்தையும் நாயனர் பள்ளிக்கோட்டை டைல் பேக்டரி தொழிலாளக் சங்கத்தையும் நடத்தி வந்தார்கள்.

ஸ்ரீ குன்ஸ்ரு சேவா சமிதியின் பொதுக் காரியதரிசியாயிருந்தார். ஸ்ரீ சூரிய நாராயணராவ், தென்னிந்தியச் சுகாதாரச் சங்கத்தின் காரியதரிசியாகவும் ஸ்ரீ வெங்கட்ராமன் சென்னைச் சுகாதார க்ஷேமலாப சங்கத்தின் காரியதரிசியாகவும் இருந்து மேற்படிச் சங்கங்களை நடத்தி வந்தனர்.

ஸ்ரீ குன்ஸ்ரு ஹிந்துஸ்தான் சாரணச் சங்கத்தின் தேசீயக் கமிஷனராகவிருந்தார் வாஜ்பேய் நிர்மாணக் கமிஷனராகவும் ஸ்ரீ. எஸ். ஆர். வெங்கட்ராமன் சென்னைத் தலைமைக் காரியாலயக் கமிஷனராக இருந்து தமிழில் சாரணப் புத்தகங்களை எழுதியும் சாரணம் பிரசாரம் செய்தும் வந்தார். ஸ்ரீ. சூரியநாராயணராவும் நாயனரும் சிவஸ்வாமியும் இச் சாரண இயக்கத்தில் கலந்துகொண்டனர்.

ஸ்ரீ கே. ஜி. லிமே, மராட்டிய தினசரியான ஞானப்பிரகாசின் ஆசிரியராயும் ஸ்ரீ ஏ. டி. மணி ஹிதவாதாவின் ஆசிரியராகவுமிருந்து இப்பத்திரிகைகளை நடத்தி வந்தார்கள்.

# நேஷனல் இன்ஷ்யூரென்ஸ்

பிரபல இன்ஷ்யூரென்ஸ் கம்பெனிகளின் வருஷாந்தர அறிக்கைகளைக் கவனித்தால், இன்ஷ்யூரென்ஸ் வியாபாரம் யுத்தத்தினுல் மிகுந்தவளவு குறைந்திருக்கிறது என்பது விளங்கும். ஆனால் சென்ற ஒரு வருஷமாக இன்ஷ்யூரென்ஸ் வியாபாரம் யுத்தத்துடன் போர் செய்து சற்றே முன்னுக்கு வந்திருக்கிறது என்பதற்கு அறிகுறிகள் காணப்படுகின்றன. அப்படி யுத்தத்தினுல் புதிய வியாபாரம் குறைந்திருந்தாலும், அதனுல் பெரிய இன்ஷ்யூரென்ஸ் கம்பெனிகளின் கொள்கையோ, அந்தஸ்தோ கொஞ்சம்கூட மாறவில்லை என்றே சொல்லலாம். பல பிரபல இன்ஷ்யூரென்ஸ் கம்பெனிகளின் 1940 வருஷ அறிக்கையில், அவை யுத்த சிரமங்களை எல்லாம் பட்டுத் தேறிவிட்டன என்பது நன்கு விளங்குகிறது. வருமானத்துக்கும், நிதிக்கும் வருஷா வருஷம் சேரும் தொகை குறையாமல் சேர்ந்து வருகிறது. இன்னும் கம்பெனிகளின் செல்வப்பெருக்கும் நன்கு தெரிகிறது. 1940 வருஷத்தில் நேஷனல் இன்ஷ்யூரென்ஸ் கம்பெனியின் அறிக்கை இவ்வித விசேஷ அம்சங்களைக் காட்டுகின்றன. இவ்வறிக்கை, யுத்த காலத்திலும் நேஷனல் இன்ஷ்யூரென்ஸ் கம்பெனியின் விசேஷ அபிவிருத்தியையே காட்டுகிறது—அதுவும் 44 வது வருஷத்தில். இது எல்லா இன்ஷ்யூரென்ஸ் கம்பெனிகளின் அபிவிருத்தியையும் பிரதிபலிக்கிறது என்பது மிகையாகாது. 1940-ல் நேஷனல் இன்ஷ்யூரென்ஸ் கம்பெனி ரூ. 1.88 கோடித்தொகைக்கு, இன்ஷ்யூர் செய்யப்பட்ட 9268 ப்ரொபோஸல்களில், ரூ. 1.57 கோடி மதிப்புள்ள 77,69 ப்ரொபோஸல்களை ஆமோதித்தன. அவற்றின் கட்டண வருஷ வருமானம் ரூ. 8098021—13—0 இன்வெஸ்ட்மெண்ட் வருமானம் ரூ. 14,28,338-10-1 விருத்தியாயிருக்கிறது என்பது ஆயுள் தொகையிலிருந்து தெரிகிறது. மொத்தம் ப்ரிமியம் வருமானம் இவ்வருஷத்தில், முந்தின வருஷத்தைக்காட்டிலும் 3½ லக்ஷம் அதிகமாயிருக்கிறது. கம்பெனியின் ஆயுள் நிதி ரூ. 346 கோடிக்கு விருத்தியாயிருக்கிறது. இதுபோன்ற இன்னும் பல விருத்தியம்சங்கள் அறிக்கையில் தென்படுகின்றன. யுத்தகாலத்திலும் இவ்வித விசேஷ விருத்தியடைந்திருக்கிற இக்கம்பெனி இன்னும் சிலகாலத்தில் மிக்க அபிவிருத்தியடையும் என்று எதிர்பார்ப்பது தவறுதலாகாது.

210079

(50-ம் பக்கத் தொடர்ச்சி)

டாக்கும் என்று நினைப்பதில்லை. ஆகையால்தான் அநேக டவுன்களிலும், கிராமங்களிலும் பால் வியாபாரம் செய்கிறவர்கள் பல சூதுமார்க்கம் கண்டுபிடித்துப் பாலுடன் அநேக மாவுகளும், ஜலமும் கலந்து ஏமாற்றிப் பணத்தைப் பறிப்பதுடன் அந்தப் பாலை உட்கொள்ளும் குழந்தைகளும், பெரியவர்களும் அஜீரணத்தையும் ஈரல்கட்டி முதலிய வியாதிகளையும் விருத்திசெய்கிருர்கள். தற்காலம் மாடுகளின் வருஷாந்திர எண்ணிக்கையை கவனித்தால், சாதாரணமாக ஒவ்வொரு குடும்பத்திற்கும் ஒரு மாட்டிற்கு குறைவில்லாமல் இருக்கும். ஆனால் கிராமங்களிலும் பெரிய பட்டணங்களிலும் அநேகமாக சிலர்களிடந்தான் அதிக மாடுகள் இருக்கும். பெரும்பான்மையோர்கள் பால் வாங்குபவர்கள்தான். முதலில் இந்த வழக்கம் ஒழியவேண்டும். ஒவ்வொரு குடும்பத்திலும் ஒரு கறவை மாடாவது வைத்துக்கொள்வது பழக்கத்திற்கு வந்தால், கூடிய சீக்கிரத்தில் நமது தேசத்தில் கால்நடைகள் விருத்திக்கு வரும்.




LEVER BROTHERS (INDIA) LIMITED

S. 24-511 TM



நாகரிகத்திற்கு
எடுத்தது மைசூர் ஸில்க்
ஆடைகள்தான். இவ்
வழகிய ஸில்க் ஆடை
கள் 100-க்கு 100 சுத்த
மானவை. மற்றவை
களைக் காட்டிலும் மேல்;
நீண்ட காலம் உழைக்கக்
கூடியவை.

**மைசூர் சில்க்**

**ஆடைகள்**

பல கலர்கள் கொண்ட ரகங்
கள் விற்பனைக்குத் தயாரா
யிருக்கின்றன. இன்றைக்கே
போய்ப்பார்க்கச்சொல்லுங்கள்

**கவர்ன்மெண்ட் ஸில்க் வீவிங் பாக்டரி,**

**மைசூர்.**

சரக்குகள் கிடைக்குமிடம் :—

**தி மைசூர் ஆர்ட்ஸ் & க்ராப்ட்ஸ்,**

**1-11, மௌண்ட் ரோட்டு, மதராஸ்**


*Edited & Published by K. S. Venkataramani at No. 12, Brindaban Street, Mylapore, Madras.*
*Printed by T. K. Venkatesan at The Jupiter Press, 16, Sembudoss Street, G. T. Madras.*